விலை ரூபா 20.00


ஐ.நா.கடும் கண்டனம்
பக்கம் 09


அரசை மிரட்டவில்லை
பக்கம் 10


கொலை மிரட்டல்
பக்கம் 17


திணறும் கங்காருகள்
பக்கம் 23

www.onlineuthayan.com

பக்கங்கள் : 34

# உதயன்

சுடர் 27
கதிர் 151

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 13 புதன்கிழமை (25/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## துப்பாக்கிகளுடன் இருவர் கைது

நாவலபிட்டி - மேல் ரம்புக் கெட்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது துப்பாக்கிப் பாகங்களை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நாவலபிட்டிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார். இதேவேளை, காலி யக்கல முல்ல- மினுவன்தெனிய பகுதியில் உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கி மற்றும் ரி-56 ரக ரவைகள், கட்டுத்துவக்கு என்பவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக யக்கல முல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## கஞ்சாவுடன் மன்னார் இளைஞர் கைது

கேரளக் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களுடன் மன்னார் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்துப் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 9 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா மற்றும் 890 கிராம் வெள்ளைநிற குடு போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

## துருக்கிக்கான முதல் தூதுவர் நியமனம்

துருக்கியுடனான நட்புறவை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இலங்கை துருக்கிக்கான முதலாவது தூதுவரை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகரான மறைந்த மனோ விஜேரத்னவின் மகன் பார்த்தி விஜேரத்ன துருக்கிக்கான இலங்கைத் தூதுவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். பார்த்தி விஜேரத்ன இதற்கு முன்னர் துருக்கிக்கான இலங்கையின் கொன்சுலர் ஜெனரலாகப் பதவி வகித்து வந்தவராவார். 2008ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி துருக்கிக்கு பயணம் செய்ததை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு வலுவடைந்துள்ளது.

## ஓமந்தையில் விபத்து 7 பேர் காயம்

மொனராகலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஓமந்தை மாணிக்க இலுப்பைக்குளம் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டுத் தடம் புரண்டதில் அதில் பயணித்த 7 பேர் காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மொனராகலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஓமந்தை மாணிக்க இலுப்பைக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இதனால் பஸ்ஸில் பயணித்த 7 பேர் காயமடைந்தனர்.

# மனித உரிமை மீறல்களுக்கு தீர்வுகாண சரியான நேரம் இது

### மஹிந்தவிடம் பான் கீ-மூன் வலியுறுத்து

கொழும்பு, ஏப்ரல் 25
நாட்டின் மனித உரிமைகள் குறித்த பிரச்சினைகளுக்கு இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்வு கண்டாகவேண்டும்; அதற்கான சரியான நேரம் இதுதான் என்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி இருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான் கீ - மூன்.

இந்தியாவுக்கான தனது மூன்று நாள்கள் பயணத்தை இன்று ஆரம்பிக்கும் பான் கீ - மூன், அதற்கு முன்பாக நேற்று பி.ரி.ஐ. செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் தான் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் பான் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையில் இலங்கை தொடர்பாக 04

## 13 பிளஸ் அரசின் நிலைப்பாடு என்ன?

கொழும்பு, ஏப்.25
13 பிளஸ் தீர்வுத் திட்டம் தொடர்பில் அரசின் உண்மையான நிலைப்பாடு என்ன? அவற்றை ஏற்றுக்கொள்கிறதா? இல்லையா? இதனை அரசு வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அரசிடம் முறையான வேலைத் திட்டமோ பொறி 04

**தம்புள்ள புனித பிரதேசமே அல்ல!**

# பள்ளிவாசலை அகற்றினால் விளைவுகள் பாரதூரமாகும்!

### அரசை எச்சரிக்கிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, ஏப்.25
''தம்புள்ள பள்ளிவாசல் அகற்றப்படக்கூடாது என்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கிறது. பள்ளிவாசலை அங்கிருந்து அகற்றினால் அரசு சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் பெரும் விளைவுகளை, பாரதூரமான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும். தம்புள்ளை புனிதப் பிரதேசத்திற்குள் பள்ளிவாசல் இருக்கிறது எனக் கூறப்படுவதை நான் முற்றுமுழுதாக நிராகரிக்கிறேன். அப்படி எந்த இடத்திலும் எழுதப்படவில்லை; வரையறுக்கப்படவுமில்லை. தம்புள்ளவில் இவர்கள் கூறும் இடம் புனிதப் பிரதேசமே அல்ல''
- இவ்வாறு 04



## பட்டப் பகலில் இளைஞர் வீதியில் அடித்துக் கொலை

### வதிரிச் சந்தியில் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஏப்.25
வடமராட்சி வதிரிச் சந்திக்கு அண்மையில் நேற்றுப் பட்டப்பகலில் நட்ட நடு வீதியில் இளைஞர் ஒருவர் இனம்தெரியாதவர்களால் கோரமான முறையில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டார்.

தொண்டமானாறு கொத்தியாலடிப் பகுதியைச் சேர்ந்த சிவஞானம் சிவரூபன் (வயது-26) என்ற இளைஞரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கோரச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் 04

# போர்க்காலத்தில் பற்றரிகள் கடத்தியவர்களுக்குச் சிறை

### போர் முடிந்து 3 ஆண்டுகளாகையில் தண்டனை

வவுனியா, ஏப். 25
போர்க் காலத்தில் பற்றரியைக் கடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கு போர் முடிந்து 3 ஆண்டுகளாகும் நிலையில் 3 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது வவுனியா மேல் நீதிமன்றம்.

இலங்கமுத்து சரவணகுமார் மற்றும் டொமினிக் ஸ்ராலின் ஆகிய இருவருக்குமே தலா மூன்று மாதச் சிறைத்த தண்டனையும் 5,000 ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டிருந்தது.

போர்க் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு பற்றரிகளை எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்த நிலையில் 2007 ஜனவரி 29ஆம் திகதி இவர்கள் இருவரும் 7,680 பற்றரிகளுடன்படகில் சென்று 04

## ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சி

கொழும்பு, ஏப்.25
அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் தொடக்கம் இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்க்கான கொடுப்பனவுகளை 04

# பிள்ளையார் கோயிலை அகற்ற சம்பந்தன் எதிர்ப்பு

**அரச உயர்மட்டத்துடன் பேசத் தீர்மானம்**



கொழும்பு, ஏப்.25
திருகோணமலை பொது வைத்திய சாலை வளாகத்தினுள் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலின் சட்டவிரோத கட்டட அமைப்புகளை அகற்றுவதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் தொடர்பில் எதிர்வரும் தினங்களில் அரச உயர் மட்டத்தினருடன் முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தார். 04

# ஐ.நா. மீளாய்வுக் கூட்டத்தில் மூதூர் படுகொலை அறிக்கை

ஜெனிவா, ஏப்.25
ஐ.நா மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத் தொடரில் மூதூர் தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் படுகொலை தொடர்பான அறிக்கை ஒன்றை, பிரான்ஸைத் தளமாகக் கொண்ட ''அக்ஷன் பெய்ம்'' எனப்படும் பட்டினிக்கு எதிரான நிறுவனமும், ''ஸ்பீக்'' எனப்படும் மனித உரிமைகள் அமைப்பும் இணைந்து கையளிக்கவுள்ளன.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 "அக்ஷன் பெய்ம்" பணியாளர்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்கு முட்டுக்கட்டை போடப்படுவதைக் கண்டிக்கும் வகையிலும், இந்த வழக்கில் இலங்கை அதிகாரிகள் நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளதைக் 04

# பங்களாதேஷை தனிநாடாக்கியது போன்று தமிழீழம் அமையவும் இந்தியா உதவ வேண்டும்

### கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஏப்.25
பாகிஸ்தானில் இருந்து பிரித்து பங்களாதேஷை உருவாக்கியது போன்று இலங்கைத் தமிழர்கள் தமிழீழம் அமைப்பதற்கும் இந்திய மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என தி.மு.க., தலைவர் கருணாநிதி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது:

தனி ஈழம் தவிர இலங்கைத் தமிழ் மக்கள் வேறு எதனையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு தமிழகத்துடன் இராஜதந்திர உறவு அவசியம்

## அமைச்சர் டியூ ஆலோசனை

கொழும்பு, ஏப்.25

புதுடில்லியைவிட தமிழகத்துடனான இராஜதந்திர உறவுகளை இலங்கை ஊக்குவிக்க வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நிகழ்த்திய லலித் அத்துலத்முதலி நினைவு சொற்பொழிவின்போதே அவர் இவ்வாறு கூறினார்.



தமிழகத்துடன் சிறந்த உறவை விருத்தி செய்வ தன் முக்கியத்துவத்தை கடந்த கால அரசுகளோ தற்போதைய அரசோ உணரவில்லை எனவும் அதனால் தமிழக முதலமைச்சர் எவரும் சுதந்திரத்தின்பின் இலங்கைக்குப் பயணம் செய்யவில்லை எனவும் இலங்கை அமைச்சர்கள் எவரும் தமிழகத்துக்குப் பயணம் செய்ததில்லை எனவும் அமைச்சர் டியூ குண சேகர கூறினார்.

மொழி, கலாசாரம் உட்பட பல விடயங்கள் இலங்கையின் வட பகுதியிலுள்ள மக்களுக்கும் தமிழகத்திலுள்ள மக்களுக்கும் இடையில் பொதுவானவையாக உள்ளன என்பதை இலங்கை உணரத்தவறிவிட்டது என அவர் கூறினார். தமிழகத்துக்கும் யாழ்ப் பாணத்துக்கும் இடையே 20 மைல்கள் மாத்திரமே இடை வெளி உள்ளது என்பது உட்பட பூகோளவியல் விடயங் களையும் அவர் சுட்டிக்காட் டினார்.

அதேவேளை, உலக மயமாக்கலின் யதார்த்தத் தின் கீழ் இலங்கை தனது அயல் நாட்டை புறக்கணித்துவிட முடியாது எனவும் அவர் கூறினார்.

அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றத் தூதுக் குழுவானது இந்தப் பயணம் முழு வதும் இந்தியாவின் தேசிய நலன்களுக்காகச் செயற்பட்டமை இலங்கைக்கு ஓர் முன்னுதாரணம் எனவும் அமைச்சர் கூறினார். இந்தியப் பிரதமரின் பாத்திரத்தை இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் வகித்ததாக அவரிடம் தான் கூறியதாக அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வான் வழியாக இந்தியா உதவிப் பொருள்களை வழங்கத் தீர் மானித்தபோது லலித் அத்துலத்முதலி அதை எவ்வாறு இராஜதந்திர ரீதியாகக் கையாண்டார் என்பதையும் அமைச்சர் குணசேகர நினைவு கூர்ந்தார். (த)

# இலங்கைக்கு தென்கொரியா 200 மில்லியன் டொலர் உதவி

இலங்கைக்கு 200 மில் லியன் அமெரிக்க டொலர் அபிவிருத்திக் கடன் உத வியை வழங்கவுள்ளதாக தென்கொரிய நிதியமைச்சர் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றின் கீழ் தென் கொரியாவின் பொருளாதார அபிவிருத்திக் கூட்டுறவு நிதியத்திலிருந்து கிடைக்க வுள்ள இந்த நிதியானது கல்வி, சுகாதார நிகழ்வுகள் விவசாயம், பொது வேலைத் திட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கு பயன்படுத்தப்பட வுள்ளது.

இதேவேளை, இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதாரம் மற்றும் ஏனைய கூட்டுறவு நடவடிக்கைகளை பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தென்கொரிய ஜனாதிபதி லீ மையூங் பேக்கும் நேற்று செவ்வாய்க்கிழமை மாநாடொன்றில் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரம் நிலையான வளர்ச்சி கண்டுள்ளதுடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் அங்கு அரசியல் நிலைமை முன்னெடுக்கப்படுமெனவும் லீ மையூங் பேக் கூறினார். இரு நாடுகளுக்குமிடை யிலான உறவை வலுப்படுத் தும் நோக்கில் இருவருடங்களுக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்ட யானைகளுக்கும் அவர் தனது நன்றியை இதன்போது தெரிவித்துக்கொண்டார்.

தென்கொரியாவின் பொருளாதாரத்திற்காக 200,000 இலங்கைத் தொழிலாளர்கள் பங்களிப்புச் செய்ததாகவும் அவர்கள் தென்கொரிய வர்த்தகர்களின் அன்புக்குரியவர்கள் எனவும் லீ மையூங் பேக் கூறினார். (த)

# இலங்கையில் முதற்தடவையாக பாரிய சரக்குக் கப்பல் நிர்மாணம்

கொழும்பு, ஏப்.25

இலங்கை கப்பல் கட்டும் வரலாற்றில் பாரிய சரக்கு மற்றும் பயணிகள் கப்பல் ஒன்றை நிர்மாணித்து வருகிறது.

இதில் 400 பயணிகளும், 250 தொன் கொள்கலன்களையும் ஏற்றிச் செல்லும் வல்லமையுடன் இந்த பாரிய கப்பல் இந்தியாவில் இயங்கும் ஐக்கிய லக்க்ஷத்திவீப் வலயநிர்வாகத்தால் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

குறித்த கப்பல் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததும் கொச்சின் மற்றும் லக்க்ஷத்திவீப் தீவுகளுக்கு இடையிலான கடல் வழிப் போக்குவரத்துச் சேவைகள் மேம்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இரண்டு யான்மார் இயந்திரங்களால் வலுவூட்டப்படவுள்ளது. இது தவிர, சுவீடன் தயாரிப்பான கட்டுப்பாட்டு அமைப்புகளும் அதில் பொருத்தப்படவுள்ளன.

அவற்றுக்கு மேலாகப் பயணிகளுக்குத் தேவையான அலுவலக அறை, தனியான ஓய்வறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் 10 உயர்தர சொகுசு வகுப்புகளும், 450 சொகுசு வகுப்புகளும், 350 சாதாரண சொகுசு அறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (த)

# அநாகரிகமாக நடந்திருந்தால் உதுலை கைது செய்யலாம்

கொழும்பு, ஏப்.25

வனாத்தமுல்லையில் சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டமைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான உதுல் பிரேமரட்ண ஆத்திரமூட்டும் வகையில் செயற்பட்டிருந்தால் அவரைப் பொலிஸார் கைதுசெய்ய முடியும் என கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

நீதிமன்றில் முன்னிலையாகிக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்குமாறு உதுல் பிரேமரட்ணவுக்கு அறிவித்தல் அனுப்புமாறு கோரி பொரளை பொலிஸார் விடுத்த கோரிக்கையை அடுத்தே நீதிவான் இவ்வாறு கூறினார்.

வனாத்தமுல்லையில் கடந்த 22 ஆம்திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பதிவுசெய்யப்பட்ட வீடியோக் காட்சிகளை சமர்ப்பிக்குமாறும் பல்வேறு ஊடக நிறுவனங்களுக்கு நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு ஜூலை 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இன்று முதல் பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஏப்.25

நாடு முழுவதும் இன்று புதன்கிழமை தொடக்கம் தொடர்ச்சியாக பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சீருடை கொடுப்பனவு 15,000 ரூபா வழங்குதல், எரிபொருள் கொடுப்பனவு 7,500 ரூபா வழங்குதல் மற்றும் அலுவலக கொடுப்பனவாக நகர அடிப்படையில் 2500 ரூபாவும் கிராம அடிப்படையில் 2000 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்பதே இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் மூன்று கோரிக்கைகளாகும். (த)

# 11 எருமைகள் சாவு

கொழும்பு, ஏப்.25

பங்கதெனிய, தெமட்டபிட்டிய சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வேகமாகச் சென்ற கொள்கலன் வாகனமொன்று மோதியதன் காரணமாக 11 எருமை மாடுகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இரு எருமை மாடுகளின் கால்கள் முறிவடைந்து படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சிலாபத்திலுள்ள ராஜகடலுவ பலுகஸ்வெவ தோட்டத்திலுள்ள எருமை மாடுகள் நெரிபட்டு வீதிக்கு வந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)


Wanted Journalist

We are looking for a Journalist, with a minimum experience of five years, competent equally in English and Tamil. Should be proficient enough in translation from English to Tamil and viceversa. Candidates who had worked in print or electronic media will be given preference. Should be within the age limit of 30 to 50 years.

Selected candidate should be willing to work with the editorial team and be enthusiastic and co-operative.

Apply with full bio-data and copies of testimonials before 25th April 2012 to:

Chief Editor,
New Uthayan Publications (pvt.) Ltd,
361. Kasthuriyar Road,






சுதந்திர ஊடகக் குரல் நடத்தும்



புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்

'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களுக்குத் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.

புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்படவேண்டும்.
ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின்

Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புபவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

1 10,000/=
2 7,000/=
3 5,000/=
10 படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.



தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களில் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும் பரிசுகள் வழங்கப்படும்

சுதந்திர ஊடகக் குரல்
இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

விளம்பர அனுசரணை:
லக்ஷ்மி ஓகனைசேசன்
23/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இன்னும் 33,208 வீடுகள் தேவை

## மாவட்ட செயலகம் மதிப்பீடு

*யாழ்ப்பாணம், ஏப்.25*

***யாழ். மாவட்டத்தில் இதுவரை 27 ஆயிரத்து 634 வீடுகள் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் இன்னும் 33 ஆயிரத்து 208 வீடுகள் தேவை என யாழ். மாவட்ட செயலகத்தின் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

யாழ். மாவட்டத்தில் போரின் பின்னர் வீட்டுத் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இதில் 60 ஆயிரத்து 842 வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. இதில் அண்மையில் விடுவிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் சேதமடைந்த வீடுகள் கணக்கெடுக்கப்படவில்லை.

இந்திய அரசின் நிதியுதவியுடன் முன்னோடி வீட்டுத் திட்டத்தில் 150 வீடுகளும், இரண்டாம் கட்டத்தில் 9 ஆயிரம் வீடுகளும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வீடமைப்புத் திட்டத்தில் 13 ஆயிரத்து 350 வீடுகள் முற்றாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மீள்குடியேற்ற அமைச்சினால் 100 வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக 585 வீடுகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக 2 ஆயிரத்து 538 வீடுகளும், இலங்கை இராணுவத்தின் மூலம் ஆயிரத்து 700 வீடுகளும், வங்கிகள் ஊடாக 211 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இன்னமும் 33 ஆயிரத்து 208 வீடுகள் தேவை என்று இனங்காணப்பட்டுள்ளது. இதனை விட உண்மையில் அதிகளவான வீடுகள் தேவையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# கஞ்சா விற்ற இருவர் சுன்னாகத்தில் கைது

வலி. வடக்கு ஏப் 25

சுன்னாகம் பஸ்நிலையப் பகுதியில் கஞ்சா விற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவர் அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சுன்னாகம் பகுதியில் தேனீர்க் கடை ஒன்றில் பணியாற்றும் முஸ்லீம் இளைஞர் ஒருவர் கஞ்சாவைக் கொண்டு வந்து அந்தப் பகுதியில் நின்ற ஒருவரிடம் கொடுத்தபோதே அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார், இருவரையும் கைது செய்துள்ளனர்.

இருவரையும் விடுவிக்க முஸ்லீம் வர்த்தகர் ஒருவர் முயன்றதாகவும் அது பின்னர் முடியாமல் போனதாகவும் அந்தப் பகுதியில் நின்ற பொது மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஏற்கனவே சுன்னாகம் புதிய கட்டடத் தொகுதியில் கஞ்சா விற்பனை செய்த ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-15-86)

# குழந்தை யேசு சொரூபத்தில் தங்க நகைகள் திருடிய நபர்

## ஒரு வருட கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.கோயில் வீதியிலுள்ள குழந்தை யேசுகோயிலில் சொரூபத்தில் இருந்த 26 பவுண் தங்க நகைகளைத் திருடிய குற்றவாளிக்கும், உடந்தையான நகைத் தொழிலாளிக்கும் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தது யாழ். நீதிமன்றம்.

கடந்த நவம்பர் மாதம் சம்பவம் இடம் பெற்றது. இரவு வேளை கோயில் பூட்டும் நேரத்தில் அங்கு நுழைந்து மறைந்து இருந்து விட்டான் திருடன். பின்னர் சொரூபம் வைக்கப் பட்டிருந்த கண்ணாடியை உடைத்து அதிலிருந்த 26 பவுண் நகைகளையும் திருடிச் சென்றுவிட்டான்.

யாழ்.பொலிஸில் சம்பவம் தொடர்பாக முறையிடப்பட்டிருந்தது. சந்தேகத்தில் மடத்தடியைச் சேர்ந்த ஒருவரையும், திருடிய நகைகளைக் கொள்வனவு செய்த நகைத் தொழிலாளி ஒருவரையும் பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியிருந்தனர். விளக்கமறியலில் வைக்கப்பட்ட இருவரும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நகைகளைத் திருடியவர் 6 மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார். இவர் திருடிய நகைகளை யாழ்.நகரிலுள்ள நகைத் தொழிலாளி ஒருவரிடம் விற்பனை செய்துள்ளார். இருவரும் முன்னர் பாடசாலை நண்பர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. தனது நண்பன் என்பதனால் நகைகளைத் தான் கொள்வனவு செய்ததாக நகைத் தொழிலாளி மன்றில் தெரிவித்திருந்தார். சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஆஜராகியிருந்தார்.

''குற்றவாளிகள் இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொள்கின்றனர். இருவருக்கும் வேறு எந்த நீதிமன்றிலும் வழக்கு இல்லை. வறுமையினால் திருட்டில் ஈடுபட்டதாகக் கூறுகின்றனர். எதிர்காலத்தில் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடப் போவதில்லையென அவர்கள் தெரிவிக்கின்றனர்'' என சட்டத்தரணி மன்றில் தெரிவித்திருந்தார்.

இதனைப் பரிசீலித்த நீதிவான் எச்சரிக்கை செய்து இருவருக்கும் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (த-4)

# மாநகர சபை மக்கள் சந்திப்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும்

யாழ்ப்பாணம்,ஏப்.25

**யாழ்.மாநகர சபை ஆளும் கட்சியினர் வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் பொதுமக்கள் சந்திப்பை நடத்தி வருகின்றனர். சபையின் முதல்வர், ஆணையாளர், செயலாளர் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இணைந்தே இந்தப் பொது மக்கள் சந்திப்பை நடத்தி வருகின்றனர்.**

யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் வாரந்தோறும் நடைபெறும் பொதுமக்கள் குறை நிறைகளைக் கேட்கும் சந்திப்பில் இனிமேல் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் இந்த வருடத்துக்கான நான்காவது நிதிக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன் போதே எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் மக்கள் சந்திப்பில் பங் கேற்பதற்கு அனுமதிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாநகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும் சபையின் நிதிக்குழு உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம் முன்வைத்த கோரிக்கையை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

யாழ்.மாநகர சபை ஆளும் கட்சியினர் வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் பொதுமக்கள் சந்திப்பை சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தி வருகின்றனர். சபையின் முதல்வர், ஆணையாளர், செயலாளர் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இணைந்தே இந்தப் பொது மக்கள் சந்திப்பை நடத்தி வருகின்றனர்.

பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கஷ்டங்கள் என்பனவற்றைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் இதில் இணைத்துக் கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை நிதிக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது. இனிவரும் பொது மக்கள் சந்திப்புகளின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் அழைக்கப்படுவார்கள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-3)

## தென்மராட்சியில் இடி, மின்னல் தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஏப்.25

கைதடிப் பகுதியில் உள்ள ஆலயமொன்றின் கலசம் மீது இடிமின்னல் தாக்கியதில் கலசம் சேதமடைந்து வீழ்ந்ததுடன் இடபச் சிலைகளும் சேதத்திற்கு உள்ளாகின.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கைதடி அருள்மிகு பாலாம்பிகை அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் குறித்த கோபுரத்துக்குக் கீழிருந்த வயோதிப மாது தெய்வாதீனமாக உயிர் தப்பினார். (த-15-288)

* * *

நேற்றுமாலை மீசாலை வடக்கு, கிராம்புவில் என்ற பகுதியில் மின்னல் தாக்கியதில் வீடொன்றின் கூரை பலத்த சேதமடைந்தது. அத்துடன் வீட்டில் இருந்த மின் சாதனங்களும் மின்னலால் பாதிக்கப்பட்டு, எரிந்து நாசமாகியுள்ளன. குறித்த பகுதியைச் சேர்ந்த வீரசிங்கம் சுஜிகரன் என்பவரது வீட்டிலேயே இந்த மின்னல் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (ங-131)

# நிகழ்வுகள் இன்று

முன்பள்ளிப் பிள்ளைகளின் வாசிப்புத்திறன் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையில் தொண்டமானாறு வளர்மதி முன்பள்ளிச் சிறுவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்குமான ஆக்கத்திறன் முகாம் இன்று காலை 9.00 மணிக்கு வல்வெட்டித்துறை வளர்மதி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் குழந்தைகளுக்கான கதை கூறும் நிகழ்வு, ஓவியம் வரைதல், பொருட்கூட்டங்களை இணைத்தல், சொற்களை ஒன்று சேர்த்தல், கணித எண்ணக்கரு, விஞ்ஞான எண்ணக்கரு எழுத்துக்களை இனங்காணல், பெரிய அழகிய புத்தகங்களைப் பார்வையிடுதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற உள்ளன. (த)

* * *

சித்திரக்கலை 10,11 உயர்தரப் பாடத்திட்டத்துக்கு அமைவாக, யாழ்.விக்ரோறியாக் கல்லூரி அதிபர் ஸ்ரீஸ் தொகுப்பில் ஒலி, ஒளி அடங்கலான இறுவட்டுக்கள் வெளியிடும் நிகழ்வு இன்று இடம்பெறும்.

கல்லூரியின் சிவபாதசுந்தரம் கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வுக்கு சிரேஷ்ட எந்திரி வி.உமாபதி பிரதம விருந்தினராகவும் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், நுண்கலைப் பீட விரிவுரையாளர் வை.சிவசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (த)

* * *

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வசந்தபுரம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் திறப்புவிழா முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் வீடுகள், பொது நோக்கு மண்டபங்கள், கிராம அலுவலர் அலுவலகம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையம் என்பன திறந்து வைக்கப்படவுள்ளன. (த-36)

* * *

நல்லூர்ப் பிரதேச சபையின் காணி பயன்பாட்டாளர்களுக்கான கூட்டம் முற்பகல் 11 மணிக்கு நல்லூர்ப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பிரதேச விவசாயக்குழுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது. (த-7)

* * *

வலி. கிழக்கு பிரதேச செயலக விவசாயக்குழுக் கூட்டம் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

* * *

குருநகர், ஏப். 25

யாழ். கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். மரியாள் அ.த.க. பாடசாலையில் இயங்கும் யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் [illegible] அறிவித்துள்ளார். (ஒ-51)

# சொந்த இடம் செல்வதற்காக காத்திருந்து ஏமாந்த மக்கள்

## பச்சிலைப்பள்ளி மேற்கில் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே மீள்குடியமர்வு

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் உள்ள தமது காணிகளில் விரைவில் குடியமர்வு இடம்பெறும். தமது சொந்த இடத்துக்குத் திரும்பி விடுவோமென ஆவலுடன் காத்திருந்த மக்களுக்கு பிரதேசத்தின் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் மீளக்குடியமர்வு இடம்பெறுமென்ற அறிவிப்பு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இதுவரை மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய பகுதிகளில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தன. 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வினால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ளன.

கடந்த 12 வருடங்களாக [illegible] கஷ்டங்கள் [illegible]க்கு மத்தியில் வாழ்ந்து வரும் இந்த மக்களுக்கு கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பிரதேச செயலர் மற்றும் பச்சிலைப் பள்ளி மேற்கு மக்கள் ஒன்றியத்தினர் ஆகியோர் விடுத்த அறிவிப்பு இடம்பெயர்ந்திருந்த மக்களுக்குத் தேனாக இனித்தது.

இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள மீளக்குடியமர்வு தொடர்பாகப் பதிவினை மேற்கொள்ளுமாறு விடுத்த அறிவிப்பினையடுத்து ஒரு வாரத்திற்கிடையில் சுமார் 400 குடும்பங்கள் தமது விவரங்களை அந்தந்த கிராம அலுவலர்களிடம் பதிவு செய்தன.

தமது பிரிவுக்கு மீளக்குடியமர்வதற்கான திகதி அறிவிக்கப்படுமென ஆவலுடன் காத்திருந்த வேம்பொடுகேணிப்பிரிவின் இந்திராபுரம், இத்தாவில் பிரிவின் அம்பளாவளை, முகமாலைப் பிரிவின் முகமாலை, மடத்தடி, சி.கணபதிப்பிள்ளை குடியிருப்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இத்தாவில் பிரிவின் சதாபுரம் உள்ளிட்ட முருகமூர்த்தி கோயில், பார்பரம்மா தேவாலயம், வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை ஆகிய பகுதிகளிலும், வேம்பொடுகேணி பிரிவின் நவுணவெளி பிரிவு ஆகிய பகுதிகளிலும் மட்டுமே மீளக்குடியமர்வு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டதால் அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தற்போது தங்கியுள்ள பகுதிகளில் அனுபவித்து வரும் சிரமங்களைத் தவிர்க்கத் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர்வைத் துரிதப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்ஷய திருதியை நாளான நேற்று யாழ். நகரில் உள்ள நகைக் கடைகளில் தங்க நகைகளை வாங்குவதற்கு ஏராளமானவர்கள் முண்டியடித்தனர். நகரிலுள்ள அனைத்து நகைக் கடைகளிலும் வாடிக்கையாளர்கள் நிறைந்து காணப்பட்டனர். நகைகளை வாங்குவதில் பெண்களே கூடுதலாக ஆர்வம் காட்டினர். (ஒ)

## ஐ.நா. மீளாய்வுக் கூட்டத்தில் மூதூர் படுகொலை அறிக்கை

01↘ சுட்டிக் காட்டும் வகையிலும், இந்த அறிக்கை அமையவுள்ளது.

மூதூர் படுகொலைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும், இலங்கை அதிகாரிகள் குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடிக்கவோ, சட்டத்தின் முன் நிறுத்தவோ இல்லை. இந்த விடயத்தில் இலங்கை நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளதை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் கூறவுள்ளது.

நீதித்துறையின் மீதான அரசியல் தலையீடுகள் மற்றும் வெளிப்படைத் தன்மையில் உள்ள குறைபாடுகள் என்பனவற்றை இலங்கைத் தரப்பில் உள்ள தவறுகளாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டவுள்ளது.

இந்த அறிக்கை வரும் நவம்பர் 1ஆம் திகதி ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கைக்குக் கடும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. (த)

## பங்களாதேஷை தனிநாடாக்கியது போன்று தமிழீழம் அமையவும் இந்தியா உதவ வேண்டும்

01↘ இலங்கை அரசு பலமுறை வாக்குறுதி அளித்த அரசியல் தீர்வோ அல்லது அதிகார பரவலாக்கமோ இதுவரையும் நடைமுறைக்கு வரவில்லை. அவை வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளன.

கொடுத்த உறுதிமொழிகளை இலங்கை நிறைவேற்றவில்லை. காலங்காலமாக தமிழர்களை ஏமாற்றுவதிலேயே இலங்கையில் ஆட்சிக்கு வருவோர் காலத்தைக் கடத்துகின்றனர். ஆனால் அங்குள்ள தமிழர்கள் அகதிகளாக மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். பல நூற்றாண்டுகளாக நீடிக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனி ஈழம் அமைப்பது தான். இதனை நிறைவேற்ற காலம் வந்து விட்டது.

பாகிஸ்தானில் சிறைப்பட்டிருந்த பங்களாதேஷை தனி நாடாக உருவாக்க இந்தியா உதவியது போல் தமிழீழம் அமையவும் உதவி செய்ய வேண்டும். தென் சூடான், கிழக்கு திமோர், மோன்டென்க்ரோ போன்ற நாடுகள் ஐ.நா.,வின் உதவியால் புதிதாக தோன்றின. அது போல விரைவில் தனி ஈழமும் மலரும்-என்றார். (ங)

## போர்க்காலத்தில் பற்றரிகள் கடத்தியவர்களுக்குச் சிறை

01↘ கொண்டிருந்தபோது தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்று பொலிஸாரால் மன்றில் முன்னிறுத்தப்பட்டிருந்தனர்.

வடமாகாண அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் அனுமதி பெறாமல் பற்றரிகளை எடுத்துச் சென்றார்கள் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. 5 வருடங்களாக விசாரணைகள் நடைபெற்று வந்திருந்த நிலையில், நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேகநபர்கள் இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர்.

அவர்களுக்கு 3 மாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமதி விஸ்வலிங்கம் தீர்ப்பளித்தார். (உ-30)

## பிள்ளையார் கோயிலை அகற்ற சம்பந்தன் எதிர்ப்பு

01↘ பிள்ளையார் கோவிலை அகற்றுவது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை விடுத்திருக்கும் பணிப்புரை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த விவகாரம் குறித்து எனக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து நான் மேற்படி பிள்ளையார் கோவிலுக்கு நேரடியாகச் சென்று அங்கு நிர்வாக சபையினருடன் பேசினேன். கோயிலின் ஒருபகுதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சில சட்டதிட்டங்களை மீறி அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நான் தொகுதி மக்களைச் சந்திப்பதற்காக இப்போது திருகோணமலையில் தங்கியிருக்கிறேன். ஓரிரு நாட்களில் நான் கொழும்பு சென்றவுடன் இது விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்துவேன். இதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணப்படும்.- என்றார் சம்பந்தன் எம்.பி.

## மனித உரிமை மீறல்களுக்கு தீர்வுகாண சரியான நேரம் இது

01↘ நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து அவரிடம் கேட்டபோது, இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதை உத்தரவாதப் படுத்துவதற்கும் அது தொடர்பான விசாரணைகள் பகிரங்கமாக, பக்கச்சார்பற்ற வகையில் நடப்பதை உறுதிப் படுத்துவதற்கும் தீர்மானம் மிக முக்கியமானது என்றார்.

''மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானக் கவலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்போது மனித உயிர்களுக்கு முதலாவதும் மிக முக்கியமானதுமான முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்'' என்றார்.

''இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவாகவும் நீதியாகவும் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுப்பதற்கு இதுவே மிகச் சரியான தருணம்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியப் பயணத்தின் போது பான், மூத்த அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்து பிராந்திய மற்றும் சர்வதேச விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்துவார். மும்பை, டில்லி ஆகிய நகரங்களுக்கும் செல்லவுள்ளார்.

## ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சி

01↘ அமெரிக்க டொலரில் வழங்குவதில்லை என இலங்கை மத்திய வங்கி முடிவு செய்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்றுக் காலை முதலீட்டாளர்கள் டொலரை வாங்குவதற்கு முண்டியடித்தனர்.

இதனால், நேற்று முன்தினம் மாலை, 131.35 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்றுக் காலை 132.20 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

அமெரிக்க டொலருக்கு எதிராகப் பதிவாகியுள்ள இலங்கை நாணயத்தின் ஆகக் குறைந்த மதிப்பு இதுவேயாகும். ஏற்கனவே, கடந்த மார்ச் 19ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை நாணய மதிப்பு 131.60 ரூபாவாக வீழ்ச்சியைச் சந்தித்தது.

அதன்பின்னர், சற்று நாணய மதிப்பு வீழ்ச்சி தடுக்கப்பட்ட போதும், கடந்த இரு வாரங்களாக மீண்டும் வீழ்ச்சி கண்டுவருகிறது. (த)

## பள்ளிவாசலை அகற்றினால் விளைவுகள் பாரதூரமாகும்!

01↘ நேற்று 'உதய'னிடம் காட்டமாகக் கருத்து வெளியிட்டு அரசுக்கு முன்னெச்சரிக்கை விடுத்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம். தம்புள்ளை பள்ளிவாசல் அங்கிருந்து அகற்றப்படவேண்டுமென எழுந்திருக்கும் சர்ச்சை குறித்து கருத்துவெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தம்புள்ளவில் பள்ளிவாசல் அந்த இடத்திலிருந்து அகற்றப்படுவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. இந்த விடயத்தில் நாம் எமது சமூகத்தின் உணர்வுகளை நிலைநிறுத்தி தெளிவுடன்பிரதிபலிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

60வருடகாலபள்ளிவாசலை எதுவித அடிப்படைக் காரணங்களுமின்றி அகற்ற வேண்டுமெனக் கூறுவது எந்தவிதத்திலும் ஏற்க முடியாது. இது விடயமாக நான் சற்றுமுன்னர் கூட அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைத் தொடர்புகொண்டு கேட்டேன். அவசரப்பட்டுத் தீர்மானங்களை எடுத்து தேவையற்ற சிக்கல்களில் விழுந்துவிடாதீர்கள் என்று நான் தெளிவாகக் கூறியிருக்கிறேன்.

தம்புள்ளையில் இந்தப் பள்ளிவாசல் இருக்கும் இடம் இவர்கள் கூறும் புனித பிரதேசமே அல்ல. அப்படி எங்கும் குறிப்பிடப்படவுமில்லை. எந்தப் புத்தகத்திலும் இந்தப் பிரதேசம் புனித பிரதேசம் என்று குறிப்பிடப்படவில்லை. இதை நான் பொறுப்புடன், ஆதாரத்துடன் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அமைச்சரவையில் நான் இதனை வன்மையாக எதிர்ப்பேன். தம்புள்ளையில் உள்ள சிங்கள மக்கள், மதகுருமார்கள் பலர் இந்தப் பள்ளிவாசல் அங்கு இருப்பதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒருசில பிக்குமார் வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து இந்தக் கைங்கரியத்தில் ஈடுபடுகின்றனர். இதற்குச் சில துவேஷம் மிக்க சிங்கள வானொலி துணை போகின்றது. அதற்கும் மேலாக எமது முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் இதனை நியாயப்படுத்துவது மிகவும் கொடுமையான விடயமாக இருக்கின்றது.

அமைச்சரவையில் நான் இதனைக் கடுமையாக ஆட்சேபிப்பேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் எமது தனித்துவத்தை விட்டுக்கொடுக்க முடியாது. அந்தப் பேச்சுக்கே இடமில்லை. என்ன நினைத்துக்கொண்டு இவர்கள் இப்படி நடந்துகொள்கிறார்கள்? இந்த அரசுக்காக ஜெனிவாவில் போய் வக்காளத்து வாங்கினீர்களே? அதற்கு ஆட்சியாளர்கள் செய்யும் கைம்மாறு இதுதானா என்று கட்சியின் கீழ்மட்டத் தொண்டர்கள் கேட்கும் கேள்வியில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. எல்லாவற்றிற்கும் ஒரு எல்லையுண்டு என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மனதில் இருத்திக் கொள்ளவேண்டும்.

பள்ளிவாசல் அங்கிருந்து அகற்றப்படக்கூடாது; உடைக்கப்படக்கூடாது என்பதில் எமது நிலைப்பாடு மிகவும் உறுதியானது. இந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து முஸ்லிம் அரசியல் பிரமுகர்களும் ஒன்றுபடவேண்டிய தேவையும், கட்டாயமும் இருக்கிறது. நாங்கள் எமது நிலைப்பாட்டை அரசுக்குத் தெளிவாகச் சொல்லிவிட்டோம். அதையும் மீறி அரசு செயற்படுமானால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறோம். என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

## பட்டப் பகலில் இளைஞர் வீதியில் அடித்துக் கொலை

01↘ பதற்றம் நிலவியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வடமராட்சி வதிரிச் சந்திக்கு அருகில் முருகன் கோயிலுக்கு அண்மையில் உடுப்பிட்டி மாலிசந்திப் பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இந்த இளைஞரை மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் பொல்லால் அடித்தும் மோசமாகத் தாக்கியும் படுகொலை செய்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் உள்ள தமது உறவினர் ஒருவருக்கு மதிய உணவை வழங்கிவிட்டுச் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிந்தபோதே இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர் சைக்கிளில் வதிரிச் சந்திக்குச் சமீபமாகப் பயணித்துக் கொண்டிருந்த போது அவரை இடைமறித்த இனம்தெரியாத நபர்கள் அவரை அடித்துக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

இளைஞரின் தலைப் பகுதியிலும் கழுத்தின் பின் பகுதியிலும் ஆழமான காயங்கள் காணப்படுவதாகவும் இவர் வைத்தியசாலையில் உயிரற்ற நிலையிலேயே சேர்க்கப்பட்டதாகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவஇடத்துக்குவிரைந்த நெல்லியடிப் பொலிஸாரும் பதில் நீதிவான் விஜயராணி உருத்ரேஸ்வரனும் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக் கேட்டபோது,

இந்தப் படுகொலை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், குடும்பப் பகை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றிருப்பதாகத் தாம் சந்தேகிப்பதாகவும் கொலையாளிகள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (த-8-15)

## 13 பிளஸ்; அரசின் நிலைப்பாடு என்ன?

01↘ முறையோ இல்லை என்பதனால் இந்திய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இங்கு பயணம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று அரசில் இருக்கின்ற அமைச்சர்களான வாசுதேவ நாயணக்கார, டி.யூ குணசேகர மற்றும் திஸ்ஸ விதாரண போன்றவர்கள் கூறுகின்றனர். எனினும் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் அதற்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர்.

13 பிளஸ் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்திய எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜிடம் உறுதியளித்திருக்கின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த உறுதி மொழியை மறுதலித்துவிடுவாரோ என்ற அச்சம் எம்மிடத்தில் நிலவுகின்றது. அதேபோல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசிடம் முறையான பொறிமுறையும் இல்லை.

தம்புள்ளவில் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இனவாதத்தைத் தூண்டும் வகையிலான சம்பவமாகும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன, மத, மொழி பேதங்களோ கிராமம் மற்றும் நகர பேதங்களோ இல்லை என்பதனால் தொழிலாளர் தினமான மே தினத்தை நாம் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்துகின்றோம்.

அரசு பயணித்துக் கொண்டிருக்கின்ற பாதை அபாயகரமானது. இந்த நிலைமை தொடருமாயின் பிரச்சினை அதிகரிக்கும். இந்திய எதிர்க்கட்சிகள் போல இலங்கையின் எதிர்க்கட்சிகள் ஐக்கியப்படுமாயின் பிரச்சினைக்கு என்றோ தீர்வைக் கண்டிருக்கலாம்.

தமிழ்தேசியக்கூட்டமைப்பு ஈழத்தைக் கேட்கவில்லை. அந்தக் கட்சியினால் தனியாக பயணிக்க முடியாது என்றும் எமக்குத் தெரியும். அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தால் அதனைச் சர்வதேசம் ஏற்கும். இலங்கை மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். கூட்டமைப்பு போல ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ் மக்களின் அடையாளத்திற்காகக் குரல் கொடுக்கின்றது -என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# நல்லிணக்கம் என்ற பூங்கன்றை நட்டுத் தண்ணீர் ஊற்றுவார் யார்?

கிழக்கு மாகாண சபைக்கு, உரிய காலத்துக்கு முன்னரே தேர்தலை நடத்தும் அரசின் வியூகம், மத்திய அரசாங்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஓர் உபாயமாகும். வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அரசுக்குத் தோல்வி நிச்சயமென்பதால், அதற்கு முன்னதாகக் கிழக்குத் தேர்தலை நடத்திச் சிறுபான்மையினர் அரசின் பக்கத்திலேயே உள்ளனர் என்று அனைத்துலகத்துக்கு காட்டுவதற்கான திட்டம் இது.

இதனை நாம் கூறவில்லை. நீதியமைச்சரும், முஸ்லிம் மக்களின் பிரதான அரசியல் கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்து இது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அந்த வெற்றியை மூல வளமாக்கி, அதன் பின்னர் தென்னிலங்கையில் உள்ள மற்றும் பல மாகாண சபைகளுக்குத் தேர்தலை நடத்தி வெற்றியைத் தமதாக்கி, மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கு, எமது மக்கள் அரசாங்கத்தின் ஆதரவாளர்களே, ஆகையால் எந்த வகையிலும் பிறநாடுகள் எம்மைப் பலவந்தப்படுத்த முடியாது, நிர்ப்பந்திக்க இயலாது என்று கூறுவதற்கான ஒருவகைத் தந்திரத்தின் எடுபொருளாகவும் மாகாண சபைத் தேர்தலை அரசு கையில் ஏந்தத் திட்டமிட்டுள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தகவல்கள், கருத்துக்களில் பின்வருவன கவனத்தில் கொள்ளத் தக்கவை:

* முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்ததன் மூலமாகவே அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்தது. அதன் மூலம் இன்று தம்புள்ளயில், அரசு தான் நினைத்ததைச் செய்வதற்கு வழி சமைத்துக் கொடுத்துள்ளோம்.

* தம்புள்ள விவகாரம் தோன்றியுள்ள இன்றைய நிலையில், எமது முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடைய அடையாளத்தை வெளிக்காட்ட வேண்டிய தேவை அவசியமாகி உள்ளது. நாம் அரசின் கைப்பிள்ளையாகச் செயற்பட முடியாது. அரசாங்கத்தை அதன் நெருக்கடிகளில் இருந்து விடுவிப்பதற்காக, எங்களது நிலைப்பாட்டை மாற்ற முடியாது.

* மேலிடத்திலிருந்து தங்கள் விருப்பம் தெரியப்படுத்தப்படும் போது, அதற்கு ஏற்றாற்போன்று ஒரு பல்லவியைப் பாடுவதற்கு எமது கட்சி தயாரில்லை. எம்மிடம் அது சரிப்பட்டு வராது.

காத்தான்குடி பூநொச்சிமுனையில் நடைபெற்ற நிகழ்வில் இவ்வாறாகப் புராணம் பாடியுள்ள அமைச்சர், தம்புள்ளப் பள்ளிவாசல் விவகாரத்தில் மேற்கொண்டு தமது கட்சி என்ன நடவடிக்கையைக் கையில் எடுக்கப்போகிறது என்பதனை மட்டும் பகிரங்கப் படுத்தவில்லை.

ஆனால், அரசாங்கத்துடன் தமது கட்சி இணைந்தமை, கண்ணைத் திறந்துகொண்டே படுகுழியில் விழுந்தமைக்கு ஒப்பானது என்று மெத்தக் கவலையுடன் தெரிவித்திருக்கிறார். அரசியல் தலைவர்களுக்கு இது கைவந்த கலை என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

எனினும் தம்புள்ளப் பள்ளிவாசல் விவகாரம் அரசாங்கத்தின் மறைமுக ஆசியுடன், ஆதரவுடன் நடைபெறுகின்றது என்பது துலக்கமாகத் தெரிகிறது. 60 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட இஸ்லாமிய வழிபாட்டு நிலையத்தை பிரதமரும் மதவிவகார அமைச்சருமான டி.எம்.ஜயரத்தினாவின் ஆசியுடன், அகற்றும் முடிவு அரசினால் கையில் எடுக்கப்பட்டது என்பது இப்போது மூடுமந்திரமல்ல!

பௌத்த சாசனத்தைப் பாதுகாத்துப் போசிப்பதாக அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அதனால் உயிரைப் பணயம் வைத்தாவது பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் எப்போதும் கடமைப்பட்டுள்ளது. ஆனாலும் ஏனைய மதங்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கு, அகௌரவப்படுத்துவதற்கு எமக்கு எந்த உரிமையும் இல்லை.

வரலாற்றுப் புகழ் மிக்க ரங்கிரி தம்புள்ள பிரதேசத்தில் தற்பொழுது உருவாகியுள்ள சமய புனிதஸ்தலம் சம்பந்தமான பிரச்சினையைக் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக்கொள்ளலாம் - என்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, பள்ளிவாசலை அமைப்பதற்குத் தம்புள்ளப் பகுதியிலேயே வேறு இடம் ஒன்றை ஒதுக்கிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

ஆயினும் அப்பிரதேச முஸ்லிம் மக்கள் அந்த யோசனையை ஏற்றுக்கொள்வரோ என்பது சந்தேகத்துக்குரியது என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அறுபது வருடங்களாக முஸ்லிம் மக்களின் தொழுகை போன்ற மத வழிபாடுகளை இயற்றிய இடத்தை மாற்றும் ஏற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கினால் அது தொடர்கதையாக மாறும். அரசு, தான் நினைத்தவாறு, தனது பொடி அடித் தொண்டர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு, அரசியல் லாபம் மற்றும் வாக்கு வங்கிப் பெருக்கத்துக்காக ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களின் வழிபாட்டு இடங்களைப் பெரும் எண்ணிக்கையில் கபளீகரம் செய்யும் தனக்குள்ள அதிகாரங்களைப் பலப்படுத்தி அதனை ஒரு சட்டவரன்முறையாக மாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

தமிழர் பிரதேசங்களில், புதிது புதிதாகக் கௌதம புத்தரின் திருவுருவச் சிலைகளை அமைத்து வருவதையும், தம்புள்ளப் பள்ளிவாசல் இடமாற்ற முயற்சியையும் இரண்டு ஒத்த தேற்றங்களாகக் (Theorem) கொள்ளலாம்.

தமிழ் மொழி சிங்களத்தை மேலோங்கிவிடாது தடுப்பதற்காக சிங்களம் மட்டும் சட்டம் சுமார் ஐம்பத்தாறு வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்டதை ஒத்ததே, தம்புள்ளயில் அறுபது வருடங்களாக இயங்கிய முஸ்லிம்களின் தொழுகை நிலையத்தை மாற்றும் முயற்சி.

இந்த இலட்சணத்தில் மொழி, மத, சமத்துவம் நாட்டில் மேலோங்கும் பொருட்டு -

இன நல்லிணக்கம் உண்டாவதற்கு, பெரும்பான்மையினரின் அரசுகள் வழி செய்யும் என்ற சாதகமான (Positive) எதிர்பார்ப்பு சிறுபான்மை இனங்கள் மத்தியில் முகிழ்க்கத் தண்ணீர் ஊற்றுவார் எவருமிலர் என்ற எதிர்மறையான நிலையே நிரந்தரமாகத் தேறும்!

# ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சிகள் கால தாமதம்

## ஜூன் மாதத்தில் ஆரம்பமாகும் சாத்தியம்

அச்சுவேலி,ஏப்.25

ஆசிரியர் கலாசாலைகளுக்குப் பயிற்சிக்கு ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் புதிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பமாகலாம் எனத் தெரிய வருகின்றது.

இந்த வருடம் ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிகள் மூலம் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் அனுமதிக்கப்பட்டு இரண்டு வருட கால பயிற்சி வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் மார்ச் மாதம் இறுதி வாரத்தில் முடிவடைந்துள்ளன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரின் விவரங்கள் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவு பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட் டுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரின் தகைமைகளைப் பரிசீலனை செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதம், ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் நடத்தப்படாமை ஆகியனவே புதிய மாணவர்களை ஆசிரியர் கலாசாலைகளில் இணைத்துக் கொள்வதில் கால தாமதம் ஏற்படக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இரண்டாம் தவணை ஆரம்பத்தில் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஆசிரியர் கலாசாலை அனுமதி எதிர்பாராத விதத்தில் பின்தள்ளிப் போடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த வருடம் தமிழ் மொழி மூலப் பயிற்சி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை, கொட்டகலை ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றிலும் ஆங்கில மொழி மூலமான பயிற்சி மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்களில் அடிப்படைக் கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்யத் தவறியவர்கள் தவிர மற்றவர்கள் இந்த வருடம் ஆசிரியர் பயிற்சிக்காக அனுமதிக்கப்படவுள்ளனர். (த-11)

# ஒரு லட்சம் கிலோ மரக்கறி தம்புள்ளையில் தினமும் வீண்

கொழும்பு,ஏப்.25

தம்புள்ளையிலுள்ள பொருளாதார மையத்துக்கு எடுத்துவரப்படும் மரக்கறிகளில் ஒரு லட்சம் கிலோ முதல் ஒன்றரை லட்சம் கிலோ வரையிலான மரக்கறி வகைகளைத் தினமும் குப்பையில் கொட்ட வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகி றது.

கரட், போஞ்சி, கறி மிளகாய், பச்சை மிளகாய், கோவா, கத்தரி, வெண்டி, புடலங்காய், பாகற்காய், கெக்கரிக்காய், பொன்னாங் காணி, தேசிக்காய், வட்டுக் கத்தரி போன்ற மரக்கறி வகைகளே இவ்வாறு குப்பையில் கொட்டப்படுகின்றன.

இவற்றைச் சந்தைப்படுத்த முடியாது போவதால் 30 முதல் 50 கிலோ நிறை கொண்ட ஒரு சாக்கு மரக் கறியை 50 முதல் 100 ரூபாவுக்குக் கூடச் சந்தைப்படுத்த முடியாமல் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் யாழ்ப்பாணம், புத்தளம், எம்பிலிப்பிட்டிய, நுவரெலியா போன்ற பிரதேசங்களிலிருந்து பெரும் தொகையில் மரக்கறிகள் இங்கு வந்து சேர்வதனாலும் மழை காரணமாகப் பாதிப்புக்குள்ளாவதனாலும் இந்த நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-22)

### மாற்று ஆற்றல் உடையவர்களுக்கு அடையாள அட்டைகள்

தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் மாற்று ஆற்றல் உடையவர்களுக்கு வழங்கப்படவுள்ள நலன்புரி அடையாள அட்டைகளுக்கான புகைப்படம் பிடிக்கும் பணிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பின்வரும் இடங்களில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 9 மணிக்கு குடமியன், நாவற்காடு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நாவற்காடு பொது நோக்குமண்டபத்திலும்,பி.ப.1மணிக்கு வரணி வடக்கு மாசேரி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வரணி வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு கரம்பைக் குறிச்சி கிராம அலுவலர் அலுவலகத்திலும் இடம்பெறும். (த-9)

# டெங்கு அபாய வலயங்களாக 25 சுகாதார வைத்திய பிரிவுகள்

இலங்கையிலுள்ள 25 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் சுகாதார அமைச்சினால் டெங்கு ஆபத்து வலயங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் உள்ளகக் குழுவொன்றினால் இந்த வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப் பாளரான டாக்டர் ரஞ்ஜித்பட்டு வத்துடாவ தெரிவித்தார்.

பிலியந்தலை, தெஹிவளை, ஹோமாகம, மொறட்டுவ, கடுவெல, கொலன்னாவ, கொழும்பு மாநகரசபை எல்லை, கோட்டே, கட்டானை, மஹரகம, நீர்கொழும்பு, கம்பஹா, நுகேகொடை, மஹர, கண்டி, கேகாலை, காலி, மாத்தறை, புத்தளம், மட்டக்களப்பு உள்ளிட்ட வைத்திய அதிகாரிகள் பிரிவுகளே இவ்வாறு டெங்கு ஆபத்து வலயங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. தற்போது பெய்து வரும் பருவப் பெயர்ச்சி மழை இனிவரும் நாள்களில் பெய்யவுள்ள பருவ மழை என்பனவற்றை அடுத்து டெங்கு நோய் பரவக் கூடிய அபாயம் உள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (த-22)

# வடக்கில் 450 மாணவ தாதியர் சில மாதங்களுக்குள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

வட மாகாணத்தில் மாணவ தாதியர் 450 பேருக்கு அடுத்த சில மாதங்களுக்குள் நியமனம் வழங்கப்பட்டு பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்தவருடம் நடந்த இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் முதல் நிலை அடிப்படையில் 300 பேர் ஏற்கனவே மாணவ தாதியராக நியமனம் செய்யப்பட்டனர். காத்திருப்பு பட்டியலில் உள்ள இந்த 450 பேருக்கே அடுத்த சில மாதங்களில் மாணவர் தாதியர் நியமனம் வழங்கப்படும்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.தாதியர் கல்லூரிக்கு 350 பேரும், வவுனியா தாதிய கல்லூரிக்கு 100 பேரும் இவ்வாறு நியமனம் செய்யப்பட்டு பயிற்சி வழங்கப் படவுள்ளது.

450 பேருக்கும் கடந்த வருடம் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. அதில் சித்தியடைந்து தாதிய பயிற்சி நெறிக்கு இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கடந்தவருடம் நடந்த இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் முதல் நிலை அடிப்படையில் 300 பேர் ஏற்கனவே மாணவ தாதியராக நியமனம் செய்யப்பட்டனர்.

காத்திருப்பு பட்டியலில் உள்ள இந்த 450 பேருக்கே அடுத்த சில மாதங்க ளில் மாணவர் தாதியர் நியமனம் வழங்கப்படும் - என்றார்.

வருடாந்தம் மாணவ தாதியர் பலர் நியமிக்கப்பட்டு தாதியர்களாக பலர் வெளியேறுகின்றபோதும் வடக்கில் தாதியர் பற்றாக்குறை இன்னும் தீர்ந்தபாடாக இல்லை.

இந்த வருட ஆரம்பத்தில் ஒரு தொகுதி மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரசுமோட்டை கடையில் ஓடுகள் கழற்றித் திருட்டு

### 50 மீற்றர் தூரத்தில் காவலரண்

கிளிநொச்சி,ஏப்.25

கிளிநொச்சி முரசுமோட்டையில் இராணுவக் காவலரணுக்கு அருகிலுள்ள வாணிப நிலையமொன்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி முரசுமோட்டை 4 ஆம் கட்டை செல்லையா கடைச்சந்தியில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் எரிபொருள் மற்றும் உதிரிகள் விற்பனை செய்யும் வணிக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கூரை ஓடுகள் கழற்றப்பட்டு ஒரு தொகைப் பணம், ஒயில் மற்றும் உதிரிகள் அடங்கலாக ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

மேற்படி வணிக நிலையம் இதற்கு முன்பு ஒரு தடவை உடைக்கப்பட்டுத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த வணிக நிலையம் அமைந்துள்ள இடத்திலிருந்த 50 மீற்றர் தொலைவில் இராணுவக் காவலரண் ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# வவுனியா மாவட்டத்தில் இதுவரை 40 ஆயிரம் பேர் மீளக்குடியமர்வு

## வவுனியா அரச அதிபர் தகவல்

**வவுனியா மாவட்டத்தின் மீளக்குடியேற்றப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இன்னும் 2 ஆயிரத்துக்குக் குறைவான குடும்பங்களே மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர்.**

வவுனியா, ஏப்.25

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 11 ஆயிரத்து 687 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த கால போர் நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து உறவினர்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தவர்களே அரச, அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் மூன்றுமுறிப்பு, தாண்டிக்குளம், மரக்காரம்பனை, பம்பைமடு, செக்கட்டிப்பிலவு, இளமருதகுளம், சாளம்பைக்குளம், மருதங்குளம், ஓமந்தை, பறநாட்டகல், நொச்சிமோட்டை, பாலமோட்டை, பன்றிக்கெய்தகுளம், மாளிகை, சேமமடு, மருதமடு, ஆறுமுகத்தான்குளம், புதுக்குளம், ஈச்சங்குளம், கள்ளிக்குளம், பூவரசங்குளம், புதுக்குளம், காத்தார் சின்னக்குளம், கல்மடு, வேலங்குளம், வவுனியா நகரம், பண்டாரிக்குளம், தோணிக்கல், மகாரம்பைக்குளம், இராசேந்திரகுளம், கந்தபுரம், வெளிக்குளம், இறம்பைக்குளம், சமணங்குளம், கோயில்குளம், நெளுக்குளம், ஆசிகுளம், சாஸ்திரி கூழாங்குளம், மகிழங்குளம், கூடமாங்குளம் மற்றும் பட்டாணிச்சி புளியங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 798 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 201 பேரும் வவுனியா தெற்கில் மகாவேலங்குளம், அக்போபுரரங்கேதகம, பிரப்பன்மடு, புதுபுலன்குளம், 7 ஆம் வட்டாரம், பூமடுவ, அவிசாடபிட்டிய, அவரந்தூலவ, மாமடுவ ஆகிய சிங்களப் பகுதிகளில் 1377 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 516 பேரும் வெங்கலச்செட்டிகுளத்தில் பாவற்குளம், குருக்கள் புதுக்குளம், பெரிய புளியங்குளம், பிரமணாளன் குளம் கந்தசாமி நகர், கங்கன் குளம், முசலிக்குட்டி, முகத்தான் குளம், கண்ணாடி, பெரியகட்டு, பெரிய தம்பனை, ஆண்டியார் புளியங்குளம், சூடு வெந்தபுலவு, முதலியார்குளம், நேரியகுளம், செட்டிகுளம், சின்னச்சிப்பிக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 586 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 880 பேரும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 926 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 638 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின் மீளக்குடியமர்வுப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இன்னும் 2 ஆயிரத்துக்குக் குறைவான குடும்பங்களே மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளன. அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-400)

## உலக மலேரியா தின நிகழ்வு கிளிநொச்சியில் வெள்ளியன்று

கிளிநொச்சி, ஏப்.25

உலக மலேரியா தின நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இது குறித்து யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்கப் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ஆர். சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சும் மலேரியாத் தடை இயக்கமும் இணைந்து இதனை நடத்தவுள்ளன.

இந்த நாளையொட்டி நடைபவனி ஒன்றும் கிளிநொச்சியில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். பிராந்திய வைத்தியசாலைகளில் பணிபுரியும் மலேரியாத் தடை இயக்கப் பிரிவினரும் இந்த நடைபவனியில் கலந்து கொள்ள வசதியாக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு அவர்களை அனுப்பி வைக்குமாறு உரிய பொறுப்பு வைத்திய அதிகாரிகளை மருத்துவர் சிவசங்கர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (க-300)



எந்த நேரத்தில் என்ன நேருமோ...?

கிளிநொச்சியிலிருந்து அக்கராயன் செல்லும் புதுமுறிப்பு கோணாவில் வீதியில் காந்தி கிராமத்துக்கு அருகில் மக்களைக் காவு கொள்ளக் காத்திருக்கும் பெருங்குழிகள். (405)

## 'திட்டமிடல் மூலதத்துவங்கள்' நூல் வெளியீடு இன்று

**கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.**

கிளிநொச்சி,ஏப்.25

அமரசிங்கம் கேதீஸ்வரன் எழுதிய திட்டமிடல் மூலதத்துவங்கள் என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் தலைமையில் இடம்பெறும். கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையினர் இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், இளைப்பாறிய கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா ஆகியோர் நிகழ்த்துவர்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் இ.நந்தகுமார் நிகழ்த்த முதற் பிரதியை கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ந.சுதாகரன் பெற்றுக் கொள்வார். நூல் ஆய்வுரையை கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும், வடக்கு மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளருமான தி.இராசநாயகம் வழங்குவார். (க-9-405)

## சட்டமருத்துவ அதிகாரிகளை நியமிக்குமாறு கோரிக்கை

அக்கராயன்,ஏப்.25

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சட்ட மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்படாமையால் மீளக்குடியமர்ந்த மக்கள் பல்வேறு இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இங்கு சிலவகை மரணங்கள் நிகழும்போது உடல்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. இதனால் மக்கள் அதிக அலைச்சல்களுக்கும் பணச் செலவுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

எனவே மக்களின் சிரமங்களைப் போக்கும் வகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சட்ட மருத்துவ அதிகாரிகளை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

## வடபகுதியில் ரயில் பாதை அமைக்க 565.69 அமெரிக்க டொலர் ஒதுக்கீடு

**இர்கோன் சர்வதேச நிறுவனமானது இந்திய அரசின் நிதியுதவியுடன் இலங்கையின் பல பாகங்களிலும் ரயில் பாதைகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.**

வவுனியா, ஏப்.25

வடபகுதியில் ரயில் பாதை அமைப்பதற்கென 565.69 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இர்கோன் சர்வதேச நிறுவனமானது இந்திய அரசின் நிதியுதவியுடன் இலங்கையின் பல பாகங்களிலும் ரயில் பாதைகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகையில் தென் மாகாணத்தில் காலி - மாத்தறை, காலி - களுத்துறை ரயில் பாதைகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அதில் களுத்துறை - காலி கடற்கரை ரயில் பாதை 47.41 மில்லியன் அமெரிக்க டொலரில் அமைக்கப்பட்டுக் கடந்த 19 ஆம் திகதி மக்கள் தேவைக்காகத் திறந்து வைக்கபபட்டுள்ளது.

வடமாகாணத்தில் மதவாச்சியிலிருந்து தலைமன்னார், ஓமந்தையிலிருந்து காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் ரயில் பாதைகள் அமைக்கும் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

சுமார் 43 கி.மீ. நீளமான மதவாச்சி - மடு வீதிக்கான ரயில் பாதை அமைப்பதற்கு 81.31 மில்லியன் அமெரிக்க டொலர்களும், 63 கி.மீ. நீளமான மடு வீதி - தலைமன்னாருக்கான ரயில் பாதை அமைப்பதற்கு 149.74 மில்லியன் அமெரிக்க டொலர்களும், 90 கி.மீ. நீளமான ஓமந்தை பளை வரையான ரயில் பாதை அமைப்பதற்கு 185.34 மில்லியன் அமெரிக்க டொலர்களும் 56 கி.மீ. நீளமான பளை - காங்கேசன்துறைக்கான ரயில் பாதை அமைப்பதற்கு 149.3 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-400)

## வவுனியா மாவட்டத்தில் கட்டுக்குள் டெங்கு

வவுனியா, ஏப்.25

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. அது 2010 இல் குறைவடைந்து தற்போது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பிரதேச சபை, நகரசபை என்பவற்றின் அனுசரணையுடன் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள குடம்பிகளைச் சேகரித்து அழித்ததோடு அவ்விடங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்பட்டால் அங்கு புகையூட்டல், கிருமி அழித்தல் மூலம் துப்புரவுப் பணிகள் சுகாதாரத் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதனாலேயே இதனைப் பூரண கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர முடிந்தது.

இதேவேளை வவுனியாவிலிருந்து கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்று வருபவர்களால் டெங்கு நோய் பரவக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மலேரியா, நெருப்புக்காய்ச்சல் ஆகிய நோய்களும் இந்தப் பகுதியில் இதுவரை ஏற்பட்டதற்கான சான்றுகள் எவையும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழியர் சேமலாபத் திட்டத்தில்

# 25 வீதமானோர் இணையவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களில் 25 வீதமானவர்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகிறது.

யாழ். நகரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களும் நூற்றுக்கணக்கான தனியார் நிறுவனங்களும் உள்ளன. இவற்றில் சுமார் 8 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களில் 25 வீதமானவர்கள் இன்னும் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்று தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

**தொழிலாளர்கள் அனைவரையும் தொழில் வழங்கும் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக் கொள்வது அவசியமானதாகும்.**

தொழிலாளர் சட்டத்தின் பிரகாரம் தொழிலாளர்கள் அனைவரையும் தொழில் வழங்கும் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக் கொள்வது அவசியமானதாகும். எனினும் நிறுவனங்கள் பல இன்னமும் அவ்வாறு செய்து கொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் வணிகர் கழக பிரதிநிதி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

வர்த்தக நிலையங்களில் உள்ள தொழிலாளர்களை ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்வதற்குநடவடிக்கை எடுத்தோம். ஆனால் தொழிலாளர் சிலர் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ளாமல் முழு ஊதியத்தையும் வழங்குமாறு கேட்கின்றனர். எனினும் ஊழியர்களுக்கு முழுமையாக ஊதியம் வழங்குகின்ற போதும் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தவறவில்லை. வேலைக்கு என்று வருவார்கள் சில வாரங்களில் வேலையிலிருந்து நீங்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு எப்படி ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்த முடியும் - என்றார்.

இந்த விடயம் தொடர்பாக வட மாகாண உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரனைக் கேட்டபோது,

ஊழியர்கள் அனைவரையும் திட்டத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துச் செயற்பட்டு வருகிறோம். தொழில் தருநர் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளவில்லை என ஊழியர்கள் அறிந்தால் மாவட்ட தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் - என்றார்.

(த-3)

# பாதுகாப்பு அணை அமைக்கும் பணி

### பருத்தித்துறையில் ஆரம்பம்

வடமராட்சி, ஏப்.25

பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெரு தொடக்கம் நான்காம் குறுக்குத் தெரு வரையான கடற்பிரதேசத்தில் பாதுகாப்பு அணை கட்டும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 180 லட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை நகரசபையால் இந்தப் பாதுகாப்பு அணை கட்டப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு அணை கட்டுவதற்கான அத்திவாரக் கல்லை பருத்தித்துறை நகர பிதா சபா.ரவீந்திரன் நான்காம் குறுக்குத் தெருச் சந்தியில் நட்டு வைத்ததைத் தொடர்ந்து கட்டடப் பணிகள் ஆரம்பமாகி வேகமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தையடுத்து கடலோரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த பாதுகாப்பு அணை அமைக்கப்பட வேண்டும் எனப் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை கரையோரப் பகுதியில் பாதுகாப்பு அணை அமைக்கும் திட்டத்தின் ஒரு கட்டமாகவே முதலாம் குறுக்குத் தெரு தொடக்கம் நான்காம் குறுக்குத் தெரு வரை பாதுகாப்பு அணை அமைக்கப்பட்டு வருகிறது.

(த-8)

# கரம்பன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

### வலயக்கல்வி அலுவலகத்துக்கு மனு

ஊர்காவற்றுறை, ஏப்.25

ஊர்காவற்றுறை கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை கணிசமான அளவு நிலவுவதால், அவற்றைச் சீர் செய்வதற்கு வலயக் கல்வி அலுவலகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகப் பெற்றோரும், மாணவர்களும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

349 மாணவிகள் கல்வி பயிலும் 1சி தரமுடைய இந்தப் பாடசாலையில், கடந்த முறை நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் மாணவர்கள் நூறு வீத சித்தியைப் பெற்றுள்ளனர். அதே போல் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் கணிதத்தில் 67 வீத சித்தியினையும், விஞ்ஞானத்தில் 76 வீத சித்தியினையும் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட, தரம் 1 முதல் 13 வரை நிலவும் ஆசிரியர்பற்றாக்குறை எமது கற்றல் செயற்பாட்டுக்கும் இணைப்பாட விதான செயற்பாட்டுக்கும் குந்தகத்தை ஏற்படுத்தியுள்ளது. எமக்கு ஆரம்பப்பிரிவு இடை நிலைப் பிரிவில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, உடற்கல்வி, தகவல் தொழில் நுட்பம் போன்ற பாடங்களுக்கும், ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் புவியியல், தகவல் தொழில் நுட்பம் போன்ற பாடங்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. பாடசாலையில் கணினி கற்றல் வளநிலையம் அமைந்துள்ள போதும் ஆசிரியர் இன்மையால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடருமானால் எமது கல்வி பெரிதும் பாதிப்புக்குள்ளாகும். எனவே இந்த நிலையினை கருத்தில் கொண்டு வலயக் கல்வி அலுவலகம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் உள்ளது.

(த-127)



ஊர்காவற்றுறை முகாம் வீதி பொதுமக்கள் பயணிக்க முடியாத அளவில் படுமோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனைத் திருத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. *(த-127)*

### 150 பேருக்கு சிகிச்சை

பருத்தித்துறை ஸ்ரீ சத்திய சாயி சேவாநிலையத்தால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட இலவச வைத்திய சேவை முகாமில் 150 பேர் சிகிச்சை பெற்றனர்.

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா மகாசமாதி எய்திய முதலாம்ஆண்டுநினைவுதினத்தையொட்டி வடமராட்சி ஸ்ரீ சத்தியசாயி சேவாநிலையங்கள் ஒன்றிணைந்து நடத்திய வைத்திய முகாம் நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெற்ற போது வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 150 நோயாளர்கள் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை பெற்றனர். அத்துடன் பலருக்கு இரத்தப் பரிசோதனை, நீரிழிவு உட்பட பல்வேறு மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. (த-8)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் நிபுணத்துவ மருத்துவ சேவைகள்

வடமராட்சி, ஏப்.25

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பல்வேறு நிபுணத்துவ வைத்திய சேவைகளும், சிகிச்சைப் பிரிவுகளும் கிழமை நாள்களில் நடைபெற்று வருகின்றன.

**யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணர்களின் உதவியுடன் இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

நிபுணத்துவ சேவைகளையும் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சைகளையும் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணர்கள் வழங்கிவருகின்றனர்.

மாதத்தில் இரண்டாவது, நான்காவது புதன்கிழமைகளில் 'எக்ஸ்ரே' கதிர், சி.ரி. ஸ்கானிங், 'எல்ராசவுண்ட்' ஆகியவற்றின் மூலம் நோய்களைக் கண்டறியும் நிபுணத்துவ சேவைகளை வைத்திய நிபுணர் டாக்டர் சங்கரப்பிள்ளை நிமலன் மேற்கொள்கிறார்.

கண் சிகிச்சைகளை மாதத்தில் நான்காவது புதன் கிழமை காலை 9.30 மணிக்கும், 35 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கான உடற்கூற்றுப் பரிசோதனைகள் மாதத்தில் இரண்டாவது புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

தோல் சிகிச்சைப் பிரிவில் மாதத்தில் முதலாவது புதன்கிழமை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சுகுமாரனும், மார்புநோய் சிகிச்சைப் பிரிவில் மாதத்தில் நான்காவது வெள்ளிக்கிழமை டாக்டர் சி.யமுனானந்தாவும், புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் மாதத்தில் முதலாவது புதன்கிழமை வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயக்குமாரும் வைத்திய சேவைகளை காலை 9.00 மணிக்கு நடத்தி நோயாளர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து வருகின்றார்கள். யாழ்.போதனா வைத்தியசாலை இருதய வைத்திய நிபுணர்களால் இருதய சிகிச்சை மாதத்தில் நான்காவது வியாழக்கிழமைகளில் காலை 8மணிக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிபுணத்துவ வைத்திய சேவைகளையும், சிகிச்சைகளையும் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகம் தந்து பெற்றுக் கொள்ளலாம் என்று பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் [illegible] தெரிவித்தார்.

(த-8)

# ரூ.40 ஆயிரத்துக்குக் குறையாமல் உதவிகள் வழங்கப்படவேண்டும்

### ஜனாதிபதி செயலணி பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள், மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதாயின் ஆகக்குறைந்தது 40 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாமல் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்குவதாயின் மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி விசேட செயலணியைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்துக்கு பயணம் செய்து நேற்றுமுன்தினம் கோப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி விஷேட செயலணியால் ஆராயப்பட்டது.

இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதாயின், அந்த உதவிகள் மூலம் மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். ஆகக் குறைந்தது 40 ஆயிரம் ரூபாவுக்கு குறையாத வாழ்வாதார உதவிகளை அவை வழங்க வேண்டும்.

எனவே மக்களுக்கு 20 ஆயிரத்துக்கும் குறைவான தொகையை வாழ்வாதார உதவியாக வழங்கி வரும் சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இனிவரும் காலங்களில் 'ஜனாதிபதி விசேட செயலணியின்' அனுமதி வழங்கப்படமாட்டாது.

மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் அரை நிரந்தர வீடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளை இந்திய வீட்டுத் திட்டத்தில் இரண்டாம் கட்டப் பயனாளிகளாகவே தெரிவு செய்ய வேண்டும் - என்று கூறப்பட்டது. (த-5)

# தும்பளையில் சுற்றுலா மையம்

வடமராட்சி, ஏப். 25

தும்பளையில் சுற்றுலா மையம் ஒன்றை அமைக்க பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் அமைக்கப்படும் இந்தச் சுற்றுலா மையத்தில் உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சுற்றுலா மையத்தை அமைப்பதற்கு சுற்றுலாத் துறை அமைச்சிடம் பருத்தித்துறை நகரசபை ஏற்கனவே அனுமதியைப் பெற்றுள்ளதாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை நகருக்கும் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வந்து செல்வதால் அந்தப் பயணிகளின் குறைகளைப் போக்குமுகமாக இந்தச் சுற்றுலா மையம் அமைக்கப்படுகின்றது. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகல்

## நெதர்லாந்தில் திடீர் திருப்பம்

ஆம்ஸ்டராம், ஏப்.25

நெதர்லாந்துப் பிரதமர் மாக் ரூட்டும், அவரின் அமைச்சர்களும் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

நெதர்லாந்து அரசின் சிக்கனத் திட்டங்கள் தொடர்பான சர்ச்சையால் அரசின் வலதுசாரி பங்காளிக் கட்சிகளில் ஒன்றான, சுதந்திரக் கட்சி அரசுக்கான ஆதரவைத் திருப்பிப் பெற்றுக்கொண்டது. அதனால் பிரதமர் மாக் ரூட் மற்றும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோர் தமது பதவி விலகல் கடிதத்தை அந்த நாட்டு அரசி, பயட்ரிக்ஸிடம் சமர்ப்பித்துள்ளனர்.



**நெதர்லாந்து அரசின் சிக்கனத் திட்டங்கள் தொடர்பான சர்ச்சையால் அரசின் வலதுசாரி பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சுதந்திரக் கட்சி அரசுக்கான ஆதரவை திருப்பிப் பெற்றுக்கொண்டது.**

இந்தப் பதவிவிலகல்களை அரசி கருத்திற்கொண்டுள்ளார். ஆனால் நெதர்லாந்து அரசின் நலனுக்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அனைத்து அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களையும் அவர் கோரியுள்ளார் என நெதர்லாந்துத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நெதர்லாந்து அரசின் பதவிக்காலம் 2015 மே மாதமே முடிவடைகிறது. எனினும் இஸ்லாமிய எதிர்ப்புணர்வு கொண்ட அரசியல்வாதியான கிறீட் வீல்டர் தலைமையிலான சுதந்திரக் கட்சியுடனான முரண்பாடு காரணமாக முன்கூட்டியே தேர்தல் நடைபெறலாம் என்று கூறப்படுகிறது.

## விமானத் தாக்குதல்கள் சிரியாவில் ஓயவில்லை

ஹோம்ஸ், ஏப்.25

சிரியாவின் ஹோம்ஸ் நகரில் கடந்த திங்கட்கிழமை உக்கிர குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிரியாவில் ஐ.நா. தலைமையிலான போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பணியில் இருக்கும் போது இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

பாபா அமர் மற்றும் இன்ஷாட் ஆகிய பிரதேசங்களுக்கு அருகே துப்பாக்கித் தாக்குதல் ஒன்றையடுத்து இந்தக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அதே சமயம் கால்டியெஹ் நகரிலும் கடும் துப்பாக்கித் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக சிரிய எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய சிரிய உள்ளூர் ஒருங்கிணைப்புச் சபை தெரிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வன்முறைகளில் குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஹோம்ஸ் நகரில் மட்டும் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இட்லிப் டரா மற்றும் டமஸ்கஸின் புறநகர்ப் பகுதிகள் என்பவற்றிலும் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சிரியாவுக்கான ஐக்கிய நாடுகள் அரபு லீக் தூதுவர் கோபி அனானின் 6 அம்ச சமாதான திட்டத்தின் ஓர் அங்கமாகவே சிரியாவில் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனினும் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையிலும் அந்த நாட்டில் வன்முறைகள் தொடர்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. அந்த நாட்டில் இடம்பெற்று வரும் வன்முறைகளுக்கு ஆயுதம் தாங்கிய பயங்கரவாதக் குழுக்களே காரணமென சிரியா தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருகிறது.

## தென்கொரியாவை மிரட்டுகிறது வடகொரியா

சியோல், ஏப்.25

தமது நாட்டு முன்னாள் தலைவரை அவதூறாகப் பேசியதற்காக, தென் கொரியாவுக்குப் தகுந்த பாடம் புகட்டுவோம் என்று வடகொரியா தெரிவித்துள்ளது. தென்கொரியா மீது தொடுக்கப்படும் தாக்குதல் மிகவும் மோசமானதாக அமையும் எனவும் அந்த நாடு எச்சரித்துள்ளது.

வடகொரிய இராணுவம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில், தலைவர் கிம் சங்கை அவதூறாகப் பேசிய தென்கொரியாவுக்கு விரைவில் பாடம் புகட்டுவோம். அந்த நாட்டின் தலைநகர் சியோலை 3 அல்லது 4 நிமிடத்தில் சாம்பல் மேடாக்குவோம் என கடும் எச்சரிக்கை விடுத்தது. இதனால் கொரிய தீப கற்பகத்தில் கடும் போர்ப் பதற்றம் நிலவுகிறது.

## பான் கீ மூன் மியன்மார் பயணம்



ஜெனிவா, ஏப்.25

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மிக விரைவில் மியன்மாருக்கான பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகச் செயற்பாடுகளை ஊக்குவித்து, மியன்மாரின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு நல்கும் வகையில், இந்தப் பயணம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மியன்மார் ஜனாதிபதி தீன் சீனின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, தாம் இந்தப் பயணத்தில் ஈடுபடுவதாக ஐக்கிய நாடுகளின் செயலாளர்நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் பான் கீ மூன் மியன்மாருக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

எனினும் இராணுவ ஆட்சியிலிருந்து ஜனநாயக ஆட்சிக்கு மியன்மார் படிப்படியாக திரும்பிவரும் நிலையில், இந்தப் பயணம் முக்கியத்துவம் பெறுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற இடைக்கால நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக செயற்பாட்டாளர் ஆங் சாங் சூகி வெற்றிபெற்றிருந்த நிலையில் சர்வதேச நாடுகளின் கவனம் மியன்மார் மீது திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


### கோழிக்குஞ்சு விநியோகம்

No.1பிறீமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

### IELTS

http://edu.kugroup.info/ielts
June/30th -Exam in Jaffna
KU's IELTS hotline : 0777302882
புதிய தனிப்பட்ட வகுப்புகள் ஆரம்பம்
Authorized IELTS registration & Training Centre
K.U Educaiton,No 75,Temple Road,Jaffna

### சேவை

Internal Auditing & Tax
Consultation Service
T.P : 0775151761

### காணி தேவை

சங்கத்தானை ஆரம்பப் பாடசாலை அருகிலோ, ஏ-9 வீதி, சாவகச்சேரி, மீசாலை அருகிலோ காணி நியாய விலையில் தேவை.
தொடர்பு:- 0776935338

### அனெக்ஸ் வாடகைக்குத் தேவை

3 அங்கத்தவர் அடங்கிய குடும்பத்துக்கு யாழ்ப்பாணம் சூழவுள்ள பிரதேசத்தில் ஒரு அறை, குசினி, நன்னீர் அடங்கிய அனெக்ஸ் தேவை.
தொடர்பு:- 077 1067230

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, புங்கங்குளம் வீதி, கந்தர்மணியம் ஒழுங்கையில் வீட்டுடன் கூடிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 021 3218792, 077 7800788

### ஜேர்மன் மொழியும் இலகுவழியும்

Germany, Deutsch மொழிகள் Goethe Institute நடத்தப்படும் பரீட்சைக்கான சகல விதமான பாடங்களும் இலகு வழியில் கற்பித்துத் தரப்படும். பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.
T.P : 077 9629296

Oxford கல்வி நிலையம்
Vairavapulian kulam
Station Road,
Vavuniya

Academy of Logic
57, Palali Road Jaffna
(இலுப்பையடிச் சந்திக்கு அருகில்)

### இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற் பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூபா 450 /= மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை திறக்கப்படும்.
தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6944

### தவறிவிட்டது

கோபாலகிஸ்ணன் கண்ணதாசன் என்பவரது தே.அ.அ.(703394213V) 21.04.2012 அன்று துணுக்காய்க்கும் வெள்ளாங்குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் T.P.0775815378 தொடர்பு கொள்ளவும்.

### வயறிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும்


உங்கள் வீடுகளில் வயறிங், பைப் லைன் மற்றும் AC திருத்த வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் நவீன தொழில் நுட்பத்துடன் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0771970395, 0213006140

### தேவை

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள மின் ஒட்டுத் தொழிலகம் ஒன்றுக்குப் பின்வரும் தொழிலாளர்கள் தேவை.
★ மின் ஒட்டுநர் (வெல்டர்)
★ உதவியாளர்
தொடர்புகளுக்கு:- 309, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
021 321 83 27
(சம்பளம் நேரில் பேசலாம்)


### 9 ஆம் ஆண்டு நினைவலைகள்





மண்ணில்
18★ 11★ 1936
விண்ணில்
05★ 05★ 2003

அமரர் "சிவத்தமிழ்மணி"
**மாப்பாணர் துரைராசா**
(முன்னாள் பிரதம எழுதுவினைஞர் - நகரசபை, சாவகச்சேரி)
திதி:- சதுர்த்தி 25.04.2012

ஆண்டுகள் ஒன்பது ஆனதப்பா - ஆறவில்லை எம் இதயக்காயம்
அன்போடு எமைக் காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எமை வளர்த்துப் பாரினிலே உயர வைத்தீர்
கண்ணீரில் நாம் உறைய எங்கு அப்பா போய் மறைத்தீர்
காலம் எல்லாம் உங்கள் நினைவை நாம் சுமந்து
கடவுளிடம் வேண்டுகின்றோம் மறுபடியும் உம் திரு முகம் காண
எம் வாழ்விற்கு வழிகாட்டிய ஒளி விளக்கே....

- மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பலாலி தெற்கு, வசாவிளான்,
மீசாலை மேற்கு, மீசாலை.
(14650) (2-6)

### மரண அறிவித்தல்

**அருளானந்தம் அன்னம்மா**



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளாணந்தம் அன்னம்மா கடந்த (23.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செபரத்தினம் மற்றும் அல்வினம்மா, மேரி சசிகலா (பிறேமா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (25.04.2012) புதன்கிழமை பிற்பகல்3 மணிக்குப் புனித மிக்கேல் ஆலயத்தில் இடம்பெறும். பின்னர் புனித மிக்கேல் சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. கடும் கண்டனம்

## சூடான் - தென்சூடான் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்து

தென்சூடானின் எல்லைப்பகுதி மீதான சூடானின் விமான குண்டுத் தாக்குதல் சம்பவத்திற்கு ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறும் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாதெனவும் சூடான் அரசுக்கு பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

தென்சூடானின் பென்ரியு நகருக்கு அருகில் சூடானின் போர் விமானங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குண்டுகளை வீசியதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தென்சூடானுடனான பேச்சுவார்த்தையை சூடான் தலைவர் ஒமர் அல் பஷீர் ஏற்கெனவே நிராகரித்திருந்தார்.

தென்சூடானின் இராணுவத்தினர் கடந்த இரு வாரங்களாக தங்கள் நிலப்பரப்பை ஆக்கிரமித்திருந்ததாக, எண்ணெய்வளப் பகுதியான ஹெக்லிக் நகர் எல்லைப் பகுதிக்கு ஒமர் அல் பஷீர் சென்றிருந்தபோது கூறினார்.

ஹெக்லிக் பகுதியிலிருந்து அதன் படையினர் மீளப்பெற்றுள்ளதாக தென்சூடான் தெரிவித்தது. இருப்பினும் 1,000 தென்சூடான் படையினரைக் கொன்றொழித்து அவர்களை அகற்றியதாக சூடான் தெரிவித்துள்ளது.

நாங்கள் தென்சூடான் அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்போவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு துப்பாக்கி மொழியைத் தவிர வேறெதனையும் விளங்கிக் கொள்ள முடியாதென ஹெக்லிக் வந்தடைந்தபோது தனது படையினருக்கு ஒமர் அல் பஷீர் கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சமாதானமாக தமது வேறுபாடுகளை களைந்துகொள்வதற்கும் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புவதற்கும் இரு நாடுகளுக்கும் தைரியம் வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

இந்த நிலையில் சூடான் அரசு யதார்த்தமான வழியில் இந்தப் பிரச்சினையைக் கையாண்டு எண்ணெய்வளப் பிராந்தியத்தில் சமாதானம் நிலவ வழிவகுக்க வேண்டும் என ஐ.நாவின் செயலாளர் நாயகம் கோரியுள்ளார்.

கடந்த ஆண்டில் ஐ.நாவின் தலையீட்டோடு சூடானில் இருந்து தென்சூடான் என்ற புதிய ஒரு நாடு உருவாகியிருந்தபோதும் சூடானுக்கும் தென்சூடானுக்கும் இடையில் இருக்கும் எண்ணெய்ப் பிராந்தியம் பற்றிய பிரச்சினை தீர்வுக்கு வராமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.



1,000 தென்சூடான் படையினரைக் கொன்றொழித்து, அவர்களை அகற்றியதாக சூடான் தெரிவித்துள்ளது.

# தலை தப்பிய விமானங்கள்


இஸ்லாமாபாத், ஏப்.25

கடந்த 2 நாள்களுக்கு முன்பு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தரை இறங்கிய பயணிகள் விமானம் கீழே விழுந்து நொறுங்கியதில் 127 பேர் கொல்லப்பட்டனர். அந்தச் சோகம் இன்னும்மறையாதநிலையில்நேற்று முன்தினம் ஒரே நாளில் இடம்பெறவிருந்த இரு விமான விபத்துகள் அதிர்ஷ்டவசமாக தவிர்க்கப்பட்டன.

லாகூர் விமான நிலையத்தில் இருந்து ஷாகீன் நிறுவனத்தைச் சேர்ந்த பயணிகள் விமானம் புறப்பட்டது. அப்போது விமானத்தின்இயந்திரப் பகுதியிலிருந்து பெற்றோல் கசிந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து விமானி சாமர்த்தியமாக விமானத்தை மீண்டும் அங்கேயே தரை இறக்கினார். அதனால் 200 பயணிகள் காயமின்றி உயிர் தப்பினர்.

அதேபோன்று கராச்சி விமான நிலையத்தில் தரை இறங்கிய பயணிகள் விமானத்தின் சில்லு திடீரென வெடித்தது. இதனால் அது தாறுமாறாக ஓடி ஒருவழியாகப் பாதுகாப்பாக நின்றது. அதில் இருந்த 100 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இதுவும் சமீபத்தில் விபத்துக்குள்ளான 127 பேரைக் கொன்ற தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானமாகும்.

# சுவிற்ஸர்லாந்தில் பாய்ந்தது பாலாறு



லண்டன், ஏப்.25

9000 லீற்றர் பால் நிரப்பப்பட்ட பௌஸர் வாகனமொன்று வீதியில் குடைசாய்ந்ததால் அதில் உள்ளடக்கப்பட்டிருந்த பெருமளவான பால் வீதியில் சிதறி ஓடிய சம்பவம் சுவிற்ஸர்லாந்தில் இடம்பெற்றுள்ளது.

பௌஸர், துஸிஸ் நகரைநோக்கி சென்றுகொண்டிருந்தபோது, வளைவொன்றில் திருப்பப்படுகையில் கவிழ்ந்தது.

இந்த விபத்தின் காரணாமாக, தாங்கி உடைந்ததால் சுமார் 6000 லீற்றர் பால் வீதியில் பாய்ந்து ஓடி அருகிலிருந்த ஆற்றிலும் கலந்தது. இதனால் ஆறு பாலாறாக மாறிக் காட்சியளித்தது.

இந்த விபத்தைத் தொடர்ந்து அந்த வீதி வழியான போக்குவரத்துக்கு ஒரு மணித்தியாலம் வரை தடை விதிக்கப்பட்டிருந்தது.

வீதியிலும் ஆற்றிலும் சிந்தப்பட்ட பால் கழுவிச் செல்லப்பட்டுள்ளதால் பெரிய சூழல் பாதிப்பு எதுவும் ஏற்படாது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# அக்னி – 5 பாயும் தூரத்தை குறைக்க நேட்டோ அழுத்தம்

பிஜிங், ஏப்.25

இந்தியா சமீபத்தில் 5,000 கிலோ மீற்றர் தூரம் வரை விண்ணில் பாய்ந்து எதிரிகளின் இலக்கை துல்லியமாகத் தாக்கும் அக்னி-5 ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்து வெற்றி கண்டது.

இந்த நிலையில், நேட்டோ நாடுகளின் அழுத்தத்தால் ஏவுகணையின் பரிசோதனை தூரத்தை 9,000 கிலோ மீற்றரில் இருந்து 5,000 கிலோ மீற்றர் ஆகக் குறைக்கப்பட்டதாக சீனாவில் இருந்து வெளிவரும் குளோபல் ரைம்ஸ் எனும் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தப் பத்திரிகை, அக்னி-5 ஏவுகணைச் சோதனைக்கு முன்னரே சீனா இந்தியாவை காட்டிலும் அணுசக்தியிலும், ஏவுகணைத் தொழில் நுட்பத்திலும் பல மடங்கு முன்னேறியுள்ளதாகவும், அவை மிகவும் நம்பகத்தன்மை மிக்கதாக இருப்பதாகவும், எனவே இந்தியாவிற்கு இது போன்ற ஏவுகணை சோதனை தவிர்க்க இயலாத ஒன்று என தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மீண்டும் அந்தப் பத்திரிகையில் அக்னி-5 ஏவுகணை முதலில் 9,000 கிலோ மீற்றர் வரை செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்ததாகவும், நேட்டோ நாடுகளின் நிர்ப்பந்தத்தால் அது 5,000 கிலோ மீற்றர் ஆக இந்திய அரசு குறைத்ததாகவும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனித்தீவை விலைக்கு வாங்கிய ஆசிரியர்

லண்டன், ஏப்.25

இறந்தபின் தனது உடலையும், மனைவியின் உடலையும் புதைக்க பிரிட்டனில் குட்டித் தீவை விலைக்கு வாங்கி உள்ளார் ஓர் ஆசிரியர்.

பிரிட்டனின் ஹெர்ட் போர்ட் ஷயர் கவுன்டியில் உள்ளது செயின்ட் ஆல்பன்ஸ் நகரம். இங்கு மெக்கன்சி என்ற பெயரில் குட்டித் தீவு உள்ளது. இங்கு தண்ணீர், சாலைகள், மின்சார வசதி எதுவும் இல்லை. இந்தக் குட்டித் தீவு 18 மாதங்களுக்கு முன் விலைக்கு வந்தது. ஆனால், யாரும் வாங்கவில்லை. இந்த நிலையில், செயின்ட் ஆல்பன்ஸ் நகரில் உள்ள பீச்வுட் பார்க் பள்ளி ஆசிரியர் கசிமிர் ரோசின்ஸ்கி, குட்டித் தீவை 46 லட்சம் ரூபாவுக்கு வாங்கி உள்ளார். கசிமிருக்கு இப்போது 50 வயதாகிறது. மனைவி பவுலின், மகன் மைல்ஸ் மகள் லிடியாவுடன் வாழ்ந்து வருகிறார்.

இதுகுறித்து கசிமிர் கூறுகையில்; ''3 ஆண்டுக்கு முன்பு குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டேன். அது என்னை மிகவும் பாதித்தது. இறந்த பின் எனது உடலை அமைதியான இடத்தில் புதைக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்காக இந்த தீவை வாங்கி உள்ளேன். தீவுக்குச் செல்வது அவ்வளவு எளிதல்ல என்பது தெரியும். எனினும், உலகின் அழகிய இடங்களில் மெக்கன்சி தீவும் ஒன்று. நானும் எனது மனைவியும் இறந்த பின், இருவரின் உடலையும் இந்தத் தீவில்தான் புதைக்கவேண்டும் என்று குழந்தைகளிடம் கூறியுள்ளேன். அதை அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்'' என்றார்.



கனடாவின் ஒட்டோவா நகரில் நடைபெற்ற தொழில்துறை சார் மாநாட்டில் அந்த நாட்டு தொழில்துறை அமைச்சர் டென்மார்க் தொழில்துறை அமைச்சர் [illegible] வாதத்தில் ஈடுபடுகிறார்.

## தனயனின் சூட்டுக்கு இலக்கான தந்தை சாவு

சவுதிஅரேபியாவில்வீடியோ கேம் வாங்கித் தராத தந்தையை நான்கு வயது மகன் சுட்டுக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சவுதி அரேபியாவின் தெற்கு ஜிசான் பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளதாக அந்தநாட்டுஅஸ்ராக்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தந்தையிடம் பல நாள்களாக வீடியோ கேம் வாங்கித் தருமாறு நச்சரித்து கொண்டிருந்த அந்தச் சிறுவன் அலுவலகம் சென்ற தந்தை வெறும் கையுடன் வந்ததைப் பார்த்து கோபமடைந்துள்ளான்.

தந்தை உடை மாற்றும் போது கீழே வைத்த அவரது துப்பாக்கியை எடுத்து சுட்டான். இதில் தலையில் குண்டு பாய்ந்த தந்தை துடிதுடித்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சுனாமியால் அள்ளிச்சென்ற

# ஜப்பான் நாட்டுப் பந்து அமெரிக்காவில் மீட்பு



சண்டியாகோ, ஏப்.25

ஜப்பானில் கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமியில் அள்ளிச் செல்லப்பட்ட கால் பந்து ஒன்று அமெரிக்காவில் மீட்கப்பட்டு அதன் உரிமையாளரும் தேடிப்பிடிக்கப்பட்ட சம்பவம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஜப்பானில் சுனாமி வாரிச் சென்ற பொருள்கள் அனைத்தும் பசுபிக் கடலின் மறுமுனையான அலாஸ்கா, கனடா, வாஷிங்டன் உள்ளிட்ட பகுதிகளைச் சென்றடையும் என்று கூறப்பட்டு வந்தது. இவை அனேகமாக 2013 அல்லது 2014ஆம் ஆண்டு கரை சேரும் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தின் கடலோரத்தில் வந்து குவிந்த சுனாமி குப்பைகளில் கால்பந்து ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. அதில் உரிமையாளரின்பெயர் விவரம் இருந்தது. பந்தை மார்ச் மாதம் கண்டெடுத்த டேவிட் பக்ஸ்டெர் ஜப்பான் செய்தியாளர் ஒருவரின் உதவியுடன் உரிமையாளரைத் தேடும் பணியில் ஈடுபட்டார்.

கடைசியாக அந்தப் பந்து ஜப்பான் நர்ட்டின் ரிகுஜென்டாகாடா என்ற நகரத்தைச் சேர்ந்த முராகமி என்பவருக்குச் சொந்தமானது என்று தெரியவந்தது. இந்தத் தகவலை முராகமிக்குத் தெரிவித்த போது அவரால் இதை நம்ப முடியவில்லை.

வீட்டோடு தொலைந்து போன கால்பந்து 5 ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் மீட்கப்பட்டது மிகப் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது என்று அவர் ஊடகம் ஒன்றுக்கு அளித்தபேட்டியில் தெரிவித்துள்ளார். நம்பவே முடியவில்லைதான். ஆனாலும் கண்டெடுத்தவருக்கு மிக்க நன்றி என்று கூறியிருக்கிறார்.

கால்பந்தை கண்டெடுத்த தம்பதியினர் ஜப்பான் செல்லவும் திட்டமிட்டுள்ளனர். ஆனால் அவர்கள் முராகமியை நேரில் சந்தித்துப் பந்தை வழங்குவார்களா என்ற விவரம் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசை மிரட்டவில்லை -மம்தா



கொல்கத்தா, ஏப்.25

''மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வரித் தொகைக்கு கால அவகாசம் கேட்டேனே தவிர மிரட்டவில்லை'' என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தை ஆட்சி செய்த இடதுசாரி அரசு, இரண்டு லட்சம் கோடி ரூபா கடன் மிகுதி வைத்துள்ளது. இதற்கான வட்டியும் அதிகரித்துள்ளது. எனவே, இந்தத் தொகையை அறவிடுவதை மத்திய அரசு 3 ஆண்டு காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டும் என்று மம்தா பானர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் எழுதியிருந்தார். இவரது இந்தக் கடிதம் காங்கிரஸ்-திரிணமுல் காங்கிரஸ் உறவில் விரிசலை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், மத்திய அமைச்சர் கபில் சிபல், ''கூட்டணி அரசில் இதெல்லாம் சகஜமானது தான். இந்தப் பிரச்சினைக்கு பேசித் தீர்வு காண்போம்''- என்றார்.

இதுகுறித்து, மம்தா பானர்ஜி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கடன் தொகை மற்றும் வரித் தொகையைச் செலுத்த கால அவகாசம்தான் கேட்டேனே தவிர மத்திய அரசை மிரட்டவில்லை. ஊடகங்கள் என் கருத்தைத் திரித்துக் கூறுகின்றன. எனவே, நான் நான் பேசிய பேச்சுக்களையெல்லாம் மாநில அரசு பதிவு செய்து வைத்துக் கொள்கிறது. இதன் மூலம் நான் தவறாகப் பேசவில்லை என்பது நிரூபிக்கப்படும் -என்றார். (வ)

# குற்றமற்றவனாக வெளியே வருவேன் என்கிறார் ராசா

டில்லி, ஏப். 25

பிணையில் விடுதலையாக மாட்டேன்; குற்றமற்றவனாக வெளியே வருவேன் என்று 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு சர்ச்சையில் கைதாகி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆ.ராசா தெரிவித்தார்.



2 'ஜி' ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு சர்ச்சையில் கைதாகி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் ராசா.

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு சர்ச்சையில் தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த ஆ.ராசா மற்றும் அந்தத் துறை அதிகாரிகள் என்று பத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். அனைவரும் டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ராசா கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டார். அதிலிருந்து அவர் தொடர்ந்து சிறையில் இருந்து வருகிறார். இவருடன் கைது செய்யப்பட்டவர்களில் தொலைத் தொடர்புத்துறை முன்னாள் செயலாளர் சித்தார்த் பெகுரா தவிர மற்றவர்கள் அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பெகுராவின் பிணை மனுவை விசாரணை நீதிமன்றம் நிராகரித்து விட்டது. எனவே உச்ச நீதிமன்றத்தில் அவர் மேன்முறையீடு செய்துள்ளார். அவரது பிணை மனு நிலுவையில் உள்ளது. ஆனால் ஆ.ராசா தரப்பில் இதுவரை பிணை கேட்டு மனு தாக்கல் செய்யப்படவில்லை.

இந்தநிலையில் 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணை நடைபெற்றுவரும் பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றத்துக்கு ஆ.ராசா அழைத்து வரப்பட்டிருந்தார்.

அங்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

''நான் பிணையில் விடுதலையாக விரும்பவில்லை. குற்றமற்றவனாக வெளியே வரவே விரும்புகிறேன். 2ஜி வழக்கில் தற்போது சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. எனது முழுக் கவனத்தையும் அதன் மீதுதான் செலுத்தி வருகிறேன். வழக்கு மத்திய புலனாய்வுத்துறை சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இதற்கு மேல் விரிவாக விவரிக்க விரும்பவில்லை''- என்றார் அவர். (வ)



ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் மகா சமாதியடைந்த முதலாவது ஆண்டு நிறைவு நாள் புட்டபர்த்தியில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் உலகின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் திரளாக வந்து கலந்துகொண்டனர்.

# கூடங்குளத்தில் இன்னும் 40 நாளில் மின் உற்பத்தி

## மத்திய இணை அமைச்சர் உறுதி

தமிழகத்தில் ரஷ்ய உதவியுடன் கட்டப்பட்டுள்ள கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதல் உலையில் இன்னும் 40 நாள்களில் மின் உற்பத்தி செய்யப்படும் என்று மத்திய இணை அமைச்சர் வி. நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு உலைக்கு எதிராகக் கடந்த சில மாதங்களாக நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தால் அங்கு பணிகள் பாதிக்கப்பட்டன.

அந்த அணு உலையைத் திறப்பதற்கு ஒத்துழைப்புத் தர தமிழக அரசு முடிவு செய்ததை அடுத்து, உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. எனினும், தங்களது போராட்டம் தொடரும் என்று போராட்டக் குழுவின் தலைவர் எஸ்.பி. உதயகுமார் அறிவித்திருக்கிறார்.

இந்தநிலையில், கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதலாவது அணு உலையில் இன்னும் 40 நாள்களில் உற்பத்தி ஆரம்பமாகும் என்று அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

அணுமின் நிலையத்துக்கு சான்றிதழ் வழங்கும் அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து 10 நாள்களில் சான்றிதழ் வழங்குவர். அதன் பின்னர் யுரேனியத்தை அணுமின் நிலையத்தில் ஏற்றி வெள்ளோட்டம் விடப்பட்டு, 20 நாள் பரிசோதிக்கப்படும். எனவே, அடுத்த 40 நாள்களுக்குள் மின் உற்பத்தி ஆரம்பமாகிவிடும்.

முதலாவது அணு உலை செயற்படத்தொடங்கிய இரண்டு மாதங்களுக்குள் இரண்டாவது உலையும் உற்பத்தியை ஆரம்பிக்கும்.

கூடங்குளம் அணுமின் நிலைய அணுக்கழிவுகளை பாதுகாப்பாக சேமிப்பதற்கு, தாராபூரில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை முழுமையாக தமிழகத்துக்கு வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் வைத்துள்ள கோரிக்கை குறித்து, மத்திய அரசு பரிசீலித்து வருகின்றது.

இதேவேளை, குடங்குளப்போராட்டக்குழுத் தலைவர்;

''அமைச்சர் கூறுவதைப் போல, 40 நாள்களில் மின் உற்பத்தியை ஆரம்பிக்க முடியாது. மேலும், அணுமின் நிலையம் செயற்படத் தொடங்கிய பின்னர் அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்றும், சாதகமான அரசு அமைந்தால் அது சாத்தியம் தான்''-என்றார். (வ)

## தர்மபுரியில் நிலநடுக்கம்

தர்மபுரி மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் நேற்று முன்தினம் இரவு 11.28 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் தர்மபுரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள குமாரசாமிப்பட்டி, காந்திநகர், நெடுமாறன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்கள் வீட்டை விட்டு வெளியே வந்து நின்றனர்.

தர்மபுரியில் பதிவான இந்தநிலநடுக்கம் சேலம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் பதிந்துள்ளது.

மேலும் இந்தநிலநடுக்கம் குறித்து வானிலை நிலைய அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

தர்மபுரி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு 11.28 மணியளவில் நில அதிர்வு ஏற்பட்டு இருப்பதாக பதிவாகி இருக்கிறது. அந்நேரத்தில் வெடிச் சத்தம் போன்று பயங்கர சத்தமும் ஏற்பட்டுள்ளது - என்றனர்.(வ)

## இத்தாலி விவகாரம்: மத்திய அரசுக்கு அழைப்பாணை

டில்லி, ஏப்.25

சிறையில் உள்ள இத்தாலியர்கள் குறித்த வழக்கில் உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இந்திய கடல்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை இத்தாலியக் கடற்படையினர் சுட்டுக் கொன்றனர். இது குறித்து இத்தாலிய கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்டுள்ளனர். இதனை எதிர்த்து இத்தாலி அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், இத்தாலிய அதிகாரிகள் சர்வதேச கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். இவர்களைக் கைது செய்யும் அதிகாரம் கேரள அரசுக்கு இல்லை என்று கூறியுள்ளது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் இத்தாலி அரசின் மனு குறித்து மே மாதம் 8 ஆம் திகதிக்குள் பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.(வ)

## தனித் தாயகமே தீர்வு

### காஷ்மீர் அமைப்பு கோருகிறது

காஷ்மீரைத் தனித்தாயகமாக பிரித்துத் தருமாறு காஷ்மீர் அமைப்பு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

காஷ்மீரில் பண்டிட்கள் என்னும் இனத்தவர் நெடுங்காலமாக காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இந்தநிலையில் அவர்களை அந்த நிலப் பகுதிகளில் இருந்து தீவிரவாதிகள் விரட்டி வெளியேற்றினர்.

இதையடுத்து பண்டிட்களை மீண்டும் அந்தப்பகுதிகளில் மீள்குடியமர்த்துவதற்கான முயற்சிகளை காஷ்மீர் அரசு மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக, சில நகர்பகுதிகளை ஒதுக்கித் தருவதாக காஷ்மீர் அரசு அறிவித்தது. ஆனால் இதை ஏற்க பண்டிட்கள் மறுத்து விட்டனர்.

இதுகுறித்து அந்த அமைப்புத் தலைவர் அஸ்வாணி குமார் சாருங்கோ தெரிவித்ததாவது:-

காஷ்மீரில் தங்களுக்கென தனித் தாயகமே நிரந்தரமான தீர்வு என்றும், தற்போது அறிவித்திருக்கும் தீர்வை ஏற்க இயலாது. தனி நபரொருவருக்கோ, குழுவுக்கோ நகரை வழங்கு வதை ஏற்க இயலாது என்றும் காஷ்மீர் பண்டிட்கள் மீண்டும் காஷ்மீரில் மீள்குடிய மர்வதற்கு காஷ்மீரில் தனித் தாயகமே தீர்வு.

இது மிகவும் தீவிரமான பிரச்சினை என்றும் இது குறித்து அரசு பிரிவினைவாதிகளுடன் சமரசம் செய்து கொள்வதை ஏற்க இயலாது.

காஷ்மீர் பண்டிட்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்கும் விதத்தில் அரசு நடக்க வேண்டும் - என்றார் அவர். (வ)

## குழந்தை திருமணம்; தடுத்தவர்கள் தாக்கப்பட்டனர்

குழந்தைத் திருமணத்தைத் தடுக்க முயன்ற அதிகாரிகள், தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்றுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜலவார் மாவட்டத்தில் உள்ள பிரித்திவிபுரா கிராமத்தில் 42 ஜோடி குழந்தைகளுக்கு திருமணம் நடைபெறுவதாக அதிகாரிகளுக்குத் ரகசியத் தகவல் ஒன்று கிடைத்தது.

இதனையடுத்து மாவட்ட நிர்வாக அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் திருமணத்தைத் தடுத்து நிறுத்த முயன்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அந்தக்கிராம மக்கள் அதிகாரிகள் மீது கற்கள் வீசி தாக்குதல் நடத்தினர்.

பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் அதிகாரிகள் ... குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன.(வ)

## இராணுவத் தளபதி மீதான வழக்கு; நிராகரித்தது உச்ச நீதிமன்றம்



டில்லி, ஏப்.25

புதிய ராணுவத்தளபதியாக பிக்ரம் சிங்கை நியமிக்க எதிர்ப்புத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட பொதுநலன் மனுவை உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

காஷ்மீர் மாநிலத்தில் நடத்தப்பட்ட தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்களில் பிக்ரம் சிங்கிற்கு தொடர்பிருப்பதால் அவரை புதிய ராணுவத் தளபதியாக நியமிக்கக் கூடாது என்று ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் குழு பொதுநலன் மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் கோபாலசாமி, ஓய்வுபெற்ற கடற்படை தளபதி அட்மிரல் லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய குழு இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தது.

மேற்படி மனுவை நேற்று முன்தினம் காலை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் லோதா மற்றும் கோகலே ஆகியோர் அடங்கிய குழு பிற்பகல் 2 மணிக்குள் பிக்ரம்சிங்கின் பணிப் பதிவேட்டைத் தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டனர். இதையடுத்து மத்திய அரசும் பணிப் பதிவேட்டைத் தாக்கல் செய்தது.

பின்னர் விசாரணை நடத்திய நீதிபதிகள், பிக்ரம்சிங் நியமனமானது அரசின் முடிவு என்பதால் இதில் தாங்கள் தலையிட முடியாது என்று கூறி பொதுநலன் மனுவை நிராகரிப்புச் செய்து உத்தரவிட்டனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கட்டுமுறிவு குளம் புனரமைப்பு

எருவில்,ஏப்.25

போரால் முற்றாகச் சேதமடைந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான வாகரை, கட்டுமுறிவுகுளம் 4 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாக மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.மோகனராஜ் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் இந்தக்குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றதுஎன்று அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குளத்தினூடாக சுமார் 800 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்கமுடியும் என்று அவர் தெரிவித்தார். (ச)



மாலைதீவுக்கு சென்றுள்ள கிழக்கு மாகாண சபை உறுப்பனர் ஏ.எம்.ஜெமீல் மாலைதீவின் மனித வள, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் அப்துல்லா ரிபாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

### ஹற்றன்-நுவரெலியா வீதியில்

## அவதானமாகப் பயணிக்க சாரதிகளுக்கு அறிவுறுத்து

கண்டி,ஏப்.25

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியை அகலப்படுத்தும் பணிகள் தற்போது இடம்பெற்றுவருவதால் இந்த வீதியினூடாகப் பயணிக்கின்ற வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு நுவரெலியா மாவட்டச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் இருமருங்கிலுமுள்ள மண்திட்டுக்கள் வெட்டி அப்புறப்படுத்தப்படுகின்றன. தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் வீதியில் சறுக்கும் தன்மை ஏற்பட்டுள்ளது. இந்த வீதியில் மண்சரிவுகளும் ஏற்படுகின்றன.

**மழையுடன் கூடிய கால நிலை நிலவுவதால் வீதியில் சறுக்கும் தன்மை ஏற்பட்டுள்ளது.**

இவற்றைக் கருத்திற்கொண்டு இந்த வீதியால் வாகனங்களைச் செலுத்துகின்றவர்கள் அவதானமாக செயற்படவேண்டும் என்று சாரதிகளிடம் அவர் கோரியுள்ளார். (ச)

### கிழக்கு மாகாணசபைத் தேர்தல்:

## அம்பாறையில் புது முகங்களை மக்கள் காங்கிரஸ் களமிறக்கும்

ஆலிம்நகர், ஏப். 25

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பேச்சு சூடுபிடித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், அம்பாறை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்குப் புதிய முகங்களைக் களமிறக்குவது தொடர்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆலோசித்து வருகிறது என்று கட்சியின் செயலாளர் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மூன்று உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இதில் குறிப்பாக தற்போதைய பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இந்தத்தேர்தலில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகள் பெற்று வெற்றி பெற்றும் கிழக்கு மாகாண சபை முதலமைச்சராவதற்கு சந்தர்ப்பம் இருந்தும் கூட பின்னர் அது மாற்றியமைக்கப்பட்டது என்று அவர் கூறினார். (ச)

# அசுத்த நீரை விநியோகித்த அதிகாரிகள் நீதிமன்றில்

### முன்னிலைப்படுத்துமாறு நுவரெலியா நீதிமன்று உத்தரவு

நுவரெலியா,ஏப்.25

பாவனைக்கு உதவாத நீரை விநியோகித்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தலைவர் மற்றும் அதிகாரிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நுவரெலியா நீதிவான் சமன்ஜி காரியவசம் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் தலவாக்கலை - லிந்துலை நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு அசுத்தமான குடிதண்ணீர் விநியோகித்ததாக குற்றம் சுமத்தி நகர சபை சுகாதார பரிசோதகர்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைத் தலைவர், அதிகாரிகள் மற்றும் தலவாக்கலை நீர் வழங்கல் சபை பணியாளர்கள் நால்வர் ஆகியோரை நாளை வியாழக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

**குடிதண்ணீரை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது பாவனைக்கு உதவாதது என்று உறுதி செய்யப்பட்டது. இதனால் அதிகாரிகளுக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டது.**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் லிந்துலை பகுதிக்கு விநியோகிக்கப் பட்ட குடிதண்ணீரைப் பருகிய சிலர் நோய் வாய்ப்பட்டதுடன் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மக்கள் பயன்படுத்திய குறித்த தண்ணீர், கொழும்பு பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோதனையின்போது, மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட குடிதண்ணீர் பாவனைக்கு உதவாதது என்று உறுதி செய்யப்பட் டது.

இந்தப் பரிசோதனை அறிக்கை நேற்றுமுன்தினம் நுவரெலியா நீதிவான் நீதிமன்றில், தலவாக்கலை - லிந்துலை நகரசபை சுகாதார பரிசோதகர்களால் சமர்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச)

## இலவச கல்விக் கொள்கை மீளாய்வு அவசியம்

### கிழக்கு மாகாண கல்வியமைச்சர் கோருகிறார்

நுவரெலியா,ஏப்.25

இலவசக் கல்விக் கொள்கையை மீள் பரிசீலனைக்கு அவசியம் உட்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று மத்திய மாகாண கல்வியமைச் சர் சரத் ஏக்கநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.



கம்பளை, கஹட்டபிடிய அல்மினா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலையின் அறுபதாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் கல்விக் கொள்கையுடன் மாகாணங்களின் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதன் மூலம் கல்வியின் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியும்.

இலவச கல்வி முறையை முழுமையாக நடைமுறைப்படுத்தும் இந்த நாட்டில் சிறைக்கூடங்களில் கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. மத்திய மாகாணத்தில் சகல பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய மாகாண அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது- என்றார். (ச)

## சுழல் காற்றால் பறந்தது கூரை

கல்முனை,ஏப்.25

கல்முனை பிரதேசத்தில் வீசிய சுழல் காற்றினால் கல்முனை கிறீன்பீல்ட் றோயல் வித்தியாலயத்தின் வகுப்பறைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.



இந்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை திடீரென வீசிய சுழல் காற்றினால் கிறீன்பீல் றோயல் வித்தியாலயத்தின் வகுப்பறையின் கூரைத் தகடுகள் வீசியெறியப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலை இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்குள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் அதிகாரி சேவையிலிருந்து இடைநிறுத்தம்

கண்டி,ஏப்.25

கண்டி, குண்டசாலை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி மொஹமட் நஸீம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் பிரதேசத்தில் இவர் செலுத்திய பொலிஸ் வாகனம் விபத்துக்குள்ளான சம்பவத்தை அடுத்தே, சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் அதிகாரி களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு கடமை நிமித்தம் பஸ்ஸில் சென்று வருவதற்கே பொலிஸ் தலைமையகத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் இவர் பொலிஸ் வாகனத்தில் சென்றுள்ளதுடன், சிலாபம் பகுதிக்கும் சென்று விபத்துக்குள்ளாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பாலைப்பழம் அதிக விளைச்சல் வியாபாரிகளுக்கு அதிக இலாபம்

எருவில்,ஏப்.25

வாகரைப்பிரதேச மக்கள் பாலைப்பழத்தால் அதிக் வருமானத்தைப் பெற்றுவருகின்றனர்.

அடர்ந்த காட்டுப்பகுதியில் வளர்ந்துள்ள பாலை மரங்களில் காய்த்துக்குலுங்கும் பாலைப்பழங்களை மக்கள் பறித்துவந்து காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளிலிருந்து செல்லும் வியாபாரிகளுக்கு ஒரு கொத்து 50 ரூபா தொடக்கம் 70 ரூபா வரை விற்பனை செய்கின்றனர்.

இதனை மட்டக்களப்பு நகரப்புறங்களிலுள்ள சந்தைகளிலும் கிராமப் புறங்களுக்கும் கொண்டு சென்று ஒரு கொத்து 150 முதல் 250 ரூபாய் வரை விற்பனை செய்து செய்கின்றார்.

வாகரை காட்டுப்பகுமிலேயே அதிகளவில் உற்பத்தியாகும் பாலைப்பழம் பறிக்கும் பணிகளில் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

பெரும் கஷ்டங்களில் மத்தியில் இந்தப் பழங்களை பறிக்கும் கிராம மக்கள் மிகச் சிறிய தொகையை வருமானமாக பெறும் அதேவேளை அதனை கொள்வனவு செய்து விற்றுவரும் வியாபாரிகள் பெரும் இலாபம் ஈட்டி வருகின்றனர். ஒரு பாலைப் பழ வியாபாரி சராசரியாக 3ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## கஹவத்தை இரட்டைக்கொலை 4 பேருக்கும் மறியல் நீடிப்பு

கஹவத்தை,ஏப்.25

கஹவத்தையில் இடம்பெற்ற தாய், மகள் இரட்டை கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் பெல்மடுல்ல நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் 7ஆவது முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கொலை செய்யப்பட்டவர்களின் நகங்களை டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(4)

படித்து முடித்த பின் நல்ல வேலை கிடைக்க வேண்டுமே என்கிற கவலை, நல்ல வாழ்க்கைத்துணை அமைய வேண்டுமே என்கிற கவலை, இவையெல்லாம் நியாயமான கவலைகள்தான், இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், பைசா பெறாததற்கெல்லாம் கவலைப்படுகிறவர்களை எதில் சேர்ப்பது. ஒரு போதும் நடக்காமலே போய் விடுகிற அல்லது எப்போதோ நடக்கப் போகிற ஒன்றுக் காகக் கவலைப்பட்டு இந்தக் கணத்தின் மகிழ்ச்சியைத் தொலைத்து விடுகிறவர்கள் இவர்கள்.

*''கடைகளில் தரமற்றதை வாங்கிடுவோமோ''*
*''வண்டி வழியில் நின்று விடுமோ''*
*'' சாப்பிட்டு வைத்தது செமிக்குமோ, செமிக்காதோ''*
*''மேலதிகாரி குற்றம் கண்டு பிடித்து விடுவாரோ...''*

இப்படி எடுத்ததற்கெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் அடுத்த அடியையே எடுத்து வைக்க முடியாது.

**நீங்கள் பார்க்கத் தவறிய கோணத்தில்**

சிறியதோ பெரியதோ பிரச்சினை என்றாலே கவலை தான். சிலர் தலைக்குமேல் சொந்தப் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு அடுத்தவர் பிரச்சினையிலும் மூக்கை நுழைப்பார்கள்.

அது வேண்டாத கவலைகளைத் தானே வலிய வரவழைத்துக் கொள்கிற செயலாகும்.

பிரச்சினை ஒரு சுமை. அது பற்றிக் கவலைப்படுவது இன்னொரு சுமை. சிலர் கவலைகளைத் தங்களுக்குள்ளாக வைத்துக் கொண்டு புழுங்குவார்கள். சிலரோ தங்களுடைய சுமையை யார் தோளில் இறக்கி வைக்கலாம் என்று பார்ப்பார்கள்.

சில விசயங்களைத் தொட்டால் பிரச்சினையாகிவிடும். சிலவற்றைத் தொடாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்.

நம்மால் தீர்வுகாண முடியாத பிரச்சினை என்று எதுவுமேயில்லை. தீர்வு கிடைக்கவில்லை என்றால் நம்முடைய அணுகுமுறை தவறானது என்றுதான் அர்த்தம். பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மேலதிகாரி நண்பர்கள். குடும்ப உறவுகளின் உதவியை நாடலாம். நாம் பார்க்கத் தவறிய கோணத்தில் அவர்கள் பிரச்சினையைப் பார்க்கக் கூடும். ஒரு சிறந்த தீர்வை அவர்கள் மூலம் பெறமுடியும் என்கிற நிலை இருக்கிறதுதானே! பிறகென்ன கவலையை விடுங்கள்.

**நேற்று, இன்று, நாளை**

நேற்று என்பது இன்றில்லை. நாளை என்பது இன்னும் பிறக்கவில்லை. அன்றைய பொழுதை மட்டுமே அன்றன்று வாழ வேண்டியவர்கள் நாம்.

***என்ன செய்வது?***
***எங்கே போவது?***
***எப்படி வாழ்வது?***

படிக்கிற காலத்திலேயே தொடங்கிவிடுகிறது இந்தக் கேள்விகள், இந்தக் கவலைகள்.

**கைக்கெட்டும் மகிழ்ச்சி**

டாக்டர் வில்லியம் ஆஸ்லர்- அந்தக் காலத்தில் (1870 களில்) புகழ்பெற்ற மருத்துவர். உலகப் புகழ் பெற்ற ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவக் கல்வி நிலையத்தை நிறுவியவர். ஆக்ஸ் போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர். தம்முடைய வாழ்க்கைக் கதையை 1466 பக்கங்கள் கொண்ட இரண்டு பெரிய தொகுப்புக்களாகத் தந்தவர் இவர்.

வில்லியம் ஆஸ்லருக்கு கீழ்க்கண்ட வாசகம் ரொம்பப் பிடித்தமானது. 'எங்கோ தொலைவில் மங்கலாய் தெரிவதைக் காண்பதல்ல உங்கள் வேலை, உங்கள் கையருகில் தெளிவாக இருப்பதைக் கண்டடையுங்கள். 'கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன்' என்கிற பழமொழி போன்றதுதான் இதுவும்.

'இருப்பதில் மகிழ்ச்சிகொள். இல்லாததை எண்ணி வருத்தப்படாதே' என்கிற கருத்து வெறும் ஆன்மிக உபதேசம் அல்ல. நல்வாழ்விற்கான உபாயம்!

**வீண் சுமைகள் வேண்டாம்**

ஐந்து கண்டங்களைச் சுற்றி நீண்ட பயணம் மேற்கொள்கிறது ஒரு பெரிய கப்பல். அந்தக் கப்பலைக் கட்டுப்பாட்டில் வைக்க பல கருவிகள்.

அந்தக் கப்பலை விடவும் சிறந்த மனிதன், தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். உங்கள் பயணம் பாதுகாப்பாக அமைய வேண்டும் என்றால் கட்டுப்பாடாக இருங்கள்.

கப்பல் தண்ணீர் புகாத அமைப்புக் கொண்டது. உங்கள் வாழ்க்கையில் கடந்த கால மிச்சங்களுக்கு இடமில்லை. இன்னும் தோன்றியிராத எதிர்காலம் பற்றிய ஊகங்களுக்கும் இடமில்லை. கடந்த காலமோ எதிர்காலமோ உங்கள் நிகழ் காலத்தில் ஊடுருவி விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.'

'கடந்த காலக் கவலைகளைச் சுமக்காதீர்கள். அவற்றைக் குழி தோண்டிப் புதைத்து விடுங்கள். எதிர்கால அச்சங்களைச் சுமக்காதீர்கள்.

அவற்றைத் தொலைதூரத்தில் இருக்க விடுங்கள்' என்று ஆஸ்லர் கூறியிருந்தார். பல்கலைக்கழக மாணவர்களிடையே உரையாற்றியபோதே இதனை அவர் குறிப்பிட்டார்.

-சி.எஸ்.தேவநாதன் *(தொடரும்)*

# மாணவர்களின் வாசிப்புத் திறனை அதிகரிக்க நூலகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்

## வேலணை பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபையின் கீழ் உள்ள 54 நூலகங்கள் பிரதேச அபிவிருத்திக்காகவும், மாணவர்களின் சிந்தனை சக்தியை அதிகரிப்பதற்காகவும் அறிவை வழங்கும் இல்லங்களாகச் செயற்படுகின்றன.

வேலணை,ஏப்.25

தீவகப் பகுதியில் மாணவர்களின் வாசிப்புத்திறன் அருகி வருவதாகவும், இதனைக் கட்டியெழுப்ப நூலகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளதாகவும் வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் செ.ரமேஷ் தெரிவித்தார்.

தீவக பிரதேசத்துக்கு உட்பட்ட நூலக அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் கடந்தவாரம் வேலணைப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபையின் கீழ் உள்ள 54 நூலகங்கள் பிரதேச அபிவிருத்திக்காகவும் மாணவர்களின் சிந்தனை சக்தியை அதிகரிப்பதற்காகவும் அறிவை வழங்கும் இல்லங்களாகச் செயற்படுகின்றன.

வேலணை, காரைநகர், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களில் உள்ள நூலகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

நூலகங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதன் மூலம் சிறந்த ஒரு மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

தீவக பிரதேசங்களில் நூலகங்களை அபிவிருத்தி செய்வதன் முதல் கட்டமாக சிறந்த நூல்களை அறிமுகம் செய்ய வேண்டும். இதன் மூலம் உலகத்தில் உள்ள எமக்குத் தேவையான நூல்களை கொள்வனவு செய்வதால் அந்த நூலகத்தின் பெறுமதியில் மாணவர்களின் வாசிப்புத் திறனும் அறிவுத் திறனும் மேலோங்கும்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறந்த நூலகமாகக் கொண்டுவரும்போது தீவகப் பகுதியில் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்- என்றார். (எ)



கோண்டாவில் பொது நூலகத்தின் நூலக மேம்பாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மருத்துவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-14)

## சிறுவர் பகுதி திறப்பும், சான்றிதழ் வழங்கலும்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் நெல்லியடி, வதிரி பொதுநூலகத்தில் இன்று சிறுவர் பகுதி, புதிதாகத் திறந்து வைக்கப்பட்டு மகளிர் தினம், உலக புத்தக தினம் ஆகியவை தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**உலக புத்தக தினம்**

மேற்பிரிவு சஞ்சிகை ஆக்கம் - இரவி - யா/ உடுப் பிட்டி ம.கல்லூரி (யாழ்.மாவட்டத்தில் முதலாமிடம்).

கீழ்ப்பிரிவு சஞ்சிகை ஆக்கம் - இளந்தளிர் - யா/ மாணிக்கவாசகர் வித்தி., செவ்வந்தி- யா/ உடுப்பிட்டி ம.கல்லூரி, அரும்பு - யா/ நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.

**மகளிர் தினம் - மேற்பிரிவு**

முதலாமிடம் -ஸ்ரீ.கேதிகா, நா.நர்மதா, இரண்டாமிடம் - சி.பிரியங்கா, தி. கலைவாணி, மூன்றாமிடம் - க.சஞ்சீபா. (எ)

# வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி,ஏப்.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் வருமாறு:-

**வாசிப்பு- பிரிவு 1**

முதலாமிடம் ந.சரண்யா - யா/ இந்து ஆரம்பப் பாடசாலை, இரண்டாமிடம் ந.வினிஸ்ரா - யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை, மூன்றாமிடம் - பு.கஜனா - யா/ நாவற்குழி ம.வி., சு.ஆஞ்சிகன் -யா/கைதடி நுணாவில் அ.த.க.

**வாசிப்பு - பிரிவு 2**

முதலாமிடம் - யோ.சைந்தவி - யா/கச்சாய் அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம் - றெ.சாரங்கா - யா/ மட்டுவில் அ.மி.த.க.பாடசாலை, மூன்றாமிடம் - சி.தமிழினி - யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி, சி.கஜந்தினி - யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை.

**கதைகூறல் - பிரிவு 1**

முதலாமிடம் - சி.அபிஜன் - யா/ சாவ.மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - அ.அபிசாந் - யா/கைதடி சேது காவலர் வித்தி, மூன்றாமிடம் - சி.மதுரங்கா - யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை.

**பேச்சு - பிரிவு 1**

முதலாமிடம் - ப.செந்தூரி யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, இரண்டாமிடம் - கு.தமிழினி - யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் - சி.கீர்த்திகா - யா/ இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய ம.வி.

**பேச்சு - பிரிவு 2**

முதலாமிடம் - செ.இளங்கதிர் - யா/ சாவ.இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் - தே.தீபிகா - யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - த.ஜீவிதா - யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை.

**பேச்சு - பிரிவு 3**

முதலாமிடம் - பி.மேரிசிந்துஜா - யா/மிருசுவில் றோ.க.த.க.பா, இரண்டாமிடம் -ந.அநிந்தினி யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தி, மூன்றாமிடம் - க.சாளினி, யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தி,

**பேச்சு - பிரிவு 4**

முதலாமிடம் - லி.துருபதன் - யா/ உசன் இராமநாதன் ம.வி., இரண்டாமிடம் - ச.மதூசா - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - கு.வருதி - யா/மட்டுவில் கமலாசினி வித்தி.

**பேச்சு -பிரிவு 5**

முதலாமிடம் - ஸ்ரீ.ரூபகானன் - யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி, இரண்டாமிடம் - த.பவப்பிரியா - யா/ உசன் இராமநாதன் ம.வி., மூன்றாமிடம் - சி. ஆண்டனியா - யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

**பாவோதல் - பிரிவு 1**

முதலாமிடம் - நி.சமீனா - யா/ மிருசுவில் அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம் - செ.கிளமன்ற் மேரி - யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தி, மூன்றாமிடம் - சி.சைஸ்ஸகா - யா/ மீசாலை விக்னேஸ்வரா வித்தி.

**பாவோதல் - பிரிவு 3**

முதலாமிடம் - சூ.பிரேனுகா - யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - பு.பிரதீபா - யா/ கொடி.திருநாவுக்கரசு ம.வி, மூன்றாமிடம் - இ.அசை சுதர்சினி - யா/ மிருசுவில் றோ.க.பா., க.மதுசிகா - யா/கொடிகாமம் அ.த.க. பாடசாலை.

**பாவோதல் - பிரிவு 4**

முதலாமிடம் - சூ.சிந்திர்லா - யா/ மட்டுவில் சந்திரமௌலீச ம.வி, இரண்டாமிடம் - அ.ரேனுகா - யா/ சாவ.டிறிபேக் கல்லூரி, மூன்றாமிடம் - வி.கார்த்திகாயினி- யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

**பாவோதல் - பிரிவு - 5**

முதலாமிடம் - கை.ஜீவனா - யா/ மீசாலை வீரசிங்கம் மத்தி கல்லூரி, இரண்டாமிடம் - ப.சரித்திகா- யா/ கொடி.. திருநாவுக்கரசு ம.வி,

**இசையும் அசைவும் - பிரிவு 1**

முதலாமிடம் - சு.கோபினி - யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இரண்டாமிடம் - அ.கபிலன் - யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - இ.அபிராமி - யா/ மட்டுவில் கமலாசினி வித்தி.

*(தொடரும்)* *(எ)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** ஒரு காரியத்தை முடிக்க திட்டத்தோடு செயற்படுவீர்கள், செய்தும் முடிப்பீர்கள். சில உதவிகள் சந்தோஷத்தை கூடுதலாக்கும். விருந்து, விசேடங்களில் சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். எதிர்பார்த்த நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரும். மாலையில் தெய்வ வழிபாடு ஒன்று மேற்கொள்வீர்கள்.

**இடபம்:** தங்களின் வார்த்தைகளில் நிதானமும், நகைச்சுவையும் அதிகமாக இருக்கும். தொல்லை கொடுத்து வந்தவர்கள், தோள்கொடுக்க, முன்வருவர். பணவரவு திருப்தி தரும். உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்டிருந்த குறைபாடு அகன்று, தைரியம் கூடும். விரும்பிய ஒருவரை நினைத்தபடி சந்தித்துப் பேசுவீர்கள்.

**மிதுனம்:** எதிலும், முன்யோசனையோடு செயற்படுவீர்கள். பிறர், தங்களின் ஆலோசனையை எதிர்பார்க்கக் கூடிய சூழ்நிலையே. வீட்டு விவகாரங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சக நண்பர்களால் உருவான சிக்கல்களை, வெற்றிகரமாக முறியடிப்பீர்கள். குழந்தைகளுக்காக, தாராளமாகச் செலவு செய்வீர்கள்.

**கடகம்:** அடுத்தடுத்து காரியங்களை மேற்கொள்ளவேண்டிய இருக்கும். உடல்நிலையை பொருட்படுத்தாமல், தொடர்ந்து செயற்படுவீர்கள். குடும்ப விடயங்களில் நினைத்ததற்கு மாறாக, சில விடயங்கள் நடக்கும். பெரிதுபடுத்திக்கொள்ளாதீர்கள். பெண்களால் நன்மைகள் உண்டு.

**சிங்கம்:** தேவையற்ற குழப்பங்கள் வந்து விலகும். எதிர்பார்ப்புக்கு மேலாக, சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பணவரவுகள் தாமதமானபோதும், வந்து சேரும். குடும்பத்தில் நிலவும், சச்சரவு ஒன்று தீர்வுக்கு வரும். பணம் கொடுக்கல், வாங்கலில் நாணயத்தைக் காப்பாற்றி திருப்தி அடைவீர்கள்.

**கன்னி:** பெருந்தன்மையான செயற்பாடுகளால், பாராட்டுப் பெறுவீர்கள். சில விடயங்களை தெரிந்துவைத்திருந்தபோதும், தெரியாத மாதிரி காட்டிக்கொள்வீர்கள். தொழில் பங்குதாரர்களிடம், அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள். உறவினர், ஒருவரின் சந்திப்பு பயன் தரும். பயணங்களை தள்ளி வைப்பது நலம் தரும்.

**நாளை**

சித்திரை 14 வியாழக்கிழமை 26.04.2012
திதி: பஞ்சமி 09.54 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.ப 10.05 வரை
சுபநேரம்: 07.29- 08.59 வரை
ராகு காலம்: 01.29- 02.59 வரை

**துலாம்:** எதிலும், தடை தாமதங்கள் அதிகமாக இருக்கும். தங்களிடம் ஒப்படைத்த வேலைகளை, குறித்த நேரத்துக்குள் முடிக்க முடியாமல் திணறலாம். பணப்பற்றாக்குறையைச் சந்திக்க நேரிடலாம். குடும்பத்தில், சில நபர்களின் வருகை தேவையற்ற சர்ச்சையை ஏற்படுத்தும். தொழில் ரீதியாக, சிலர் உங்களிடம் உதவி நாடி வரலாம்.

**விருச்சிகம்:** புதியவர்களின் அறிமுகம் கிட்டும். ஒரு பணிக்காக, இருமுறை அலைச்சல் இருக்கும். பெற்றோருக்காக, சில செலவுகளை மேற்கொள்ள வேண்டிய இருக்கும். தொலைபேசித் தகவல்கள், தொல்லை தருவதாக அமையலாம். தொழிலில் போட்டிகள் அதிகம் யோசிக்க வைக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள். சில காரியங்களை முடிக்க, தாங்கள் கையாளும் வியூகம், தங்களுக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தும். வெளியூர் பயணங்களால் அலைச்சல்களைச் சந்திக்க நேரிடலாம். பணவரவு உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி பெற போராட வேண்டும்.

**மகரம்:** எதிர்பாராதவிதமாக, மனநிலையில் தயக்கம் குடிக்கொள்ளும். இதனால் மேற்கொள்ளும் காரியங்களில் திருப்தி நிலவும். கொஞ்சம் மனநிலையை, ஒருநிலைப்படுத்தி செயல்படுங்கள். புதிய ஒப்பந்தங்களுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சிறு பிரச்சினைகளைக் குறைக்க, குதர்க்கமான பேச்சுகளைக் குறைப்பது நல்லது.

**கும்பம்:** செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும். பணம், பொருள் வந்தாலும், அதற்கு முன்னே செலவுகள் காத்திருக்கலாம். நெருங்கிய நபர் ஒருவரின் விமர்ச்சனம் உங்களை அதிகம் யோசிக்க வைக்கும். கோபப்படுவதை தவிர்த்து ஆராய்ந்து செயற்படுங்கள். வியாபாரத்தில் எதிர்பாராத வகையில் விற்பனை இருக்கும்.

**மீனம்:** மனநிலையில் அமைதி நிலவும், இல்லறத் துணையின் வகையில் ஆதாயங்கல் கிடைக்கப்பெறும். கடனில் ஒருபகுதியை திருப்பிச் செலுத்துவீர்கள். எதிர்பார்த்த நிதி நிறுவன உதவிகள் தக்க நேரத்தில் கிடைக்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். வெளியூர்மற்றும் வெளிநாட்டு தகவல் சந்தோஷம் தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 9 | | | | |
| | | 1 | 6 | | | 7 | 8 | |
| | 7 | | | | 1 | 3 | 5 | 6 |
| | | 7 | | | 4 | | | 1 |
| 3 | 4 | | 2 | | 9 | | 6 | 7 |
| 1 | | | 7 | | | 5 | | |
| 6 | 8 | 3 | 1 | | | | 4 | |
| | 1 | 2 | | 4 | | 6 | | |
| | | | | 3 | 6 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 6 | 7 | 8 | 5 | 4 | 1 | 3 |
| 1 | 4 | 7 | 6 | 2 | 3 | 8 | 9 | 5 |
| 3 | 8 | 5 | 9 | 4 | 1 | 7 | 2 | 6 |
| 7 | 1 | 9 | 5 | 3 | 6 | 2 | 4 | 8 |
| 2 | 6 | 3 | 8 | 7 | 4 | 9 | 5 | 1 |
| 8 | 5 | 4 | 2 | 1 | 9 | 6 | 3 | 7 |
| 6 | 9 | 1 | 4 | 5 | 7 | 3 | 8 | 2 |
| 5 | 7 | 2 | 3 | 9 | 8 | 1 | 6 | 4 |
| 4 | 3 | 8 | 1 | 6 | 2 | 5 | 7 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
18.08.1958

மறைவு
07.05.2011

**அமரர் கிருஷ்ணபிள்ளை மகேஸ்வரன் (ராசா)**

(ஓய்வு பெற்ற களஞ்சியக் காப்பாளர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்)

எங்கள் பாசத் தெய்வம் அப்பா
எங்கள் குடும்ப ஒளி விளக்கே
அன்பாய் ஆதரவாய் எம்மை வழிநடத்தி
வாழ வைத்தீர்கள் – களங்கமற்ற
கனிவான பேச்சு அகத்தினில் கொண்டு
வளமான வாழ்வுக்கு பேரொளியாய் வந்து வழிகாட்டினீர்கள்
களங்கமில்லா நெஞ்சு கொண்ட அப்பா
கண் இமைக்கும் நேரத்தில்
கண்மூடி எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று தான் ஆனதுவோ
ஆறமுடியாமல் நம்ப முடியாமல் தவிக்கின்றோம் அப்பா.

எமது குலவிளக்கின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று (25.04.2012) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.69, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

## மணமகள் தேவை

யாழ்.இந்து, அரச ஊழியரும், தொழிலதிபருமான, நற்பண்புள்ள ஒருவருக்கு கடந்த கால போர் மற்றும் சுனாமிப் பேரழிவுகளில் தாய், தந்தை, உறவுகளை இழந்த, அனாதையான, சிவந்த, மெல்லிய, அழகிய, பண்பான, படித்த, 28 வயதுக்குக் கீழ் 5 அடி உயரமான மணமகள் தேவை. சீதனத்தால் பாதிப்புற்றோரும் தொடர்பு கொள்ளலாம். (அன்பு, அர்ப்பணிப்பு, சகிப்பு முக்கியம்) தொடர்பு:- 0776935338

## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 kg மேல்
வளர்ச்சியடையக் கூடிய
No - 1 BAHIRAHA புறொயிலர்
குஞ்சுகள் 25.04.2012
புதன்கிழமை
விநியோகிக்கப்படும். பதிவுகள்
முன் கூட்டியே மேற்கொள்ளவும்.
ராஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P.No. 0776090926

## அளவையூர் இசைஞான பூபதி R.S. கேசவமூர்த்தி

(வயலின் வித்துவான்)

## ஓராண்டில் உன் நினைவுகள்



ஜனனம்
16.08.1951

இறைவன் அடியில்
25.04.2011

திதி:- 13.05.2012

சிறு வயதினிலே பிடிலைக் கையிலெடுத்து
இசையுலகிற்காக அறுபதாண்டுகள் வாழ்ந்து
'இசைஞான பூபதி' யானாய் – வாழுங்காலத்தில்
சைவப் பணியாற்றி "சைவநெறிச் செல்வர்" ஆனாய்

அன்பு, பாசம், அரவணைப்பு, பண்பு, புன்முறுவல்
அனைத்தையும் அள்ளி வீசிய உங்களின் நினைவு
எங்களின் இதயத்தைக் கனக்க வைக்கின்றது
உங்களின் வயலின் இசை இதத்தைத் தருகின்றது

எமது மகிழ்ச்சியின் மகோன்னதத் திறவுகோலான
நீங்கள் – கணப்பொழுதில் இறைவனடி சேர்ந்து
நிரந்தரப் பிரிவின் வலிகளைத் தந்து சென்றது ஏனோ
ஈரவிழிகளுடன் ஏங்குகின்றோம் உங்கள் நினைவுடன்

ஆண்டு ஒன்றென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களின் நினைவுகள் எங்களின் மனதிலே தவழும்
உங்களது நினைவுகளை மனதிலே சுமந்த வண்ணம்
உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

138/5, கோயில் வீதி,
நல்லூர்.

– மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# ஆவரங்கால் நடராஜ இராம
# திருக்குடத் திருமஞ்ச

## கும்பாபிஷேக முகூர்த்தம் 25.04.2012



### ஆசியுரை



இந்து சமுத்திரத்தின் மணிமுத்து என வர்ணிக்கப்படுவதும் ஆன்றோர், சான்றோர், தர்ம வள்ளல்கள் வணிகப் பெருமக்கள் வாழும் இலங்கா திருநாட்டின் யாழ்ப்பாணத்தின் வடபால் ஆவரங்கால் நன் நகரில் வயலும் வயல் சார்ந்த மருத நிலப்பகுதியில் கொம்வளைப் பதியில் மந்திர சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற ஸ்ரீபர்வதபத்தினி சமேத இராமலிங்க சுவாமிகளுக்கும் ஏனைய பரிவாரவ மூர்த்திகளுக்கும் புதிதாக அமையப்பெற்ற விமானங்களுக்கும் அழகுற விளங்கும் இராஜகோபுரத்துக்கும் மங்களகரமான நந்தனவருடம் சித்திரை மாதம் 3ஆம் நாள் புதன் கிழமை பூர்வபக்க சதுர்த்தி திதியும் சித்தயோகமும் மிருக சீரிட நட்சத்திரத்திரமும் கூடிய சுப நேரத்தில் திருக்குட திருமஞ்சனவிழா நடைபெறுகின்றது. இந்த விழாவில் பிரதம சிவாசாரியராக கலந்து தலைமை தாங்கி கிரியைகளை ஒழுங்கு அமையசெய்து கிரியைகளை நடத்தும் சாகித்திய சிரோண்மணி வித்தியாகல்பநிதி வை. மு.ப. முத்துக்குமாரசாமி சிவாச்சாரியார் அவர்களுக்கும்கும்பாபிஷேகம் நல்லமுறையில் நடக்க அருளாசி வழங்கும் சிவாச்சாரியர்களுக்கும் கும்பாபிஷேக கிரியைகளை சேர்ந்துநடத்தும் சிவாச்சாரியர், திருப்பணிகளில் பங்கேற்ற யாவருக்கும் பர்வதவர்த்தினி சமேத நடராஜப்பெருமான் நல்லாசி அருள வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றேன்.

பிரதிஷ்டாவித்தகர் பிரமஸ்ரீ கா. நடராசக் குருக்கள்
சிவன் தேவஸ்தானம், ஆவரங்கல் புத்தூர்.

### புண்ணியம் பேறு



ஆவரங்காற்பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் இராமலிங்கேஸ்வரப் பெருமானுக்கு இன்று கும்பாபிசேகம் நடைபெறுவதையிட்டு அனைவரும் மகிழ்ச்சியடைகின்றனர். நீண்ட பழமையான இந்த ஆலயம் பல சிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. சூல லிங்க தரிசனமாகிய பஞ்ச தள இராஜ கோபுரம் அமையப் பெற்று இருப்பது ஆலயத்தின் சிறப்பாகும். சைவத் தமிழ் மக்கள் ஆசார சீலர்களாகவும் சமய நெறி நின்று வாழ்பவர்களாகவும் கலை கலாசார பண்பாடுகளை நடை முறைப்படுத்தி தாங்களும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வழிகாட்டுகின்ற சிந்தனையாளரைக் கொண்ட இந்த ஊரில் எல்லா செயற்பாட்டுக்கும் தலைவனாக இருக்கும் பரம சிவன் இந்த ஆலயத்தில் எழுந்தருளி இருப்பது நாம் செய்த புண்ணியத்தின் பேறாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகம் ஆலயத்துக்கும் மக்களுக்கும் புனிதத்தை தருவதாகும் இதனை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

### உன்னத வளர்ச்சி



அருள் வளம் நிறைந்த ஆவரங்கால் திருவூரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சிவன் கோயில் மகா கும்பாபிசேகம் குறித்து, வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். இயற்கை எழில் மிக்க திருவூர் ஆவரங்கால். பண்டிதர்கள், புலவர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், சிறந்த விளையாட்டு வீரர்கள், ஆற்றல் மிக்க விவசாயிகள், புகழ் பூத்த தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள் எனப் பலரைத் தோற்றுவித்த இத் திருவூருக்கு மேன்மை தரும் ஆவரங்கால் சிவன் கோயிலின் சிறப்பு அறியாதவர்கள் இல்லை. இத்திருக்கோயிலில் அழகான இராஜ கோபுரம் அமைப்பதற்கு அடியார்கள் ஆவல் கொண்டனர். ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தை ஸ்தாபித்த பேராளர் திரு. ஜெ. சிவசுந்தரம் அவர்களின் முன்னிலையில் ஒன்று கூடினர். சிறியேனும் அன்றைய ஆலோசனைக் கூட்டத்தில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டியது. கோபுரத் திருப்பணியை திருவாளர் சிவசுந்தரம் அவர்கள் பெரு மனதோடு தொடக்கி வைத்தார். அதன் பயனாகத் தொடங்கிய திருப்பணி வேலைகள் பெரு வளர்ச்சி கண்டன. ஆவரங்கால் நடராஜ இராமலிங்கப் பெருமானின் அடியார்கள் அள்ளிக்கொடுத்தனர். திருக்கோயில் மிகவும் அழகாகப் புதுப் பொழிவு பெற்றது. தற்பொழுது ஆவரங்கால் சிவன் கோயில் சூழல் வர்ணிக்க முடியாத அளவுக்கு மாற்றம் பெற்றுள்ளது. சிவசக்தி மணி மண்டபமும் சிவபெருமானின் திருவருளால் புகழ் பெற்றுள்ளது. சிவன் கோயிலின் சிறப்பு நாளுக்கு நாள் உன்னத வளர்ச்சியைக் கண்டுள்ளது. அற்புதம் நிறைந்த ஆடலரசன் வீற்றிருக்கும் ஆவரங்கால் சிவனின் மகா கும்பாபிஷேக நன்நாளோடு எம் மண்ணில் அமைதியும் ஆனந்த வாழ்வும் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். மகா கும்பாபிஷேகத் திருப்பணிக்காக அல்லும் பகலும் உழைத்த அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகள். திருக்கோயில் திருப்பணியில் ஈடுபட்டவர்கள் சீரும் சிறப்போடு வாழ்வார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

''யாவருக்குமாம் இன்னுரை தானே''
கலாநிதி ஆறுதிருமுருகன் (தலைவர்)
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,சிவபூமி அறக்கட்டளை.

### கண்ணாற் காண்பதுவே புண்ணியமாம்
### (நேரிசை வெண்பா)



எல்லாரும் உய்திடப் பூத்திடு நற்கருணை
வல்லாண்மை தந்திடும் பெம்மான் -
நல்லான்காண்
ஆவரங்கால் நின்றே அருள்வழங் குந்நீரன்
காவலிவன் நம்மவர்க்குத் தான்

பல்தொழில்கள் நம்பதியில் பாங்கினி தோங்கிட
இல்லைக்காண் துன்பமே என்றாகத் - தொல்லுலகில்
போற்றித் துதிசெய்வோம் புண்ணியா உன்னடியை
ஆற்றலை மண்ணிற்குத் தா

எண்ணி மகிழ்வோம் ஏற்றமிகு குடமுழுக்கை
கண்ணாற் காண்பதுவே புண்ணியமாம் - மண்மலரும்
எங்கள் வாழ்வினிக்கும் எல்லாஞ் சரிப்படும்
மங்கலம் தங்குமே நன்று

-செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்

### வாழ வழிகாட்டும் தெய்வம்



எங்கள் ஊரின் வாழ்விற்கு ஏதுவாயமையும் பெருந்தெய்வத்துக்கு இன்று திருக்குடமுழுக்குப் பெருவிழா இடம்பெறுகின்றது. சோழ மன்னனர்களுடைய ஆட்சிக் காலத்தில் அவர்கள் அமைத்த பெருங்கோயில்கள் இன்றும் நிலைபெற்றுத் திகழ்கின்றன. அவர்கள் வாழ்ந்த இடங்கள் பற்றிய சான்றாதாரங்கள் இல்லாத நிலையிலும் நிர்மாணம் செய்த கோயில்கள் இன்றும் வாழ்கின்றன. எனவே ஆலயங்கள் நீண்ட கால நிலைபேற்றிற்குரியவை என உணரமுடிகின்றது.

எங்கள் கிராமத்தின் பெருமைகளைப் பறை சாற்றக் கூடிய வகையில் சிவனார் திருக்கோயில் அமைந்திருக்கிறது. 'காடுடைய சுடலைப் பொடி பூசி எம் உள்ளங்கவர் கள்வராகிய' நடராஜ இராமலிங்க சுாவமி சுடலையை நோக்கியவாறு தரிசனம் கொடுப்பது இந்த ஆலயத்தின் சிறப்புக்களில் முக்கியமானதாகும். சிவனார் திருவருட் சிறப்பால் இந்த சூழலில் அமைந்துள்ள எங்கள் சிவசக்தி மணிமண்டபம், நடராஜ இராமலிங்க வித்தியாலயம் என அனைத்து நிறுவனங்களும் புகழோங்கும் சிறப்பைக் கொண்டிருக்கின்றன. இத்தகைய கருணைக் கடவுள் எங்கள் மண்ணின் திருப்தியான வாழ்வுக்கும் வழி காட்டுவார். அவரது பேரருளுக்காகப் பிரார்த்திப்போம்.

வே.சிவசுந்தரம்
தலைவர், லண்டன் ஆவரங்கால் ஒன்றியம்

### பழமைக்கும் புதுமைக்கும் உரிமையானவன்



எங்கள் மண்ணின் வாழ்வுக்கு வழிகாட்டும் பெருமானார் இன்று கும்பாபிஷேகம் காண்கின்றார். எம்மவரின் நீண்ட நாள் கனவு இன்று கைகூடுவதை எண்ணி மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனாய்த் திகழும் எங்கள் நடராச இராஜலிங்க சுவாமியின் கிருபைக்காக அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போம்.

வே.கந்தசாமி, வி. அன்ட் ரீ ரஸ்ட் (சிவசக்தி மணிமண்டபம்) ஆவரங்கால்.

## ஆலய

வலிகிழக்குப் பகுதியில் உள்ள வரலாற்று தொன்மை வாய்ந்த தலமாகவும், வயலும் வயல் சார் பகுதியான மருதநிலத்தில் அருள்பாலிக்கும் சிறப்பினதாகவும் ஆவரங்கால் பர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்க சுவாமிகள் ஆலயம் திகழ்கிறது. இது யாழ் பருத்தித்துறை வீதியில் சிவசக்தி மணிமண்டபத்துக்கு கிழக்குப் புறமாக அமையப் பெற்றுள்ளது.

இலங்கையில் போத்துகேயரின் ஆக்கிரமிப்பு காலத்தில் கூட அழிவுக்குள்ளாகாது டச்சுக்காரரின் காலத்தில் வரலாற்றுப் பதிவானது. டச்சுக்காரரால் தோம்பு எழுதிய காலத்தில் இத் தலத்தின் பெயரில் ''பல்வினையான் கொய்வளை நெற்பரப்பு நூறு'' என்ற சொல்லும் தோம்புக் காணியுடைமையாக கொண்டிருந்துள்ளது. காசி விசாலட்சியம்மை சமேத விசுவநாதப் பெருமானும் பர்வதவர்தனியம்மை சமேத நடராஜ இராமலிங்கேஸ்வரப் பெருமானும் ஒருங்கிணைந்திருப்பது போன்ற சிறப்புடைய தலமாகும். இந் நாம தொடர்பால் தரிசிக்க முத்தி தரும் தலமாகிய சிதம்பரத்து நடராஜப் பெருமானும் இம் மூர்த்திகளுடன் சேர்ந்துள்ளார். எனவே இராமேஸ்வரம், சிதம்பரம், காசி ஆகிய மூன்று சிறந்த தலங்களிலும் உள்ள மூர்த்திகள் மூவரும் சங்கமமாகி ஒரு மூர்த்தியாக எழுந்தருளி இருக்கும் மூர்த்தி விஷேடமும் தல விசேடமும் ஆலய சூழலெங்கும் உவர் நீரேயிருக்க கோயிலின் தீர்த்தக் கேணியும், ஆலயக்கிணறும் நன்னீராக திகழ்கின்றமை தீர்த்த விஷேடமாகும்.

ஆலய அமைவிட சிறப்பென்ற வகையில் நோக்கினால் இலங்கையின் வேறெந்த சிவன் கோயிலிலும் அமையப் பெறாத தனித் தன்மையுடையது. காசிக்கும் சுடுகாட்டுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பும் சிறப்பும் உள்ளதோ அவ்வாறு இந்த ஆலய மூலஸ்தானமும் சுடுகாட்டினை நோக்கியுள்ளது.

HA/S/JA/82 என்ற பதிவிலக்கத்தில் 96 பரப்புக் காணி ஆலய சொத்தினதாக வுள்ளது. ஆலயம் தொடர்பில் யாழ். மாவட்ட நீதிமன்றின் 1964 ஆம் ஆண்டு L-20 ஆம் இலக்க வழக்கின் தீர்ப்புப் பிரகாரம் 43 பேர் உரிமையாளர்களாகவுள்ளனர். இந்த உரிமையாளர்கள் இணக்கத்தில் 5 பேர் கொண்ட ஆலய தர்ம பரிபாலன சபை ஆல

### ஒரு சேரத்தரிசித்த பேறு



ஆவரங்கால் பதியில் வீற்றிருந்து அருளாசி நல்கும் நடராஜ இ திருக்குடமுழுக்குப் பெருவிழா காண்கிறார். இந்த ஆலய மூர்த்தியைத் தரி நடராசரையும் இராமேஸ்வரத்து இராமலிங்கரையும் தரிசித்த பேறு கிடை ஆலயம் அமைத்து வழிபாடாற்றிய பெருமை இப்பதியின் தொன்மைக்கும் ஒ

எங்கள் மண்ணில் சூழ்ந்திருக்கும் துன்பங்கள் விலகி இன்பங்கள் பெரு அருள் கிடைக்கப் பிரார்த்திப்போம். எம்பெருமானுக்கு அழகுற ஆல கரங்கோர்த்த யாவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

ம.பிரதீபன், (பிரதேச செயலர்,வலிகாமம் கிழக்கு

### திருக்குடமுழுக்கு நன்நாள்



கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் மொழி எனும் சைவ மரபுடைய கிராமத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பர்வதவர்த் இராமலிங்க சுவாமிக்கு திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறுகின்றது.

இக் கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கு அனைத்து வழிகளிலும் உதவி இறையாசிகள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து நல்ல தோர் கைங் வைத்தமைக்கு பிரதேச சபை சார்பில் உளங் கனிந்த வாழத்துக்களை வழங்

தவிசாளர், (பிரதேச சபை,வலிகாமம் கிழக்கு-புத்

### அருள் வேண்டிப் பிரார்த்திப்போம்



பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை அருள் இல்லார்க்கு அவ்வு கூற்றுக்கிணங்க ஆவரங்கால் ஸ்ரீபர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்க சு இராஜகோபுரம், வில்லு மண்டபம், தீர்த்தக்குளம் மற்றும் புனருத்தாரண தங்குதடைகளுமின்றி தொடர்வதற்கு பணத்தினைச் சிறுதுளி பெருவெ மனப்பான்மையுடன் தந்துதவிய அனைத்து எம்பெருமான் அடியவர்களு செல்வங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீபர்வதவர்த்தி இராமலிங்க சுவாமியின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. இராஜநாயகம் (பொருளாளர், திருப்பணிச்சபை


கும்பாபிஷேகம் சிற

சிவசக்தி மணி மண்டபம் ஆவரங்கால்

வலி.கிழக்கு (வ.உ), ப.நோ.கூ.சங்கம் அச்சுவேலி

சிவ

மோகன் பல்பொருள் வாணிபம் ஆவரங்கால்


ICS Computer Centre Avarangal East

நிறு ஸ்ெ ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ஸமயம்

# ...மலிங்க சுவாமி திருக்கோயில்
# ...சன விழாச் சிறப்பு மலர்



## காலை: 8.10-9.00



## ...லய வரலாறு

ம், வயலும்
ஆவரங்கால்
இது யாழ்.
அமையப்
...ள்ளாகாது
...திய காலத்
...று'' என்ற
விசாலட்சி
...ராஜ இராம
...டய தலமா
...ாஜப் பெரு
...பரம், காசி
ஒரு மூர்த்தி
...ழலெங்கும்
...ீராக திகழ்
வேறெந்த
...ம் சுடுகாட்
...இந்த ஆலய
...த்தினதாக
...ண்டு L-20
...னர். இந்த
சபை ஆல

யத்தை நிர்வகித்து வருகிறது. முதலாவது சபையில் தலைவராக க. சின்னத்தம்பி, செயலாளராக அ. தில்லைநாதன், பொருளாளராக த. கனகசபை, உறுப்பினர்களாக ச. சுப்பிரமணியம், த. துரைசிங்கம் போன்றவர்கள் அங்கம் வகித்தனர். 1977 முதல் பண்டிதர் ச.சுப்பிரமணியம் தலைமையில் தர்மகர்த்தா சபை இயங்கியது. நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் 1997 முதல் விதானையார் திரு. ச. சோமசுந்தரம் அவர் களின் தலைமையில் தர்மகர்த்தா சபை 1999 வரை இயங்கியது. தற்போது 1999 முதல் தலைவராக அ.தில்லைநாதனும், செயளாளராக க.இராசதுரையும், உறுப்பினராக நீ. மயில் வாகனமும் செயற்பட்டு வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் சுண்ணாம்புக் கலவையால் நிர்மாணிக்கப்பட்டிருந் ததை மாற்றியமைக்க 1977 ஆம் ஆண்டு திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டது. விதானையார் ச. சோமசுந்தரம் தலைமையில் அடியவர்களின் நிதி உதவியால் 1982 புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் இடம் பெற்றது.

1995 இல் புதிய சித்திரத்தேரும், 2003 இல் 7 வாசல் கொண்ட இராஜ கோபுரமும் அமையப்பெற்றது. தொடர்ந்து கருங்கல் தூண்களாலான வில்லு மண்டபமும், தீர்த்த மண்டபமும் அமைக்கப் பெற்று 25.04.2012 கும்பாபிஷேகமும் நடைபெற உள்ளது. 2003 முதல் திரு. அ. தில்லைநாதன் அவர்களை தலைமையாகக் கொண்டு 23 பேர் அடங்கிய திருப்பணிச் சபை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தினசரி மூன்றுவேளை நித்திய பூசை நடைபெறுவதுடன் ஆனி உத்தர தீர்த்தத்திற்கேற்ப 10 நாள்கள் சிவன் திருவிழாவும் ஆடிப் பூரத் தீர்த்தத்திற்கேற்ப 10 நாள்கள் அம்மன் திருவிழாவும் நடைபெறுகிறது. ஆலயத்தின் பூர்வீக பூசகர்களாக காசி கங்கா பட்டர் வழிவந்த பூசகர் சந்ததியை சேர்ந்த பிரதிஷ்டா வித்தகர் வேதக்குட்டி நடராஜகுருக்களும், அவரது ஏகபுத்திரன் ந. யோகானந்தேஸ்வர குருக்களும் ஆலய கிரியைகளை சிறப்புற மேற்கொள்கின்றனர்.

மூர்த்தி தல, தீர்த்த சிறப்புமிக ஆவரங்கால் கொய்வளைப் பதியில் பர்வதவர்த்தனியம்மை சமேத இராமலிங்க சுவாமிகள் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார் எனில் மிகையாகாது.

...டராஜ இராமலிங்க சுவாமி
...தியைத் தரிசிப்பதால் சிதம்பர
...பறு கிடைக்கிறது. சிவனுக்கு
...மைக்கும் ஒரு சான்று.
...ங்கள் பெருக எம்பெருமானின்
...ழகுற ஆலயம் அமைப்பதில்

...ாமம் கிழக்கு, கோப்பாய்.)

...றார் மொழியாகும். ஆவரங்கால்
...பர்வதவர்த்தனி சமேத நடராஜ
...கின்றது.
...லும் உதவிய அடியார்களுக்கு
...தார் கைங்கிரியத்தைக் கைகூட
...ளை வழங்குகின்றோம்.
...கிழக்கு-புத்தூர்.)

...ாம்

...க்கு அவ்வுலகில்லை எனும்
...ாமலிங்க சுவாமி திருக்கோயில்
...த்தாரண வேலைகள் எதுவித
...பெருவெள்ளமாக தாராள
...டியவர்களுக்கும் அனைத்துச்
...ர்வதவர்த்தினி சமேத நடராஜ
...ர்.
...ப்பணிச்சபை.)

### எங்கள் கனவு நனவாகிறது



எமது முன்னோரால் ஆலயங்கள் அமைக்கப் பெற்ற துடன் அவற்றில் பூசை, உற்சவங்கள் நடைபெறுவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அவை எமது பண்பாட்டின் நிலைக்களங்களாக விளங்குகின்றன. வையத்தில் நெறி களை வகுத்துத்தந்துள்ளன.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'',
''ஆலயம்தொழுவது சாலவும் நன்று'' போன்ற முதுமொழிகள் ஆலயத்தின் முக்கியத்துவத்தை சான்று பகர்கின்றன.

இந்த ஆலயத்தில் ஓர் இராச கோபுரம் அமைக்கப் பெற வேண்டும் என்று பலர் மனதில் தோன்றிய எண்ணத்துக்கேற்ப 2003 ஆம் ஆண்டு திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு அத்திபாரம் இடப்பட்டது. இப் பணிகள் புலம் பெயர் வாழ் எம் ஊர் பெரியவர்களதும் மக்களதும் நிதி உதவியுடன் நிறைவு பெற்றது. இத் தருணம் ஆலய முன் மண்டபமும் புனரமைக்க் வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆலய முன்மண்டப திருப்பணிகளுக்கு கனடா வாழ் பண்டிதர் சுப்பிரமணியத்தின் மகன் முத்துராசலிங்கமும். லண்டன் வாழ் திரு. வே.சுந்தரமும் (லண்டன், ஆவரங்கால் ஒன்றியம்) இணைந்து வில்லு மண்டபம் ஒன்று அமையப் பெற திருப்பணிச்சபைக்கு உதவினர். மேலும் ஆலயத்தில் பல திருத்த வேலைகளும் புனர்நிர்மாணங்களும் செய்யப் பெற்று இராஜகோபுரம், வில்லுமண்டபம் ஆகியவற்றுடன் புதுப் பொலிவுடன் திகழ்கிறது. 2009ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலய குடுமுழுக்கு விழா 25.04.2012 நடைபெறுகின்றது. ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் சமேத நடராஜ இராமலிங்க சுவாமிகளின் அருள் எல்லோருக்கும் கிடைக்கபெற வேண்டுகின்றேன்.

அ. தில்லைநாதன்,
தர்மகர்த்தாவும்,திருப்பணிச்சபைத் தலைவரும்.

### மஹா கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசி



அருள்மிகு ஆவரங்கால் (கொய்வளைப்) பதியில் காலம் காலமாக அருளாட்சி செய்துவரும் பர்வதவர்த்தனி அம்பாள் உடனுறை நடராஜ இராமலிங்கேஸ்வர பெருமானின் புனராவர்த்தன நவகுண்டபக்ஷ நுதன சப்ததள மஹாராஜ கோபு... விருமஞ்சனப் பெருவிழா பெருமானின் அனுக்கிரஹத்தினாலும் ஆலய தர்மகர்த்தா சபையினரும், திருப்பணிச்சபையினுடைய பெருங் கைங்கரியத்தினால் வழிபடும் அடியவர்களுடைய பிரார்த்தனையுடன் பெரும் தவப்பயனால் பெரும் காட்சியை காணக் கண்போதாது. இப் பெரும் சாந்தியில் உலக மக்கள் அனைவரும் அமைதியுடன் உலக வாழ்வியலில் பங்குகொள்ள தர்மம் அர்த்தம் காட்டும் போதகமாகிய புருஷார்த்தங்களை அடைந்து வையத்து வாழ்வாங்கு வாழ எம்பெருமானின் குடமுழுக்கு நடைபெறும் இந்நன்நாளில் இராமலிங்கப் பெருமானின் திருவருளை முன்னிட்டு தொண்டு செய்யும் அடியவர் கூட்டத்தினரை வாழ்வாங்குவாழ இறையருளை பிரார்த்திக்கின்றேன்.

ஷர்வே ஜனாஸ் ஷுகினோ பவந்து
சமஸ்த சர்வ மங்கலாதி பவந்து
சிவஸ்ரீ பரம முத்துஸ்வாமி சிவாச்சார்யார், ஆதீன பிரதம சிவாச்சார்யார்,
நயினா தீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

### நல்மெலாம் பெருக வாழ்வாராக



அநாதிமல முத்தராய் ஆதி அந்தம் அற்றவராய் நிற்கும் பரம தியானவர் அகிலம் உய்ய வேண்டுமென முகிழ்த்த பெருங் கருணையால் அறத் தனிச்செல்வி ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மையுடன் ஸ்ரீ நடராஜ இராமலிங்க சுவாமி எனும் திருநாமத்தோடு அனவர்தமும் சாநித்தியமாய் வீற்றிருந்து அருள் பாலிக்கும் திருப்பதி ஆவரங்கால் கொய்வளைப் பதியாழும் அதி சுந்தர இராஜ கோபுர சஹித புனராவர்தன அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று (25.04.2012) எம் பெருமானின் திருவருள் துணையுடன் நடைபெறுகின்றது. ''அவன் அருளாலே அவன் தாள்வணங்கி'' என்கின்ற மணி வாசகப் பெருமானின் திருவாக்கிற்கமைய அதி சுந்தர இராஜ கோபுர புனரமைப்புப் பணிகளும் நிறைவேற்றப் பட்டு கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி நிகழ்வினை தரிசிக்கின்ற பேறு யாவருக்கும் கிடைத்திருக்கின்றது. இச் சிவாலயத் திருப்பணியை நிறைவேற்றி கும்பாபிஷேகத்தையும் நடத்தி முடித்த சிவ புண்ணியத்தை ஈட்டிய சைவப் பெருமக்கள் யாபேரும் அம்மையப்பர் திருவருளால் நல்மெலாம் பெருக வாழ்வாராக விளங்க என்றும் எமது நல்லாசிகள்.

சிவஸ்ரீ ந. யோகேஸ்வரக் குருக்கள் (தேவஸ்தான குரு.)

### விழா சிறப்பாக அமையட்டும்



அன்பே சிவமாய், சிவமே அன்பாய் இந்து மக்களின் முழு முதற்கடவுளாய் மூலமூர்த்தியாய் ஆவரங்கால் பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்து கொண்டிருக்கும் பர்வதபத்தினி சமேத நடராச இராமலிங்க சுவாமிகளுக்குத் திருக்குடமுழுக்குத் திருமஞ்சனத் திருமுக விழா நடைபெறத் திருவருள் கூடியிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆ என்றால் பசு என்று பொருள் படும். சிவசின்னமான பசுவின் பெயரை முதல் எழுத்தாகக் கொண்ட ஊரில் நல் உள்ளம் கொண்ட சிவத் தொண்டர்களின் பணியும் புலம் பெயர் தமிழர்களின் பங்களிப்பும், ஊர்மக்களின் செயற்பாடும் ஒருங்கிணைந்து நிற்பதனால் இந்த மகத்தான திருக்குடத விழா சிறப்பாக நடைபெறுகின்றது. திரு. அம்பலவாணர் தில்லைநாதன் அவர்களின் நிர்வாகத்திறமையாலும் ஆலய அறங்காவல் சபை, அங்கத்தவர்கள் திருப்பணிச்சபையினர், முன்னை நாள் அறங்காவல் சபையினர் தொண் டர்கள் பக்தர்கள் போன்றோரின் உதவியோடும் எங்கள் ஆலயத் திருக்குடத் திருமஞ்சனத் திருமுகவிழா கைகூடியிருப்பது எல்லோருக்கும் மன நிறைவைத் தருகின்றது. இந்தக் கண் கொள்ளாத் தெய்வ தரிசனம் மிக உன்னதமானதாகும். ஆலயத்துக்கான சித்திரத்தேர் அமைப் பெற்று இன்று முதன்முதல் இராஜ கோபுரம் கட்டப் பெற்று வில்லு மண்டப்புனரமைப்பு, தீர்த்தக்குளப் புனரமைப்பு என ஆலயம் வளர்ச்சி பெற்று வருவது குறிப்பிடத் தக்கதாகும். இந்தப் பணிகள் மேன்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன். ஊர்மக்களுக்கும், அயலூர் மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் எம் பெருமான் திருவருள் பாலித்து அருள் வேண்டுமென வேண்டுகின்றோம். விழா சிறப்பாக அமையட்டும்.

தலைவர் சு. முத்துராசலிங்கம்
கனடா கந்தசுவாமி ஆலயம், ரொரன்ரோ, கனடா

### பழமையைப் பாதுகாத்து புதுப் பொலிவு பெற்றுள்ளது.

பண்பாட்டால் யாழ்ப்பாணத்தை தனித்து அடையாளப்படுத்திக் கூறுவதற்கு அதன் பாரம்பரிய மரபுகள் தொய்வின்றித் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருவது ஒரு காரணமாகும். அவற்றைப் பேணிப்பாதுகாத்து வருவதில் எம்பிரதேசத்து ஆலயங்களுக்கு முக்கிய பங்குண்டு. தமிழர் வரலாற்றில் ஆலயங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கான அடையாளமாக மட்டும் இருக்கவில்லை. கூடவே தமிழர் வரலாற்றின், பண்பாட்டின் கருவூலமாகவும் அவை காணப்படுகின்றன. அதனால்தான் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் எமது ஆலயங்களை விலக்கிவிட்டு எமது வரலாற்றை எழுதமுடியாதிருக்கிறது. கடந்தகால அனர்த்தங்களால் எமது மக்கள் பலவற்றை இழந்துவிட்டனர் அல்லது தொலைத்து விட்டனர். ஆயினும் அவற்றில் பல மீள் உருவாக்கம் பெற்ற போது அதில் தலைநிமிர்ந்து காணப்படுபவை எமது ஆலயங்களாகும். அதன் ஒரு அடையாளமாகவே இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி ஆலயத்தைப் பார்க்கிறேன்.

இந்த ஆலயம் வரலாற்றுப் பழமைவாய்ந்ததென்பதற்கு யாழ்ப்பாணத்தில் 500 இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களை அழிப்பதற்கு காரணமாக இருந்த போர்த்துக்கேயரது ஆவணங்களிலேயே ஆதாரங்கள் காணப்படுகின்றன. 16ஆம் நூற்றாண்டில் பருத்தித்துறையில் வந்திறங்கிய போர்த்துக்கேய படை யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்த போது அவர்களை அச்சுவேலிக்கும் புத்தூருக்கும் இடையில் இடைமறித்து போரிட்ட யாழ்ப்பாண மன்னனது படைகள் இங்கிருந்த ஆலயத்தை தமது பாதுகாப்பு அரணாகப் பயன்படுத்தினர் எனவும், போரின் பின்னர் போர்த்துக்கேயப்படையின் ஒரு பிரிவினர் அங்கிருந்து தென்மராட்சி நோக்கிச் சென்றதாகவும் போத்துக்கேய ஆசிரியர் குவைறோஸ் சுவாமிகள் தனது நூலில் குறிப்பிடுகிறார். இதைமேலும் உறுதிப்படுத்தும் வகையில் 96 பரப்பில் அமைந்துள்ள இந்த ஆலயத்தை ஒல்லாந்தர் கால ஆவணம் ''பல்வினையான் கொய்வளை நெற்பரப்பு நூறு'' எனக் குறிப்பிடுகிறது. இன்றைய மகா கும்பாபிஷேகம் சிறப்புற எம்பெருமானை இறைஞ்சுகிறேன்.

பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
தலைவர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### புதிய பரிமாண வளர்ச்சி



கல்வி, கலை, கலாசாரம் என்பவற்றில் அன்றுமுதல் என்றும் சிறந்து விளங்கும் எமதூரான ஆவரங்காலில் உறைந்திருந்து எம் ஊர் மக்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்க சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எத்தனையோ துன்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் எம் ஊரையும் எம்மக்களையும் கண்மணிபோல காத்து அயார்களின் குறைகள் எல்லாம் போக்கி இண்பமே சூழ்ந்துவர வழிகாட்டும் எம் பெருமான் ஆலயம் படிப்படியாகவளர்ந்து இன்று பிரமாண்டமான கட்டட சிற்ப ஓவியங்களமைந்த இராஜ கோபுரம், வில்லு மண்டபம், தீர்த்தக்குளம், பரிவார மூர்த்திகள் என புதிய பரிமாணங்கள் பெற்று அனைத்து வேலைகளும் முடிவடைந்து மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இத்திருப்பணிகளுக்கு அனைத்து வழிகளிலும் பங்கேற்ற எம்பெருமான் அடியவர்கள் தொடர்ந்தும் இந்த ஆலயம் சிறக்க உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஸ்ரீபர்வதவர்த்தினி சமேத இராமலிங்க சுவாமி அருள் ...பிரார்த்திக்கின்றோம்.

நீ. மயில்வாகனம். (செயலாளர், திருப்பணிச்சபை).

...ம் சிறப்புற பிரார்த்திப்போர்:

| | | |
|---|---|---|
| சிவசங்கரி அகம் ஆவரங்கால் | சாரங்கா ஜுவல்லரி யாழ்ப்பாணம். | லிங்கம் புடைவை அகம் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் |
| நியூ மணி ஸ்ரோர்ஸ் ஆவரங்கால் | நாதன் ஸ்ரோர்ஸ் ஆவரங்கால் | ரஜீபன் ஸ்ரோர்ஸ் ஆவரங்கால் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐந்து மாவட்டங்களிலும் வழமைக்கு மாறாகக் காற்று வீசலாம்.

## இலவச கணினிப் பயிற்சி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் அடிப்படை கணினி பயிற்சி நடத்தும் பயற்சி நெறி கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மூன்று மாத காலத்துக்கு இலவசமாக நடத்தப்படும் இந்தப் பயிற்சிக்கு இப் பிரிவிலுள்ள உயர்தரம், சாதாரண தரம் கற்ற யுவதிகள் 20 பேர் இணைந்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளீதரன் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (ம-100)

# உயரழுத்த மின் கம்பிகளைத் தாங்கும் மின்கம்பங்கள் மட்டுவில் பகுதிக்கு

சாவகச்சேரி, ஏப்.25

உயரழுத்த மின் மார்க்க விஸ்தரிப்பு வேலைகளுக்காக உயரழுத்த மின் கம்பிகளை தாங்கும் மின் கம்பங்கள் மட்டுவில் பகுதிக்கு இலங்கை மின்சார சபையால் எடுத்து வரப்பட்டுள்ளன.

ஏற்கனவே வண்ணாத்திப்பால பகுதியில் இந்த மின் மார்க்கத்துக்கான மின் கம்பங்கள் நடப்பட்டு கம்பி இணைப்பும் செய்யப்பட்டுள்ளது. மீதி வேலைகளுக்காக தூண்கள் பறிக்கப்பட்டு வருகின்றன.

இந்த மின் மார்க்கப் பணிகள் கனகன்புளியடிச் சந்தியூடாக வேம்பிராய் வரை நடைபெறும்.

வேம்பிராய்ப் பகுதியிலேயே லக்ஸபான மின்சாரம் ஒரு முகப்படுத்தப்பட்டு மின் விநியோகம் இடம்பெறவுள்ளது.

**இன்ரி எனப்படும் தொழில் நுட்பம் பயன்படுத்தும் வகையில் மின் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.**

இதற்கான இன்ரி எனப்படும் தொழில் நுட்பம் பயன்படுத்தும் வகையில் மின் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

லக்ஸபான மின்மார்க்கம் கொடிகாமம் ஊடாக புத்தூர்ச் சந்தி மீசாலையூடாக வேம்பிராய்க்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-131)

# ஆடைகளுக்குப் பயன்படுத்தும் சிப்பை உருவாக்கிய ஜிடீனுக்கு நேற்று 132ஆவது பிறந்தநாள்

பொதுமக்கள் தற்போதும் ஆடைகளுக்குப் பயன்படுத்தி வரும் ஷிப்பை உருவாக்கி மேம்படுத்திக் காட்டியவர் சுவீடன் நாட்டில்பிறந்த ஜிடீன் சன்பேக். இவர் தமது 132 ஆவது பிறந்த நாளை நேற்றுக் கொண்டாடப்பட்டது.

இலத்திரனியல் பொறியியலாளரான ஜிடின் கடந்த 1906 ஆம் ஆண்டு முதல் 1914 ஆம் ஆண்டு வரை உள்ள காலங்களில் ஷிப்பை உருவாக்கி அதை மக்கள் எளிதில் உபயோகிக்கும் விதத்தில் மேம்படுத்தினார்.

ஜிடீன் 1954ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.எனினும் அவருடைய பிறந்த நாள் இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதனை பிரபல சமூக இணையத்தளமான கூகுள், தன்னுடைய முதற்பக்கத்தை ஜிடீன் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காக ஒதுக்கி அசத்தியுள்ளது.



உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இணுவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புத்தாண்டு விழா நிகழ்வும் சேமிப்பு வாரத்தையொட்டிய நிகழ்வும் இணுவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி ஆனந்த கௌரி தலைமையில் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் மு.செந்தில்நந்தனன் கலந்து கொண்டு வங்கி நடவடிக்கைகளில் சேமிப்பில் அதிக ஆர்வம் காட்டிய பொது மக்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்ததுடன் அதிக சேமிப்பை பெற்ற சமுர்த்தி அலுவலர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். (ந-86)

# சைக்கிள் திருடும் முயற்சி முறியடிப்பு

நவாலி, ஏப்.25

நவாலியில் பட்டப் பகலில் வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள், திருடர்களால் தூக்கிச் செல்லப்பட்ட போது வீதியில் நின்றவர்கள் அந்தத் திருட்டை முறியடித்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் நவாலி சங்கையான் வீதியைச் சேர்ந்த நபரொருவர் தமது புத்தம் புதிய சைக்கிளை நண்பகல் வேளை தமது வீட்டு முற்றத்தில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று விட்டார்.

இந்த வேளையில் வீதியில் நீண்ட நேரமாக உலாவிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் திடீரென கதவைத் திறந்து உள்ளே சென்று பூட்டாமல் நின்ற சைக்கிளை உருட்டிச் சென்றால் சத்தம் கேட்கும் என்பதற்காக தோளில் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்.

வீதியில் நின்றவர்கள் இதனை அவதானித்து விட்டு அவர்களைத் துரத்திக் கொண்டு சென்ற வேளை சைக்கிளைப் போட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். (த-100)


# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 05 ★ 03 ★ 1959

உதிர்வு 26 ★ 03 ★ 2012

அமரர்

## பொன்னம்பலம் சிவமணி

(அரசுவால்ரன்)

**(சமாதான நீதவான் - கொழும்பு)**

எமது குடும்ப விளக்கு என்றும்
புன்னகைபேசி வேண்டியவர்களுக்கு
உதவிகள் பல நல்கி
எல்லோர் உள்ளங்களிலும் நீங்கா
நிலையில் உரம் பெற்ற எம் அன்புத்
தெய்மே. நீங்கள் எம்மை விட்டு அகன்று
முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
நீங்களே என்றும்
எங்கள் உலகம் ஐயா எப்போதும்
எம் இதயக்கோயிலில் இருத்தி
உங்களை நாம் பூசிப்போம்

**கடந்த (26.03.2012) திங்கள் சதுர்த்தித் திதியில் சிவபதமடைந்த அமரர் பொன்னம்பலம் சிவமணி (அரசுவால்ரன்) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.04.2012) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நடைபெறும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி நவில்ல்:**

(26.03.2012) அன்று சிவப்பேறு அடைந்த எனது அன்புத்தெய்வம் அமரர் பொன்னம்பலம் சிவமணி அவர்கள் வேலணையில் மரணமடைந்த செய்தியை தொலைபேசி ஊடாக அறிவித்த அன்பர்களுக்கும், அவ்விடத்தில் உரிய கடமைகளில் செயற்பட்டு உதவிபுரிந்த ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்களுக்கும், ஊர்காவற்றுறை நீதவான் அவர்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியா சட்ட வைத்திய அதிகாரி அவர்களுக்கும், வேலணை பிரதேசசபை தலைவர் (E.P.D.P) அவர்களுக்கும், அலுவலர்களுக்கும், துண்டுப்பிரசுரம் வழங்கி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய அன்பர்களுக்கும், தந்திமூலம், தொலைபேசி மூலம், கடிதம்மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி ஊர்வல நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் (23.04.2012) அன்று கீரிமலையில் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொண்ட எமது உற்றார், உறவினர்களுக்கும் உணர்வு பூர்வமாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கனகாபுரி**
**6ஆம் வட்டாரம், மண்டைதீவு**

தகவல்:
மனைவி, மகள்,
சகோதரர்கள்.



# மரண அறிவித்தல்

## முத்து இராசேந்திரம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனி Gottingen ஐ வதிவிடமாகவும் கொண்ட முத்து இராசேந்திரம் கடந்த (18.04.2012) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரவீந்திரன், நிர்மலாதேவி (பவானி -லண்டன்), சதானந்திரன் (லண்டன்), கருணேந்திரன் (பாபு - ஜேர்மனி), நந்தினி (லண்டன்), ஜோகேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உமாதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் , முத்து சுந்தரமூர்த்தி அவர்களின் அன்புச்சகோதரனும், லண்டனைச் சேர்ந்த தவரத்தினம், மல்லிகா, கணேந்திரன், குண்டுளா (ஜேர்மனி), மஞ்சுளா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், அனுஸ்கா, அனுசாந், அனுஸ்காந் (லண்டன்), மாறியான், மாறாமகேஸ், மார்லின்மதி, பாறாய்மாதினி, மைலின் மஞ்சுலி (ஜேர்மனி), கிருஷ்னிகா, ஆதித் (லண்டன்), சகீன், சயன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 - 4 மணிக்கு (Parkfrieddhof- Jankerberg, Heinrich - A-zacharia - Baogen - 37077 Gottingen, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**செ. குலசேகரம்**
**குடும்பத்தினர்.**

T.C.lane
மானிப்பாய்.

(17400) (45.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வரும் மூன்று விளம்பரங்களும் நேற்றைய உதயனில் பிரசுரமாக வேண்டியவை. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இவை தவறவிடப்பட்டு விட்டன. அதன் பொருட்டு மிக்க வருந்துகிறோம். -நிர்வாகத்தினர்




## வாழும் கலைப் பயிற்சி

மூச்சு பயிற்சி, பிராணயாம, சுதர்சன

இன்று (25.04.2012)
அறிமுகவுரையுடன் ஆரம்பம் மாலை 5 மணி
இடம்: வாழும் கலை நிலையம், அராலி வடக்கு,

**பயிற்சி: 25.04.2012 - 29.04.2012**
நேரம்:4 pm - 6.30 pm, 6.45 pm- 9.15 pm

T.P: 0772794093, 0772193688


## 9 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



தோற்றம்
20★ 05★ 1927

மறைவு
24★ 04★ 2003

அமரர்
**தொம்மை பிலிப்பு**

ஆண்டுகள் ஒன்பது ஆனதுவோ பப்பா
தங்கள் அன்பான திருவதனம் கண்டு
அவனியில் எம்மை ஆளாக்கி
அரும்பாடுபட்டுழைத்த எம் அன்புத் தந்தையை
நன்றி உணர்வுடன் நினைக்கின்றோம் இந்நாளில்
எம் உயிர் உள்ளவரை தங்கள் நினைவுகள்
என்றென்றும் எம்முடனே வாழும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (சி/1025) (2-6-9)

நீங்கா நினைவுகளுடன்:
- குடும்பத்தினர்.

## கட்டாக்காலிகள் நவாலியில் பெரும் தொல்லை

நவாலி, ஏப்.25

நவாலி ஆனைக் கோட்டைப் பகுதியில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை நாளுக்கு நாள் அதி கரித்து வருகின்றது.


பகல், இரவு வேளைகளில் கட்டாக் காலியாகத் திரியும் இவை போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தி வருவதுடன்வர்த்தகநிலையங்களின் உரிமையாளர்கள், சந்தை வியாபாரிகளுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன.

காலை வேளையில் மேய்ச்சலுக்கு செல்லும் போதும் மாலையில் மேய்ச்சலால் வரும் போதும் கடைகள் சந்தைகளுக்கு முன்பு கூட்டமாக நின்று அட்டகாசம் செய்கின்றன.

இரவு வேளையில் குடியிருப்பாளர்களின் தோட்டக் காணிகளின் வேலிகளை முறித்து உள்ளே நுழையும் கட்டாக்காலிகள் அங்குள்ள வாழை, மா, பலா போன்ற பயன்தரு மரங்களையும் அழித்து வருகின்றன என்று கூறப்பட்டது.

(ம-100)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
16.03.1932

மறைவு
28.03.2012

**அமரர் மயிலுப்பிள்ளை கனகரத்தினம்**

விராங்கொடை , தெல்லிப்பழை
திதி:- பூர்வபக்க ஷஷ்டி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
பார்போற்ற எம்மை நன் மக்களாக வாழ வைத்த ஐயாவே!
நாள்கள் முப்பத்தொன்று வந்தாலும்
எந்நாளும் அருகில் இருக்கும் நினைப்பு ஐயா எமக்கு
உங்கள் நினைவால் வருந்துகின்றோம்.

கடந்த 28.03.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்பு ஐயாவின் பிரிவுத்துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அந்தியேட்டிக் கிரியைகள் 25.04.2012 புதன்கிழமை காலை 7 மணிக்குக் கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும் என்பதனையும் வெள்ளிக்கிழமை (27.04.2012) நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். **(மு.கு.:- 25.04.2012 புதன் கிழமை காலை 6 மணிக்குக் கீரிமலை செல்வதற்கு வாகன ஒழுங்கு செய்துள்ளோம்)**

- குடும்பத்தினர்

தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

கனகரத்தினம் நித்தியா (றஞ்சி) மகள்.
விசுவலிங்கம் பாலேந்திரநாதன் (பாலன்),
சின்னையா - சோமசுந்தரம் (சோமு) பேரப்பிள்ளைகள்.

(17373)


# INTERNATIONAL ENGLISH QUALIFICATIONS

## ESOL Diploma in English

City & Guilds

City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vocational qualification awarding body. எமது கல்லூரி City & Guilds Royal Charter இனதும் Cambridge பல்கலைக்கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.

## COURSE COMPONENTS

Reading : From Beginner to Advanced
Writing : From Beginner to Advanced
Speaking : Efective Speaking - Basic to Advanced



### Why City & Guilds English Qualifications?

- Recognized by UK Universities and UK Border Agency
- Directly Linked to the Common European Framework
- Certificate for LIfetime

City & Guilds English is offered at 6 different levels.
A1, A2, B1, B2 , C1 , C2
GET an International Qualification for Your Language Competence.

பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே 02 மாதங்களில் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

### Preliminary A1

அடிப்படை ஆங்கில அறிவை எதிர்பார்த்து ஆங்கிலம் படிக்க தொடங்குபவர்களுக்கு இந்த மட்டம் பொருத்தமானதாக அமைகின்றது. மேலும் இப்போது UK க்கு Partner/ Spouse விசாவில் செல்கின்றவர்கள் அவசியமாக செய்ய வேண்டிய ஆங்கில பரீட்சையாகவும் (A1) இது காணப்படுகின்றது.

### Achiever 1 - Communicator B2

இங்கு B1 B2 பரீட்சைகள் UK இல் இருக்கும் பல்கலைக்கழகங்களினால் IELTS க்கு பதிலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

கடந்த காலங்களில் B1 B2 பரீட்சைகளை எமது நிலையத்தில் இருந்து எடுத்து மாணவர்கள் 100 % மான சித்திகளைப் பெற்றுள்ளனர்.

### ஏன் நீங்கள் Diploma in English City College இல் கற்க வேண்டும்




- எமது விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் பல வருடங்கள் விரிவுரைகள் ஆற்றிய அனுபவமுடையவர்கள்
- பல தடவைகள் Vincent Sidowicz and Bridgel Bloom அவர்களின் பயிற்சிப்பட்டறைகளில் பங்கு பற்றி இருக்கின்றனர்.

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
|---|---|---|
| Duration | 2 Months (100 hours) | 2 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 2.00 - 5.00 p.m |
| Commencement | 02.05.2012 | 05.05.2012 |

## வகுப்புகள் 02.05.2012 ஆரம்பம்

# CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0212220384 - 0778803887 - 0754164429



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இணக்க அரசியலின் படுதோல்வி

தம்புள்ளயில் 50 ஆண்டுகளாக இருந்து வந்த பள்ளிவாசலை அகற்றுவதற்கு 6 மாத காலக் கெடு விதித்திருக்கிறார் அங்குள்ள இராஜ மகா விகாரையின் தலைமைப் பிக்கு இனாமலுவே சுமங்கள தேரர். நகரில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பிரதமர் தி.மு.ஜெயரட்னவின் வசம் உள்ள புத்த சாசன அமைச்சின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடந்தது. அமைச்சின் செயலாளர், மாவட்ட அரச அதிபர், விகாரையின் தலைமைக் குரு ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்திலேயே தம்புள்ள விகாரைக்குச் சொந்தமான புனிதப் பிரதேசத்தில் இருந்து பள்ளிவாசல் மற்றும் இந்துக் கோயில் என்பன 6 மாதங்களுக்குள் அகற்றப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பௌத்தம் தவிர்ந்த ஏனைய மதத் தலங்களை அகற்றுவதில் அரசும் முழு ஈடுபாட்டுடனேயே செயற்படுகிறது என்பதையே இந்தக் கூட்டமும் அதில் எடுக்கப்பட்ட முடிவுகளும் உணர்த்துகின்றன. இலங்கையின் அரசமைப்பு எந்த ஒருவரும் தான் விரும்பும் மதத்தைப் பின்பற்றவும் அதற்கான வழிபாட்டிடத்தை அமைக்கவும் உரிமை வழங்குகின்றது. அதனடிப்படையில் அமைக்கப்பட்டு 50 வருடங்களாகப் பேணப்பட்ட பள்ளிவாசலையே இப்போது இடிக்குமாறு அரசு முஸ்லிம்களை நிர்ப்பந்திக்கிறது.

இந்த இடத்தில்தான் இலங்கை அரசுடனான இணக்க அரசியல் இடறுகிறது. ஆட்சியிலுள்ள அரசுகளுடன் இணங்கிப் போவதன் மூலம் தமிழர்களின் உரிமைகளைப் பெற முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிவருவதை தம்புள்ள சம்பவம் மிகத் தெளிவாகக் கேள்விக்குள்ளாக்கி உள்ளது.

கடந்த 50 வருடங்களாக இலங்கை அரசுடன் இணக்க அரசியலை நடத்திவரும் முஸ்லிம் சமூகத்தவர்களே இப்போது பௌத்த சிங்கள இனவாதத்திற்கு இரையாகி இருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்கோ அவர்களுக்கு ஆறுதலளிப்பதற்கோ இந்த அரசு தயாராக இல்லை. பதிலாக, பௌத்த சிங்கள இனவாதத்தை ஆதரிப்பதிலேயே குறியாக இருக்கிறது.

அதன் நீட்சியாக திருகோணமலை வைத்தியசாலையில் உள்ள இந்துக் கோயிலையும் அங்கிருந்து அகற்றும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தரவிட்டுள்ளது.

இவை எல்லாம் உணர்த்துவது ஒரேயொரு விடயத்தைத்தான். இந்த நாட்டில் இணக்க அரசியல் என்பது அரசியல்வாதிகளின் சுயலாபத்துக்கு உதவுமே தவிர உண்மையான இன நல்லிணக்கத்துக்கோ, ஒடுக்கப்பட்ட இனங்களின் உரிமைகளைப் பெறுவதற்கோ உதவாது என்பதே அது. முஸ்லிம் சகோதரர்களுக்கும் இதனைப் புரிய வைக்கும் போதி மரமாக தம்புள்ள விகாரை மாறியிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை, பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது எடுக்கப்பட்ட காணொலியில் பிக்கு ஒருவர், முஸ்லிம் கட்டடத்துக்கு எதிரான இந்த நடவடிக்கை ''தங்கள் இனத்தை நேசிப்பவர்களுக்கும் சிங்கள இரத்தத்தைக் கொண்டவர்களுக்கும் பௌத்தர்களுக்கும்'' கிடைத்த வெற்றி என்று தெரிவித்திருக்கிறார் என பி.பி.ஸி. அறிக்கையிட்டுள்ளது.

இந்த நாட்டில் முஸ்லிம்களின் 50 வருடகால இணக்க அரசியலுக்குக் கிடைத்த பரிசு இதுதான்.

# அடிக்கடி கழுவப்படும் அரிதாரங்கள்!

■ செந்தூரி

தேசிய இனமொன்றின் மீது அதே தேசத்தின் இராணுவப் பதர்கள் கட்டவிழ்த்து விட்ட கண் கூசும் அநாகரிக கொடூரங்களைத் துண்டு துண்டாக எடுத்துச் சேர்த்து சாட்சி வலுவாகச் செதுக்கிக் கொண்டிருந்தது உலகம். 'இலங்கையின் கொலைக்களங்கள்' என்ற படத்தை மையப்படுத்திய தேடல்கள், இணையத்தில் அதிகரித்தபடியிருந்த அதே நாள்களில்தான்,''வை திஸ் கொல வெறி''யை முதன்மைப்படுத்தி, 'யூடியூப்பில்'' அதிகம் பேரால் உசாவப்பட்ட காணொலிக்கான விருது கிடைப்பதற்குத் தானும் காரணமாகிய பூரிப்பில் பூத்துக் கிடந்தான் உலகத்தமிழன். ஜெனிவாவில் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர் இடம்பெற்ற சுமார் இருபது இராப்பகல் பொழுதுகளாக, தமிழனின் கண்கள் தேடிக்களித்த, பாடிக்களித்த ''ஆங்கில மப்புப்'' பாடலுக்குக் கிடைத்த மரியாதையினுள் தன் இனமானத்தையும் கொன்று புதைத்த பெருமை, அரிய வகைக்குரியது.

யாரோ போராடி, யாரோ இரத்தம் சிந்தி, யாரோ செத்து, யாராவது அடி வாங்கிக் கொண்டு வந்து தரும் சுதந்திரத்தை ''நோகாமல் நுங்கு தின்னும்'' சோம்பேறி மனநிலையில் ஒற்றைச் சுவட்டு முன்னேற்றத்தைக்கூட இன்னமும் கொண்டிராமலிருப்பதோ எமக்கான விருது! ''அடிமைகளாக சாவதன்'' அவலத்தை அனுபவித்து திகட்டியும் போதாமல், அடுத்த பரம்பரைகளிடமும் ''யாம் பெற்ற இன்பத்தை, குறைவின்றிக் கொடுத்தால்தான் எம் கட்டைவேகும்'' எனும் பிடிவாதத்தை எதைச் சொல்லித் திருத்திவிட இயலும்?

பிராந்திய நலன்களுக்குள், நசுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்த இனத்தின், வேருக்குரிய மக்கள் சமூகமும், போதுமான புரிதல்களுடன் கூடிய முன்னெடுப்புகளில் இன்னமும் காட்டும் தயக்கம், இனவிடுதலையில் இருண்ட நாள்களில், திரியில் பற்றாத தீக்குச்சிகளாய் வீணாகிக் கொண்டிருக்கின்றன.

தமிழர் தரப்புக்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கள் வலுவடைந்த, ஆயுதப் போராட்ட வடிவத்துக்குத் திரும்பிய காலம் முதலே, இலங்கையின் வட-கிழக்குப் பிராந்தியங்களின் அசாதாரண நிலை, இந்தியத் துணைக்கண்டத்தின் ''அமைதிக்கான சவால்'' எனும் மாயை தோற்றுவிக்கப்பட்டது.

தனியே சமாளித்து விட முடியாத ஆயுத, ஆள்புல, மனவலிமைப் படைகளின் உக்கிரத்தின் முன்னால் பேரினம் அபயம் கேட்டு முதலில் வீழ்ந்த பாதம், பாரதத்தினுடையது. நேருவின் வாரிசாக உலா அரங்குகளில் அடையாளப்படுத்தப்பட்ட, இந்திராகாந்தியின் காதில் முதன் முதலாக தமிழ்த் தேசியப் போராட்டத்தை, ''அழிக்கும் வேதமாக'' அறிமுகப்படுத்தி ஓதின சாத்தான்கள்!

தமிழர்களின் போராட்டத்துக்கான வரலாற்றுப் பின்னணி, இங்கைத் தமிழர்கள் தமிழகத்துடனும், அயல் மாநிலங்களுடனும் கொண்டிருந்த உறவுகள், திராவிட மொழிக் குடும்பங்களின் முக்கியத்துவம் கருதிய தேவை, போன்றவற்றைப் போதுமான புரிதலுடன் தன்னுள்ளே கொண்டிருந்த இந்திரா, [illegible] எடுக்கும் [illegible] சதி செய்தது. பின்னரான ராஜீவ் காந்தி முள்ளிவாய்க்காலின் முடிவுப் புள்ளி வரை, எம்மின விடுதலைப் போரை ''செத்தும் கெடுத்த(!) சீதக் காதி'' என்பது யாவரும் அறிந்ததே! என்றைக்கு இந்தியாவை மையப்படுத்தி, ''எதிரிக்கு எதிரி நண்பன்'' சூத்திரத்தில், எல்லா முடிச்சுக்களையும் அவிழ்த்து விடும் 'அல்ஜீபிரா'வை இலங்கை அரசு கையில் எடுத்ததோ, அன்றைய பொழுதிலேயே தமிழகத்தையும், தமிழகத் தமிழர்களையும் சம சிகிச்சைகளுக்கான சத்திர சிகிச்சை நிபுணர்களாக ஆழ்ந்து நம்பத் தொடங்கியது ஈழத்தமிழினம்.

அன்றைய தமிழக முதலமைச்சரான பொன்மனச் செம்மல் எம்.ஜி.ராமச்சந்திரனை இன்றும் வாழும் தெய்வமாக, நெஞ்சில் சுமக்கும் ஈழத்தமிழர்கள் மீதமிருக்கின்றனர். தமிழின விடுதலைப் போராட்டத்தைக் கருப்பொருளாகக் கொண்டு கிளம்பிய சகல, போராட்ட இயக்கங்களின் தொடக்குநர்கள் முதற் கொண்டு, வீறு கொண்டெழுந்த ஒவ்வொரு தனித்தமிழ் மகன் மீதிலும் 'வாத்தியார்' கொண்டிருந்த வாஞ்சை அளவிடற்கரியது.

சந்திப்புக்கெனச் சென்றிருந்த தலைவன், அரசியல் ஆலோசகர், மூத்த தளபதிகள் முன்னால் வீறுடன் அமர்ந்திருந்த முதலமைச்சர், காவலுக்கு வந்த புதுப் போராளியின் வாயிலிருந்து எதேச்சையாக வெளிவந்த 'ஆறு கோடி' இந்திய ரூபாவை வண்டியில் கொண்டு போய் வைக்கச் சொன்ன பெருந்தன்மை, எம்மினம் செய்த பாக்கியங்களில் ஒன்று. ''திருப்பி அடிக்கணும்னா, எவ்வோ தரணும்?'' எனக் கரகரத்த குரல் அடங்க முன்னரே, குறும்பாய் பதிலளித்த இளவயது வீரனின் பதிலுக்காக, எச்சரிக்கும் விதமாக அவனை திரும்பிப் பார்த்த மூத்த உறுப்பினர்கள் சகஜத்துக்கு வரமுன்னரே, தன்னால் கொடையளிக்க வேண்டிய தொகையை தீர்மானித்து விட்ட ''செம்மனம்'', வல்வெட்டியில் சிலையாக நிற்கும் அமைதிக்குக்கூட கொடுத்து வைக்கவில்லை!

கோரிக்கைக்கு முன்னரே உதவத் தீர்மானிக்கும் தமிழகத்தின் குணம் பின்னநாள்களில் பேச்சளவில் மட்டுமே நின்று போகுமளவுக்கு, தமிழக மக்களை டில்லியின் தாளங்களுக்கு ஆடும் பொம்மைகளாக, அடுத்தடுத்து முதலமைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருணாநிதியும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஜெயலலிதாவும் சுலபமாக மாற்றிவிட்டிருந்தனர்.

சுஷ்மா சுவராஜ் தலைமையிலான சமரசப் படையணியின் பயணம் நிச்சயம் தமிழ் மக்களின் அவலத்தை திரும்பிப் பார்ப்பதாகவோ, அதை உலகுக்கு வெளிக்கொணரும் முயற்சிகளையோ துளியும் கொண்டிருக்கவில்லை. ஜெனிவாவில் ''சந்தர்ப்பவசத்தால் செய்து விட்டோம் அப்படி'' என்கின்ற சமாளிப்பு, 'பொக்ஹே' வருகைக்குரிய குழுவினர்கள்தான் என்பதை நெளிவு சுழிவுகள் நன்கறிந்த கருணாநிதியும், ஜெயலலிதாவும் அறியாதவர்களா என்ன? பின் எதற்காக, இந்தியக் குழு இலங்கை செல்லவிருக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டு, இலங்கைக்கு வரும் உறுப்பினர்களைத் தீர்மானிக்கும் வரை பொறுத்திருந்து, தமது தரப்புப் பிரசன்னங்களை நிராகரிக்க வேண்டும்.

உக்கிரமான போர்க் காலங்களில் காங்கிரஸ் கட்சியின் மத்திய ஆட்சியில் முட்டுக் கொடுத்த பெருமை தி.மு.கவினுடையது. ''நிறுத்து'' என்கின்ற ஒற்றைச் சொல் மூலம் கொழும்பின் கொழுப்பை அடக்கி, மரணவளையங்களுக்குள் துணி முடிச்சுக்களுடன் உயிர் அவித்துக் கொண்டிருந்த லட்சோபலட்சம் ஈழவர்களை இலகுவாக மீட்டிருக்க முடியும். இளையவன் ஸ்டாலின் மாநிலத்தில் முதன்மைப்பட வேண்டுமென்பதற்காய், மூத்தவன் அழகிரியை டில்லியில், கமிஷன், கூடிய அமைச்சில் அமர்த்தியாக வேண்டிய தேவைநாடி, சக்கர நாற்காலியில் ஊர்ந்து டெல்லி மாளிகைகளின் கதவுகளை ''அந்த இளைஞன்'', தட்டிக் கொண்டிருந்த போது மே-19 ஆம் திகதி விடிந்து இருண்டு விட்டிருந்தது.

தேர்தல் வாக்குறுதியாக, 'தனி ஈழ ஆதரவை' அவசரமாகப் பதினாறு புள்ளிக்கோலமாக தெளித்தவர் அம்மா! ஈழ ஆதரவாளர்களை நாவடக்குவதற்காக 'பொடா', 'தடா'போன்றவற்றைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்திய அ.தி.மு.கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளரின் திடீர் மாற்றம் இந்து சமுத்திரத்தையும் தாண்டி தமிழர் வாழும் தேசங்களிலெல்லாம் சூடாகப் பேசப்பட்டது.

''ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி'' உறவாடும், வழக்கமான பாணியில் தமிழக மக்களின் அறியாமையை வாக்குகளாக நிரப்பி ஆட்சியில் அமரும் மலிந்த உத்தியாக மாலை சூடிக் கொண்டது இதய தெய்வம்.

எல்லா மாவட்டங்களிலும் தினமும் எட்டுமணி நேரத்துக்கு மேற்பட்ட கடுமையான மின்வெட்டு, கூடங்குளம் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையை பசிக்குரலில் பதைபதைக்க வைத்த உதயகுமாரனும் பிற அணு உலை எதிர்ப்பாளர்களும், பெங்களூர் நீதிமன்றங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சொத்துக் குவிப்பு வழக்கின் இறுதிக் கட்ட விசாரணைகள், சசிகலா - நடராஜன் போன்ற உட்கட்சி கோஷ்டிகளின் அதிரடி நீக்கமும், தங்கையை மட்டும் மீள அணைத்ததும், எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் மீது எண்ணற்றுப் போடப்பட்டுள்ள போலி நில அபகரிப்பு பழிவாங்கல்கள் என மான்புமிகு ஜெயராம் ஜெயலலிதாவையும், ஆட்சியையும் சூழ்ந்துள்ள கடுமையான பொதுஜன அதிருப்திகளை, அநாயசமாக சமாளிக்க எடுத்த பாணமே, ''இலங்கைக் குழு புறக்கணிப்பு!''

2016 வரை தேர்தல்களை ஒதுக்கி வைத்துள்ள, செந்தமிழன் சீமானின் 'நாம் தமிழர் கட்சி', தேர்தல்களை திரும்பியும் பார்க்காத கௌத்தூர் மணியின் 'பெரியார் திராவிடக் கழகம்', தனியொருவனாக தினமும் எமக்காக அழுகின்ற வை.கோ, பழ.நெடுமாறன் உள்ளிட்ட பலரை, தமிழக மக்கள் பெருந்திராவிடக் கட்சிகளுக்கு மாற்றான அரசியல் சக்திகளாக கணிக்கும் காலம் கனியும் வரை, நாம் கடிதப்பரிமாற்ற வீதி நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு பெறமட்டுமே முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இரா.ரிசாந்

# தேசத்துக்கு மகுடம் எனும் ஜனாதிபதி பிரசார சந்தை

தேசத்துக்குமணிமகுடம், பல கோடி ரூபா செலவில் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

அனுராதபுரம்-ஓயாமடுவில் நடைபெற்றுமுடிவடைந்த 'டயட்ட கிரில்ல' என்ற தேசத்தின் மணி மகுடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ற தனி மனிதனின் பிரசாரமகவே எல்லோராலும் உணரப்பட்டது.

சுமார் 600 ஏக்கர் நிலப்பரப்பில் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்ட மணிமகுடம் கண்காட்சிக் கூடங்கள் யாவும் ஜனாதிபதியை மேம்படுத்தியும், அவரின் சகோதர அமைச்சுக்களை வாழ்த்தியும் உருவாக்கப்பட்டிருந்தன.

கடந்த 30 வருடமாக நிலைகொண்டிருந்த விடுதலைப்புலிகளை அழித்ததும், தமிழரின் தாயகப் பூமியை சிதைவுறச் செய்ததையும், அங்கு இப்போது அரசாட்சி இடம்பெறுவதையும் இந்தக் கண்காட்சி கோடிட்டுக் காட்டுகின்றது.

ஒவ்வொரு அமைச்சும் தன்னாலான அதிகூடிய பங்களிப்பினை முதன்மைப்படுத்தித் தனது சேவைகளையும்-உற்பத்தி முறையையும் எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தன.

ஜனாதிபதியினதும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினதும் அமைச்சின் கீழ் வருகின்ற இராணுவ காலாட்படை, கடற்படை, விமானப்படை என்பவற்றின் கண்காட்சி பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியாகவும் சிறுபான்மைத் தமிழர்களைப் பொறுத்தவரை ஏக்கமாகவும், துன்பகரமானதாகவும் இருந்தது. வேறு ஒன்றுமில்லை 2009-மே 18, 19 இல் தமிழரை முள்ளிவாய்க்காலில் மக்களை அழிக்கப் பயன்படுத்திய இராணுவத் தளபாடங்களும், யுத்த தளபாடங்களும், ஆயுதங்களும் பார்ப்போர் மனதை கஷ்டப்படுத்திய வண்ணம் இருந்தன.

தேசத்திற்கு மணி மகுடம் என்பது ஐக்கிய இலங்கைக்குள் ஐக்கியம், ஒருமைப்பாடு, தேசியம் என்பன கருத்தொருமித்து இருக்கும்.

ஆனால் தேசத்திற்கு மணி மகுடம் கண்காட்சி ஆனது தமிழர் மனங்களில் வடுக்களையும் துன்பங்களையும், பெரும்பான்மையினரின் மனங்களில் சிலருக்கு வெறுப்பையும், கூடுதலானோருக்கு இன்ப சுகத்தையும் கொடுத்ததை உணரக் கூடியதாக இருந்தது.

அந்தளவுக்குத் தேசத்திற்கு மணிமகுடம் கண்காட்சி தமிழர் விரோதப் போக்குகளை மையமாகக்கொண்டு சித்தரிக்கப்பட்டிருந்தது.

பல மைல்களுக்கு அப்பால், பல மணிநேரங்களை செலவழித்து ஓயாமடுவுக்கு சந்தோஷமாக வந்த பலரை மனதளவில் களைப்படையவும் செய்திருக்கின்றது.

அந்தளவுக்கு ஓயாமடு தேசத்துக்கு மணி மகுடம் கண்காட்சியின் இராணுவ,கடற்படை மற்றும் விமானப்படையினரின் கண்காட்சி அமைந்திருந்தது.

இந்தக் கண்காட்சி 2012 இல் ஓயாமடுவில் இடம் பெற்றுள்ளது. இதற்கு முன்னரும் தென்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான கண்காட்சியை வடக்கில் உள்ள கிளிநொச்சி-முல்லைத்தீவில் நடத்துமாறு பொது அமைப்புக்களும், பிரதேச உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கேட்டிருந்தனர்.



கடந்த 30 வருடமாக நிலைகொண்டிருந்த விடுதலைப்புலிகளை அழித்ததும், தமிழரின் தாயகப் பூமியை சிதைவுறச் செய்த தையும் அங்கு இப்போது அரசாட்சி இடம்பெறுவதையும் இந்தக் கண்காட்சி கோட்டிட்டு காட்டியது.

ஆனால் ஓயாமடுவில் இடம்பெற்ற கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றும் போது அடுத்த கண்காட்சி கிழக்கு மகாணத்தில் (2013) நடத்தப்படும் என அறிவித்துள்ளார்.

உண்மையில் தேசத்துக்கு மணி மகுடம் கண்காட்சியூடாக அந்தப் பிரதேசத்தின் கிராமங்களை மையக் கருவியாக வைத்து மாவட்டத்தை அபிவிருத்தி செய்வது பிரதான நோக்கமாகும்.

ஆனால் இந்தச் தேசத்தின் மகுடம் அதை முன்னிறுத்தவில்லை. மாறாக இராணுவ கண்காட்சியே நடந்தது.

இதற்காகப் பல கோடி ரூபா வீண் செலவு செய்வதை அரசு கைவிட்டு (இராணுவ தளபாடக் காட்சி) பிரதேச அபிவிருத்தியை முன்னிறுத்தி கிராமங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

எனவே 2013 தேசத்தின் மணி மகுடம் வடக்கை விலக்கி, கிழக்கில் நடத்தப்படவுள்ளது.

இது கிழக்கை அபிவிருத்தி செய்ய வேண்டுமே ஒழிய இராணுவத்தின் மகிமையை, பெருமையைக் காட்டி மீண்டும் ஒரு துவேசத்தை உருவாக்கி விடாக் கூடாது.

எனவே தேசத்தின் மணி மகுடம் கிழக்கில் அபிவிருத்திக்கு வித்திட்டு புது மெருகூட்டப்பட வேண்டும். இதுவே மெய்யான மணி மகுடத்தை வெளிக்காட்டும்-மெய்யான தேசத்தையும் வெளிக்கொணரும்.

கிழக்கில் நடைபெறப் போகும் மணிமகுடக் கண்காட்சி கிழக்கு மகாண மாவட்டங்கள் அபிவிருத்தி பெற உதவவேண்டும். ✱

# பறிக்கப்படும் தொழில் உரிமை

■ சுகன்யா

"எங்களுக்கென்று இப்ப நிரந்தரமா இருப்பது இந்தக் கடல் வளம் மட்டும்தான். அதையும் விட்டுவைக்காமல் சுரண்டும் வேலையில் தென் இலங்கையைச் சேர்ந்தவர் இறங்கி விட்டார்கள்."

"இதில் பாதிப்படைவது நாங்கள் மட்டும் இல்ல. எங்கட வாழ்வாதாரம், எங்கட சீவியம் என்று எல்லாமேதான். இப்ப நிம்மதியா வாழ வழி கிடைக்கேல்ல நடப்பதைப் பார்த்து கொண்டிருப்பதை தவிர வேறென்னதான் எங்களால் செய்யமுடியும்." இப்படித்தான் குமுறுகின்றனர் செம்மலை மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை பகுதிக் கடற்றொழிலாளருக்கு இப்போது ஒரு புதுப்பிரச்சினை எழுந்துள்ளது. இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் கடல்வளத்தினை சுரண்டுவதற்குத் தென் இலங்கையிலிருந்து ஒரு தொகுதி சிங்களத் தொழிலாளர்கள் செம்மலைக் கடற்கரைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளார்கள்.

ஏட்டிக்குப் போட்டியாக இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட தென் இலங்கைக் கடற்றொழிலாளர்களினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள் செம்மலைப் பிரதேச கடற்றொழிலாளர்கள். செம்மலைப் பிரதேசத்தில் தற்போது வசிக்கும் குடும்பங்களில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் கடற்றொழிலினை பிரதான தொழிலாகக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைப்பதாக அண்மையில் வருகைதந்த தெற்கு மீனவர்களின் வருகை அமைந்துள்ளது.

வன்னியில் இடம்பெற்று முடிந்த போர்க் கொலைக்களத்தின் பின்னர் நலன்புரி முகாம்களில் முடக்கப்பட்ட இந்தப் பிரதேச மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்வு செய்யப்பட்டபோது, தமக்கான ஒரு நிரந்தர இருப்பிடம், நிரந்தரத்தொழில், நிம்மதியான வாழ்வு கிடைக்கும் என்ற ஆவலுடன் குடியேறினார்கள்.

"இதில் பாதிப்படைவது நாங்கள் மட்டும் இல்ல. எங்கட வாழ்வாதாரம் எங்கட சீவியம் என்று எல்லாமேதான். இப்ப நிம்மதியா வாழ வழி கிடைக்கேல்ல நடப்பதைப் பார்த்து கொண்டிருப்பதை தவிர வேறென்னதான் எங்களால் செய்யமுடியும்."

ஆனால் இவர்களுக்குக் கிடைத்ததோ நிம்மதியற்ற, நிர்க்கதியான வாழ்வேயாகும். இதனால் இவர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல தொழில் அபிவிருத்தியும் வீழ்ச்சியைக் கண்டது. மீளவும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டபோது கடலில் தொழில் செய்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

தொழில் வல்லமை இருந்தும் நிரந்தர தொழிலைக் கைவிட்டு வயிற்றுப் பசியைப் போக்குவதற்காகக் கூலி வேலை செய்து பிழைப்பை நடத்தி வந்தார்கள். காலங்கள் கடக்க அரசுக்குக் கொடுத்த நெருக்கடிகள் காரணமாக செம்மலை கடற்றொழிலாளர்களுக்குக் கடலுக்குச் சென்று தொழிலை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இதன் காரணமாகக் கடற்றொழிலாளர்கள் தமக்கு ஒரு புதுவாழ்வு கிடைத்து விட்டதாக நினைத்து அதே சந்தோஷத்துடன் பரபரப்பாக கையில் கிடைத்த உபகரணங்களுடன் தமது தொழிலினை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள்.

போரின்போது இழந்த கடற்றொழில் உபகரணங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு இவர்களிடம் வசதிகள் காணப்படவில்லை. இதன் காரணமாக தொழிலுக்குத்தேவையான கடற்றொழில் உபகரணங்களை தேடும் முயற்சியினை இவர்கள் கைவிடவில்லை அதற்காகச் சிறிதுகாலம் தேவைப்பட்டது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் கடைக்கண் பார்வையும் செம்மலைக் கடற்றொழிலாளரின் பக்கம் திரும்பியது. இதன் பயனாக ஒரு சில கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களும் கிடைக்கப்பெற்றது. இதனைவிட சில கடற்றொழிலாளர்கள் தமது முயற்சியின் பயனால் வங்கிகள்மூலம் கடன் உதவிகள் பெற்றுத் தேவையான உபகரணங்களை வாங்கினார்கள்.

இவ்வாறு காலம்தாழ்த்தி கடற்றொழிலாரின் முயற்சியினால் மீளவும் செம்மலைக்கடலில் கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெற்றன.

அப்பாடா என நிம்மதியுடன் கடற்றொழிலினை மேற்கொள்ள முடியும் என நினைத்த தொழிலாளர்களுக்கு இப்போது ஒரு புதுப் பிரச்சினையாகத் தென்னிலங்கை மீனவர்களின் வருகை காணப்படுகின்றது.

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களின் என்றுமில்லாத வருகையால் வடமாகாணத்தின் வளங்கள் சூறையாடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தத் தருணத்தில் பெருந்தொகுதி கடல் வளத்தினை மட்டும் அவர்கள் விட்டு வைக்கவா போகிறார்கள்.

எங்கெல்லாம் நுழைந்து தம்மால் சூறையாடமுடியுமோ அங்கெல்லாம் தமது உற்பத்திகளை செயற்படுத்துவதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சற்றும் தயங்கவில்லை. அரசின் ஆதரவு இவர்கள் பக்கம் இருக்கும்போது, எதற்கும் பயப்படவேண்டிய அவசியம் இவர்களுக்கு இல்லைத்தானே.

இவர்களின் இத்தகைய செயற்பாட்டினால் பெரிதும் பாதிப்படைவது அன்றாட சீவியத்தை நடத்த அல்லல்படும் அப்பாவி குடும்பங்கள்தான். இதனைவிட எமது வளமும் சூறையாடப்பட்டுக்கொண்டு செல்லப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 'நாங்கள் கடற்றொழில் செய்வதற்கு தொழிலுக்குத் தேவையான கடற்றொழில்உபகரணங்கள் இல்லாமல் அல்லல்பட்டபோது அரசு எதுவித உதவியும் செய்வதற்கு முன்வரவில்லை.' என்று உண்மையை போட்டுடைக்கின்றனர் செம்மலை மக்கள்.

ஆனால் இப்பொழுது தென்னிலங்கையிலிருந்து தொழிலுக்கு வந்துள்ளவர்களுக்கு தேவையான வசதிகளை அரசு வழங்கியுள்ளது

"எங்களுக்கென்று சொந்தமாய் இருப்பது கடல்மட்டும் தான் என்று நினைச்சம். ஆனால் இப்ப எல்லாமே கைவிட்டுப் போச்சு" என்பதே பாதிப்படைந்துள்ள செம்மலைக் கடற்றொழிலாளரின் மனக் குமுறல்களாக உள்ளது.

மீளவும் ஒரு புதுத்துயர், வாழ்வாதாரத்தை கவிழ்க்கும் செயற்பாடாக தற்போது நடைபெறுவதாக இவர்கள் விசனம் சொல்லாமல்லில்லை.

வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் பிரதானமானது அவர்கள் மேற்கொள்ளும் தொழிலாகும். இதனைவிட மேற்கொள்ளும் தொழிலின் அபிவிருத்தியுமே பிரதானமாகவுள்ளது.

ஆனால் செம்மலைக் கடற்றொழிலாளர்களின் அபிவிருத்தியை முடக்கும் செயலில் இலங்கையின் சிங்கள மீனவர்கள் இறங்கியுள்ளனர்.

இங்குள்ள கடல்வளம் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் சுரண்டப்படுவதால் கிடைக்கின்ற இலாபமும் குறைவடைந்து வருகின்றது. இவர்களின் தொழில் அபிவிருத்திப் பின்னடைவைச் சந்திக்கும் துர்ப்பாக்கிய நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது.

தொழில் அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள பின்னடைவினால் செம்மலைப் பிரதேச மக்கள் வறுமைக்குள் தள்ளப்படுகின்றனர்.

எகிறிக்கொண்டுபோகும் விலைவாசி எதிர்காலத்தில் வயிற்றுப்பசியைக் கூட பூரணமாக நிறைவேற்ற முடியாமல் செய்துவிடுமோ என இங்குள்ள மக்கள் அஞ்சுகின்றனர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவகாருண்யம்

ஒருத்தருக்கு கத்தரிக்காய் மிகவும் பிடிக்கும்! இன்னொருத்தருக்கு பூசனிக்காய் பிடிக்கும். ஒருவர் கோயில் போனால் பரவாயில்லை என நினைப்பார்! இன்னொருவர் ஹோட்டலுக்குப் போனால் பரவாயில்லை என நினைப்பார்.

இவ்வளவு ஏன்? எனக்குத் தெரிந்த ஓர் இணைபிரியாத தம்பதிகள். அவர் புடைவைக் கடைக்குப் போய் ஒரு புடைவை வாங்கிக் கொண்டு வருகின்றார். வழியில் பார்த்த ஒருத்தர்''என்ன விஷேசம்'' என விசாரித்தார். எங்களுக்கு இன்றைக்கு ''கல்யாண நாள்'' அதற்குப் பரிசா இந்தப் புடைவையை வாங்கிக் கொண்டு போறேன். மனைவிக்குப் பிடித்த பச்சை நிறம். திடீரெனக் கொண்டு போய்க் கொடுத்து ஆச்சரியப்படுத்தப் போறேன்'' என்று சொல்லிவிட்டு அவசரமாக ஓடினார். அவரது மனைவியை ஆச்சரியப்படுத்தினாரோ இல்லையோ விசாரித்தவரை ஆச்சரியப்படுத்தினார். ஆமாம் எவ்வளவு வேகமாக ஓடினாரோ அதைவிட வேகமாத் திரும்பி ஓடிவந்தார்.

என்ன விடயம் என விசாரித்தேன். ''புடவை நிறம் பிடிக்க வில்லையாம். அதுதான் மாற்றிக் கொண்டு வரலாம் எனக் கடைக்குப் போகிறேன்'' எனச் சொல்லிவிட்டு ஓடினார்.

இது எதற்கு சொல்கிறேன் என்றால்... ஒருவர் மனது இன்னொருவர் மனது போல இருப்பதில்லை. ஆனால் எல்லோருக்கும் ஒரு விடயத்தில் மட்டும் ஒரே மனம். அதாவது சந்தோசமாக இருக்க வேண்டும் என எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். மனிதன் மட்டுமல்ல... பறவை, விலங்கு எல்லாவற்றுக்கும் இதுதான் அடிப்படையான நோக்கம்.

நோக்கம் சரி. ஆனால் எல்லோரும் இன்பமாக இருக்கிறார்களா? தினமும் கஷ்டப்படுவதாகத் தானே எல்லோரும் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? வழி தெரியாததுதான் காரணம்.

என்ன விதைக்கிறோமோ அது தானே விளையும். ''பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்''

திருவள்ளுவர் சும்மா பயமுறுத்தி வைப்போம் என்பதற்காக இதைச் சொல்லி வைக்கவில்லை. உண்மை இது. கருணை உள்ளம் வேண்டும்.

குசேலரைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.வறுமையில் வாடினார். கண்ணனைப் பார்ப்பதற்கு துவாரகைக்குப் போய்க்கொண்டிருந்தார். அவந்தியிலிருந்து துவாரகை நிறையத் தூரம். கடுமையான வெயிலில் நடந்துபோய்க் கொண்டிருந்தார். குடை இல்லை. செருப்பு இல்லை. வீதியின் இரண்டு பக்கமும் நல்ல நிழல் தரு மரங்கள் இருந்தன. இருந்தாலும் இவர் நிழலில் போகவில்லை. வெயிலில் போய்க்கொண்டிருந்தார். மண் சுடுகின்றது. காலை வைக்க முடியாத அளவுக்கு சூடு. இருந்தாலும் அவர் நிழலில் ஒதுங்காமல் நடு வீதியில் போய்க்கொண்டிருந்தார்.

என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? ஈ, எறும்பு, புழு இது மாதிரி சின்ன உயிர்கள் எல்லாம் கடுமையான வெயில் தாங்காமல் நிழலில் ஒதுங்கி இருக்குதாம். நாம் நிழலில் நடந்தால் அது புழு, பூச்சி மேல் அடிவைப்பதைப் போல் ஆகிவிடும் என்று நினைத்தார். அதனால் வெயிலில் நடந்தார்.

''சீத நீழற்செலில் சிற்றுயிர்த் தொகை போதச் சாம்பும் என்று எண்ணிய புந்தியான் ஆதவன் தவழ் ஆறு நடந்திடை காதல் அங்கை விரித்துக் கவித்தரோ'' இது குசேலோ பாக்கியானம்.

எப்பேற்பட்ட கருணை.


சங்ககால தலைவன் ஒருவன் தவெளியூர் போய் திரும்பி வந்துகொண்டிருந்தான். தன் வீட்டில் இருக்கும் தலைவியை நினைத்துக் கொண்டு வந்துகொண்டிருந்தான். மணிகள் பூட்டிய தேரில் வருகிறான். வழியில் இரண்டு பக்கமும் பூஞ்செடிகள். ஏகப்பட்ட மலர்கள். அதில் ஆண் வண்டு-பெண் வண்டு எல்லாம் சோடியாக உட்கார்ந்து கொண்டு தேன் குடித்துக் கொண்டிருந்தன.

தலைவன் இதைப் பார்த்தான். தேரில் கட்டியிருக்கும் மணிகள் சத்தம் போட்டுக்கொண்டே வருகின்றன. இந்த சத்தத்தைக் கேட்டால் தேன் சாப்பிடுகின்ற வண்டுகள் பயப்படும். அது அந்த சோடி வண்டுகளுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று நினைத்தேன். தேரை நிறுத்தினான். தேரில் இருக்கும் ஒவ்வொரு மணியினுடைய நாக்கையும் அசையாதபடிக்கு சின்ன சின்ன கயிற்றில் கட்டிப் போட்டான். இனிமேல் சத்தம் கேட்காது. இனிமேல் வண்டுக்கு தொந்தரவு இல்லை. அதன் பின் தேரில் ஏறித் தன் தலைவியைப் பார்ப்பதற்குப் போனானாம்.

எப்படிப்பட்ட கருணை பார்த்தீர்களா?

கருணை என்பது மற்ற மனிதர்களிடம் காட்டுவது மட்டுமில்லை. மற்ற உயிர்களிடமும் காட்டவேண்டும்.

சங்ககாலத் தலைவன் கதையை இந்தக் காலத் தலைவர் ஒருவரிடம் சொன்னேன். குடும்பத்தலைவர். அவர் சொல்கிறார் ''அந்த மனிதன் தேர் மணியில் இருக்கும் நாக்கை எல்லாம் கயிற்றினால் கட்டிப்போட்டான். சத்தம் கேட்கக் கூடாது என்பதற்காக.



எனக்கு அந்த அளவுக்குகூட அவசியம் இல்லை; ஒரே ஒரு நாக்கை கட்டிப்போட்டேன் என்றால் போதும். சத்தம் இருக்காது'' என்றார்.

''யாருடைய நாக்கை சொல்கி றீர்கள்'' என்றேன். ''பிரச்சினை வேண்டாம் வாழ்ந்தது வாழ்ந்து விட்டேன். மீதி காலத்தையும் இப் படியே வாழ்ந்து விடலாம்'' என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் விட்டார்.


**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# பெண்கள் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவும் ஞானசம்பந்தர் சனசமூக நிலையம்

**கர்ணன்**

(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் கருத்தரங்குகள் நாடகங்கள், விவாத அரங்குகளை மன்றத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான க.நடனசபாபதி முன்னின்று ஏற்பாடு செய்துள்ளார்.



ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் தையல் பயிற்சி பெறும் சில மாணவிகள், போதனாசிரியர்கள்.

இந்த மன்றத்தின் சனசமூக நிலையம், நூலகசேவை, கருத்தரங்குகள், நாடகங்கள், விவாத அரங்குகள் ஆரம்பமான 1962ஆம் ஆண்டிலேயே இந்த மன்றத்தினால் தையல் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பயிற்றப்பட்ட தையல் ஆசிரியையினால் தையல் பயிற்சிகள் புலோலி கிழக்கைச் சேர்ந்த யுவதிகளுக்கு மட்டுமன்றி அயல் கிராமங்களைச் சேர்ந்த படித்த பெண்களுக்கும் தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 40 வருடகாலத்தில் அதாவது கடந்த 2002 ஆம் ஆண்டுவரை ஆயிரத்துக்கு அதிகமான பெண்கள் கலாமன்ற தையல் பயிற்சிப் பாடசாலையில் தையல் பயிற்சியை பெற்று வெளியேறியுள்ளதுடன் அவர்களில் பலர் சுயதொழில்களை மேற்கொண்டு தமது வாழ்க்கையை வளம்படுத்தியுள்ளனர். சிலர் தமது சுயதேவைக்கு தமது பயிற்சிகளைப் பயன்படுத்திவருகின்றனர்.

ஞானசம்பந்தர் கலைமன்ற தையல் பாடசாலையில் 2 ஆண்டுகள் தையல் பயிற்சி பெற்றோர் சிறுகைத்தொழில் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தையல் பரீட்சையில் சித்தியடைந்து டிப்ளோமா சான்றிதழ்களைப் பெற்றுள்ளார்கள். இந்த தையல் பயிற்சிப் பாடசாலையில் கடந்த 1965, 1966ஆண்டுகளில் பயிற்சி பெற்று இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய முதலாவது அணியில் செல்விகள் சூரியகுமாரி குமாரசாமி, சீதாதேவி இராஜசிங்கம், புவனராணி கனகசேகரம், யோகரஞ்சிதம் முருகேசு, இரத்தினாவதி இரத்தினசிங்கம் ஆகிய 5 மாணவிகள் சித்தி பெற்று தையல் டிப்ளோமா தகுதியை முதன் முதலில் பெற்றார்கள்.

1997 ஆம் ஆண்டிலிருந்து தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை நடத்திய தையல் பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றிய செல்விகள் பி.பாமினி, மேரி மேலன் செபமாலை, பி.எம்.ஏ.ஜானிசினி, எஸ்.சாந்தினி ஆகியோர் சித்தியடைந்து டிப்ளோமா சான்றிதழ் பெற்றார்கள்.

> மன்றத்தின் தொழிற்பயிற்சி, தொழிற் கல்வித் திட்டத்தின் கீழ் 1980களில் தட்டச்சுப் பயிற்சிவகுப்புகள், ஆரம்பிக்கப்பட்டன. இந்ததொழிற் பயிற்சிக்கென கனடா உதவித் திட்டத்தின் கீழ் 6 தமிழ் தட்டச்சு இயந்திரங்களும் 6 ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் அவற்றுக்குரிய தளபாடங்களும் மன்றத்துக்கு அன்பளிப்பாகக் கிடைத்தன.

மன்றத்தின் தொழிற் பயிற்சி, தொழிற் கல்வித் திட்டத்தின் கீழ் 1980களில் தட்டச்சுப் பயிற்சிவகுப்புகள், ஆரம்பிக்கப்பட்டன. இந்த தொழிற்பயிற்சிக்கென கனடா உதவித் திட்டத்தின் கீழ் 6 தமிழ் தட்டச்சு இயந்திரங்களும் 6 ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் அவற்றுக்குரிய தளபாடங்களும் மன்றத்துக்கு அன்பளிப்பாகக் கிடைத்தன. இவற்றை வைத்துக் கொண்டு தமிழ், ஆங்கில தட்டச்சு பயிற்சி மேம்படத் தொடங்கியது. பாடசாலைகளை விட்டு வெளியேறிய மாணவர்கள் வருடந்தோறும் நூற்றுக்கு அதிகமானவர் இந்தப் பயிற்சியைப் பெற்று வெளியேறினார்கள். இவர்களில் ஒவ்வொரு ஆண்டும் அர அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் பரீட்சைகளில் 50 வீதமான மாணவர்கள் சித்தியடைந்து தராதரப் பத்திரங்களைப் பெற்று வந்துள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் தட்டச்சுப் பயிற்சி பெற இலங்கைக்கான கனடா தூதரகம் கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி அன்பளிப்புச் செய்த 12 தட்டச்சு இயந்திரங்கள் 12 தட்டச்சு மேசைகள், 12 தட்டச்சுக் கதிரைகள் ஆகியவற்றின் அந்தக் காலத்தில் பெறுமதி ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 380 ரூபாவாகும்.

கடந்த 1970 காலப் பகுதியில் கலாநிதி பதியுதின் மஹ்மூத் கல்வி அமைச்சராக இருந்த போது பாலர்பாடசாலை நாட்டில் அறிமுகமாகவில்லை. அவ்வாறான ஒரு காலத்தில் அதாவது 1972 ஆம் ஆண்டு புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் காலைமன்றம் முதன் முதலாக 1972 ஆம் ஆண்டு பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தது. இந்தப் பாடசாலைக்கு முதலாவது பாலர் பாடசாலை ஆசிரியராக செல்வி கு.சூரியகுமாரி நியமனம் பெற்று பணியாற்றினார். இவர் 1996 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். 25 ஆண்டு காலம் இவர் ஆசிரியையாகக் கடமையாற்றி இந்தப் பிரதேசத்தில் சிறந்த மாணவர்களை உருவாக்கி அவர்களின் வளர்ச்சிக்கு ஏணிப்படியாக இருந்து வந்துள்ளார். அவரது கடின உழைப்பால் சிறந்த கல்விச் சமூகம் ஒன்று வளர அவர் அடித்தளமிட்டுக்கொடுத்துள்ளார்.

இவரைத் தொடர்ந்து செல்வி சு.தாரணி, திருமதி ம.சுகந்தா ஆகியோர் இணை ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்தனர். கடந்த 2002 ஆம் ஆண்டுவரையான 30 வருட காலத்தில் ஞானசம்பந்தர் கலைமன்ற பாலர் பாடசாலையில் ஆண்டுதோறும் சராசரி 30 பிள்ளைகள் கற்று வெளியேறியுள்ளனர். இந்தப் பாடசாலை பருத்தித்துறைப் பிரதேசத்தில் மிகச்சிறந்த பாலர்பாடசாலையாக இயங்கி வருவதுடன் தும்பளை சைவப் பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்கள் இந்த மன்ற பாலர் பாடசாலையில் கற்றுச் செல்லும் மாணவர்களைத் தேடித்தந்து கொண்டிருக்கின்றனர் என்று குறிப்பிட்டனர். இது மாணவர் ஒழுக்கம், கல்வி, பண்பாடு, சமயப் பற்று, இசைத்துறை ஆகியவற்றில் உயர் நிலையில் இருப்பதையே சுட்டிக் காட்டிவருகின்றது.

இந்தப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 25 வருடகாலத்தில் 750 மாணவர்கள் இங்கு பயின்று வெளியேறியுள்ளார்கள். இந்தக் காலங்களில் இங்கு கல்வி கற்ற பாலகர்கள் பலர் பொறியியல், வைத்தியம், ஆசிரியர் மற்றும் பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாக பெரும் பகுதிகளில் பதவிகளில் இருக்கின்றார்கள். இவர்களில் பலர் இன்று ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் அங்கத்தவர்களாகவும் இருந்து மன்றத்துக்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் தேவைக்காக எனினும் காணி அபகரிப்பை ஏற்க முடியாது

## விஜித ஹேரத் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஏப்.25
படையினரின் தேவைகளுக்காக பொது மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. எனவே தேசிய இனப்பிரச்சினையுடன் விளையாடாது தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை தீர்த்து வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி. பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசின் காலம் கடத்தும் செயலாகும்.

வடக்கில் மீள் குடியேற்றங்கள் கூட ஐ.நா.விதிமுறைகளுக்கு முரணான வகையிலேயே இடம்பெறுகின்றன. தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படாவிட்டால் மீண்டும் பிரிவினை வாதம் ஏற்பட்டு நாடு பிளவு



படும். இதற்கான வெளிப்பாடுகளை இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் வெளிப்படுத்தி வருகின்றன .

இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று செயற்படுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை வந்த இந்திய சர்வகட்சி நாடாளுமன்றக் குழுவிடம் வாக்குறுதியளித்துள்ளார். ஆனால் நாட்டு மக்களுக்கோ வேறொரு காரணத்தை கூறியே தனது இரட்டை முகத்தை அரசு காட்டி வருகின்றது.

அரசு உண்மையான நோக்கங்களை நிறைவேற்றாது தமிழ் மக்களின் பிரச்சினைகளில் விளையாடுகின்றது. நாடாளுமன்ற தெரிவுக் குழுவை வெறும் காலம் கடத்தும் செய லாகவே கருத முடியும். இதற்கு முன்னரும் பல தெரிவுக் குழுக்கள், சர்வ கட்சிக் குழுக்கள் அமைத்து பேச்சு முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அவற்றின் தீர்வுத் திட்டங்கள் இன்று குப்பைத் தொட்டிகளிலேயே காணப்படுகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனும் அரசு கடந்த சில காலமாக பேச்சுக்களை முன்னெடுத்துள்ளது. ஆனால் அதிலும் அரசு இணக்கப்பாடொன்றுக்கு வரவில்லை. எனவே அரசு பிரச்சினைகளை தீர்த்து வைக்காது புதிய பிரச்சினைகளுக்கான சூழலை அமைத்துக் கொடுக்கின்றது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை அத்தியாவசிய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் அரசு தோல்வி கண்டுள்ளது. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்கள் இன்றும் மெனிக்பாம் முகாமிலேயே வாழ்கின்றனர்.

சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கு பதிலாக வேறு இடங்களில் மக்களை மீள் குடியமர்த்தி தனிமைப்படுத்தி வைக்கிறது அரசு இந்த மக்கள் வாழ்ந்த இடங்களில் இராணுவம் முகாமிட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவம் மக்கள் குடியிருப்பு பிரதேசங்களை சுவீகரிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசு காணிகளை இராணுவத்துக்கு வழங்கி விட்டு மக்கள் காணிகளை விடுவிக்க வேண்டும்.

சர்வதேச நாடுகள் இலங்கை விடயத்தில் அத்துமீறிச் செயற்பட அரசின் நடவடிக்கைகளே பிரதான காரணமாகும்- என்றார். (ச)

# ஹிருனிகாவுக்கு கொலை மிரட்டல்



கொழும்பு,ஏப்.25
முல்லேரியா துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் கொல்லப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருனிகா பிரேமச்சந்திர, தமக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு அநாமதேய கொலை அச்சுறுத்தல் விடுக்கும் தொலைபேசி அழைப்பு ஒன்றுகிடைத்தாக பொலிஸில் முறையிட்டுள்ளார்.

ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் தம்மை கொலை செய்யத் திட் டம் உள்ளதாக அந்த தொலைபேசி குரல் கூறியதாக ஹிருனிகா தெரிவித்தார்.

தற்போது இடம்பெற்று வரும் விசாரணைகளின் அடிப்படையில் இது முதன் முறையாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். இந்த அச்சுறுத்தல் சிலவேளைகளில் உண்மையாகவும் இருக்கலாம். வாழ்க்கைக்கு இது பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கொலை அச்சுறுத்தல் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு,ஏப்.25
முல்லேரியாவில் கொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருனிகா பிரேமச்சந்திரவுக்கு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கொலை அச்சுறுத்தல் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

பாரத லக்ஷமன் கொலை வழக்கு நேற்று செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பாரத லக்ஷமன் பிரேமச்சந்திர சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி, வழக்கின் முக்கிய சாட்சியான ஹிருனிகா பிரேமச்சந்திரவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த துமிந்த சில்வா தரப்பு சட்டத்தரணி, குறித்த விடயம் கொலை வழக்குடன் தொடர்புபட்டதல்ல. அதனால் அது குறித்து உத்தரவுகள் எதனையும் பிறப்பிக்க நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என்று வாதிட்டார்.

எனினும் பாரத லக்ஷமன் கொலை வழக்கின் முக்கிய சாட்சியாளர் ஹிருனிகாவுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் குறித்து ஆராயுமாறு உத்தரவிட நீதிமன்றுக்கு அதிகாரம் உள்ளது என்று பாரத லக்ஷ மன் பிரேமச்சந்திர சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

இரண்டு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன டி அல் விஸ், இந்த கொலை அச்சுறுத்தல் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாரத லக்ஷமன் பிரேமச்சத்திரவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை உடனடியாக கைதுசெய்யுமாறு வலியுறுத்தி கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக அமைதியான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய பாரதலக்ஷமன் பிரேமச்சந்திரவின் உறவினர்களும், பிரதேச மக்களும் தமக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

# துறைமுகத்தை பயன்படுத்த நிறுவனங்கள் ஆர்வமில்லை

## அம்பாந்தோட்டையில் அரசுக்கு ஏமாற்றம்

கொழும்பு,ஏப்.25
அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறுவியுள்ள துறைமுகம், விமான நிலையம் ஆகியவற்றைப் பயன்படுத்த அனைத்துலக கப்பல் மற்றும் விமான நிறுவ னங்கள் ஆர்வம் காட்டாதது அரசுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகம் திறந்து வைக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாகியும் அங்கு குறிப்பிட்ட சில கப்பல்களே வந்துள்ளன.

துறைமுகத்தின் நுழைவாயிலில் காணப்பட்ட கற் பாறைகளை அகற்ற பல மில்லியன் டொலரை அரசு செலவிட்டபோதும், இங்கு போதிய கப்பல்கள் வராதது அரசுக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு கப்பல்களை அனுப்புமாறு பங்களாதேஷுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தியுள்ளது. வேறு பல நாடுகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக இறக்கப்பட்டு வந்த வாகனங்களை, அம்பாந்தோட்டை துறைமுகத்திலேயே இறங்க வேண்டும் என்று இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு வாகன இறக்குமதியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, அம்பாந்தோட்டையில் மத்தால என்ற இடத்தில் அமைக்கப்பட்டு வரும் இலங்கையின் இரண்டாவது விமான நிலையம் இந்த ஆண்டு இறுதியில் திறக்கப்படவுள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் 70 வீதம் முடிவடைந்துள்ளன. இந்த ஆண்டு இறுதியில் திறக்கப்படவுள்ள இந்த விமான நிலையத்துக்கு சேவையை ஆரம்பிப்பதில் அனைத்துலக விமான நிறுவனங்கள் ஆர்வம் காட்டவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தால அனைத்துலக விமான நிலையம் ஆகியவற்றுக்கு அரசு பல பில்லியன் டொலரை செலவழித்தபோதும், அவற்றின்மூலம் வருவாயை ஈட்ட முடியாது என்று பொருளாதார நிபுணர்கள் பலர் எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ச)

# களவாக இத்தாலி போக முயன்ற யாழ். இளைஞனுக்கு அபராதம்

கொழும்பு,ஏப்.25
போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட இளைஞர் ஒருவருக்கு நீர் கொழும்பு பிரதான நீதிவான் ஏ.எம்.என்.பி.அமரசிங்க ஒரு லட்சம் ரூபா அபராதமும் 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம்.முரளிதரன் என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

சந்தேகநபர் 2009 ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி இத்தாலி செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையம் வந்த போது இவரின் கடவுச் சீட்டை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பரிசீலித் தனர்.

அப்போது இந்தக் கடவுச்சீட்டு போலியானது என்பதைக் கண்டறிந்ததை அடுத்து குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு நீதிமன்றத்தால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச)

## விடுதலையாகி...



பொரளை, வனாதமுல்ல பிரதேசத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 21பேரை பிணையில் செல்ல கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ள தனால் அவர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளி யேறுகின்றனர்.

# அரசியல்வாதிகள் மீது பொலிஸ் விசாரணை

கொழும்பு,ஏப்.25
இரண்டு அமைச்சர்கள் , 20 பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராக பொலிஸ் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர், பிரதி அமைச் சர், மாகாணசபை தவிசாளர், பிரதேசபைத் தலைவர்கள் உள்ளிட்ட பலருக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவர்களுக்கு எதிராக கொலை, பாலியல் வன்முறை, கொள்ளை, சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், கப்பம் கோரல், லஞ்ச ஊழல் மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசியல் தலையீடுகளின்றி விசாரணைகளை முன்னெடுக்க முயற்சி எடுத்து வருவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (ச)

# மேர்வினை தொகுதி அமைப்பாளராக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## களனி பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.25
மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனி பிரதேச தொகுதி அமைப்பாளராக ஏற்றுக் கொள்ள முடியாது என்று களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.


அமைச்சருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுக்காற்று விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

எத்தனை கட்சி அலுவலகங்கள் அமைக்கப்பட்டாலும், அமைச்சர் மேர்வின் சில்வாவின் கீழ் வேலை செய்யமாட்டோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொகுதி அமைப்பாளராக அவரை ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சுயாதீனமாக சேவையாற்றுவோம் என்று அவர் கூறினார். அபிவிருத்தித் திட்டங்களின்போது மேர்வினுடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமில் உள்ள ஈழத்தமிழரை விடுவிக்க கோருகிறார் சீமான்



சென்னை, ஏப்.25

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் காவலில் வைக்கப் பட்டுள்ளவர்களை விடு தலை செய்ய நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் கோரிக்கை விடுத் துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில் தெரி வித்ததாவது:

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் சட்டத்துக்குப் புறம்பாகத் தடுத்து வைக் கப்பட்டுள்ள ஈழத்தமிழ்ச் சொந்தங்கள் 13 பேர், தங் களை விடுதலை செய்யக் கோரி மீண்டும் ஒரு முறை பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றோடு 9ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அவர்களில் பலரின் உடல் நிலை மிகவும் நலி வுற்றுள்ளது என்ற தகவல் கவலையை ஏற்படுத்து கிறது.

போரின்போது இலங் கைக்கு மண்ணெண்ணெய் கடத்தினார்கள், மருந்து கடத்தினார்கள், காயப்பட்ட வர்களைக் காப்பாற்ற குருதி கடத்தினார்கள் என்பது போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலும், விடுத லைப் புலிகள் இயக் கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஐயத்தி லுமே இவர்கள் பல ஆண்டு களாக செங்கல்பட்டி லுள்ள சிறையில், சிறப்பு முகாம் என்ற பெயரில் தடுத்து வைக் கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுக்கு எதிராக தமிழகப் பொலிஸார் தொடர்ந்த வழக்குகளை நீதிமன்ற விசா ரணைக்கு உட்படுத்த வில்லை. இதில் சிலர் நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட் டவர்கள். ஆனால், அதற்குப் பின்னரும் ஐயத்தின் பேரில் அவர்களைத் தடுத்து வைத் துள்ளது தமிழக பொலிஸ் துறை. இது எப்படி நியாய மாகும், சட்டபூர்வமான செயலாகும்?

இதுதவிர, குற்றஞ்சாட் டப்பட்ட வர்கள் நீதிமன்றம் சென்று பிணையில் செல்ல அல்லது விடுதலை உள் ளிட்ட சட்டரீதியான நிவார ணங்களைப் பெறக்கூட தமிழக பொலிஸாரின் கியூ பிரிவு அனுமதிக்க மறுக் கிறது. தங்களை விடுவிக் கக்கோரி ஒவ்வொரு முறை யும் இவர்கள் பட் டினிப் போராட்டம் நடத்தும்போது அவர்களோடு மாவட்ட நிர்வாகம் பேச்சு நடத்தி, விடுதலை செய்வது தொடர் பாக அரசுடன் பேசி முடி வெடுக்கிறோம் என்றுதான் உறுதியளிக்கிறது. அவர் களின் உறுதிமொழியை ஏற்று இவர்கள் பட்டினிப் போராட்டத்தைக் கைவிட் டுள்ளனர். ஆனால், அதன் பின்னர் அவர்களைக் கண்டு கொள்வதில்லை. அரசு நிர்வாகத்தின் இப்படிப்பட்ட பொறுப் பற்றபோக்குதான் இப்போது நடைபெற்று வரும் பட்டினிப் போராட்டத் துக்குக் காரணமாகும்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற் றம் ஏற்பட்டும், ஈழத்தமி ழர்கள் தொடர்பாக பொலி ஸாரின் பார்வையிலும், அணுகு முறையிலும் மட்டும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை- என்று அந்த அறிக்கையில் சீமான் குறிப்பிட்டுள்ளார். (வ)




ஆவரங்கால் ஸ்ரீபர்வதபத் தினி உடனுறை நடராஜ இராமலிங்க சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந் தன கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை காலை 8.10 மணி தொடக்கம் 9.05 மணி வரையான சுபநேரத்தில் இடம்பெறும். எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று ஆரம்பமாகியது. இன்றுடன் நிறைவு பெறும்.

* * *

மேலைப்புலோலி, வாணர் குடியிருப்பு, சொக்கன் வட்டி முத்துமாரி அம்மன் கோயில் சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடை பெறவுள்ளது. (வ-8)

* * *

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுாவமி கோயிலின் வருடாந்த திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும் இத் திருவிழாவில் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், எதிர் வரும் 5 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும்மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற வுள்ளது. (வ-13)

* * *

சுன்னாகம் ஸ்ரீ கதிர மலைச் சிவன் கோயிலின் புனராவர்த்தன 33 குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் நாளை பிற்பகல் 3 மணி வரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறும். (வ-13)

* * *

மானம்புலம் இருபாலை கிழக்கு கோப்பாய் வீரகத்தி விநாயகர் கோயிலின் வரு டாந்த பெருந்திருவிழா கடந்த 23 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபி ஷேகமும் திருவூஞ்சலும், சுவாமி வீதி உலாவும் நடை பெறும்.

(வ-13)

## சட்டவிரோத சிகரெட்டுடன் மூவர் கைது

துபாயிலிருந்து சட்ட விரோதமாக ஒரு தொகை சிகரெட்டுகளைக் கொண்டு வந்த மூவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் தில் கைது செய்யப்பட் டுள்ளனர்.

துபாயில் இருந்து நேற்று அதிகாலை 5.20 அளவில் இலங்கையை வந்தடைந்த இந்த நபர்களின் பயணப் பொதிகளுக்குள் இந்த சிக ரெட் தொகை கண்டுபிடிக் கப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவுத் திணைக் களம் தெரிவித்தது.

சுமார் 830 சிகரெட் காட் டூன்கள் கைப்பற்றப் பட் டுள்ளதுடன், அவை சுமார் 45 இலட்சம் ரூபா பெறுமதி யுடையவை என்று மதிப் பிடப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு மேலும் தெரிவிக்கின் றது. கொலன்னாவைப் பிர தேசத்தைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்களே கைது செய்யப்பட் டுள்ளனர்.

## கட்டுநாயக்காவில் 2 பெண்கள் கைது

நேற்றுமுன்தினம் அதி காலை நான்கு மணியளவில் போலிக் கடவுச்சீட்டுடன் வெளிநாடு செல்ல முயன்ற இருபத்தொரு வயதுடைய இரு இளம் பெண்கள் குடி வரவு - குடியகல்வு அதிகாரி கள் நடத்திய சோதனை யின்போது கைது செய்யபட்டு விசாரணைகளின் பின் நீர் கொழும்பு நீதிமன்றில் முன் னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக போலிக் கடவுசீட்டுடன் நாடுகடக்க முற்பட்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கபட்டுள்ளனர் என்று கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். (ந)

### உலகத் தொழிலாளருடன் மே தினம்

## தமிழருக்காக குரல் கொடுப்போம்

### பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை அறிவிப்பு

தொழிலாளர் தினமான மே 1 அனைத்து தொழிலா ளர்ளுடன் சேர்ந்து குரல் கொடுப்போம்- இவ்வாறு பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள் ளது.

இது குறித்து மேற்படி பேரவை விடுத்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழர்களின் கட்டுப் பாட்டில் தமிழீழம் இருந்த போது, புரட்சிகர மாற்றங் களை கண்டோம், தமிழர் பிர தேசங்களில் பொருளாதாரக் கட்டுப்பாடு இருந்தபோது தமிழர்கள் சகல பாதுகாப்பு டன், தன்னிறைவு கொண்ட வாழ்க்கையை வாழ்ந்தார்கள். தமிழீழத்தில் இடம்பெற்ற வாழ்வு மாற்றங்கள், வல்லரசு களின் உதவிகள் எவையும் இன்றி ஒரு புதிய உலகத்தை ஏற்படுத்த முடியும் என்பதை ஈழத் தமிழர்கள் வாழ்ந்து காட்டினார்கள்.

இந்தத் தன்னிறைவைத் தான் உலகம் அழித்துவிட்டது. தமிழர்கள் நாம் தலை சாய்ந் ததாகச் சரித்திரமில்லை. விழ விழ எழுந்தவர்கள் ஈழத் தமிழர்கள். இதைப் பிரான் ஸின் பரிஸ் நகரில் நடை பெறும் மே 1 தொழிலாளர் தின எழுச்சிப் பேரணியில் ஒன்று கூடி உலகத் தொழி லாள மக்களுடன் எங்கள் குரலைச் சேர்த்து ஒலித்து சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டுவோம்- இவ்வாறு மேலும் குறிப்பிடப்பட்டுள் ளது. (வ)

## வலி. தெற்கு நூல் தயாரிப்பு



வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் வலிகாமம் தெற்கு பிரதேசம் குறித்த நூல் ஒன்றை உருவாக் குவது தொடர்பான கலந்துரையாடல் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமை யில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் எழுத்தாளர்கள், கலைஞர்கள் வர்த்தகப் பிரமுகர்கள் கல்வியியலாளர்கள் உட்பட பொது மக்கள், கழகங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இவர்கள் நூலுக்கான ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்ததுடன் குழுவொன்றையும் அமைத்துள்ளனர். இதைவிட பிரதேச மட்டத்தில் மேலும் ஒரு குழுவை உபஅலுவலக ரீதியாக உருவாக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(வ-86)

## கோண்டாவில் பொது நூலகத்தின் புத்தக தினமும் பரிசில் வழங்கலும்



யாழ்ப்பாணம், ஏப்.25

கோண்டாவில் பொது நூலகத்தில் நூலக வலுவூட்டல் நிகழ்வை முன்னிட்டு உலக புத்தக தினமும் பரிசளிப்பு விழாவும் கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றன.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரண வநாதன் கலந்து கொண்டார்.

ஆரம்ப நிகழ்வாக வாசகர் வட்ட மாணவி ப.அம்பிகையால் ஆக்கப்பட்ட நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் [illegible] நூலினை யாழ்.பல்கலைக்கழக [illegible] உதவி நூலகர் கல்பனா சந்திரசேகரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கருணாலய சிறுவர் இல்ல மாணவர்களின் நாடகமும், நாராயண சன சமூக நிலையத்தினரின் "வாசிப்போம் நேசிப்போம்" எனும் தலைப்பிலான கவியரங் கமும், ஞானஸ்வ சன சமூக நிலைய முன் பள்ளி மாணவர்களின் நடன நிகழ்வும், உலக புத்தக தினத்தில் வெற்றி பெற்ற பேச்சுப் போட்டி யாளர்களின் பேச்சுக்களும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து உயர்தர மாண வர்களுக்கான பாடத் தெரிவு தொடர்பான கருத்துரைகளை எஸ்.மணிமாறன் வழங்கி [illegible] நிகழ்வுகளில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம-14)

## சிறுவலைத் தொழிலாளருக்கு கூ. சங்கம் உருவாக்கம்

குருநகர், ஏப்.25

குருநகரில் உள்ள குரு நகர் சிறகுவலை மீன்பிடித் தொழிலாளர் சங்கம், குரு நகர் சென்.ஜேம்ஸ் இழுவை றால் மடிச் சங்கம் ஆகிய வைகளின் உறுப்பினர்கள் இணைந்து குருநகர் பகுதி யில் மின்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் சிறுவலைத் தொழிலாளர்களுடைய மீன்பிடி உரிமையை உறுதி செய்யும் நோக்குடன் குரு நகர் - கிழக்கு சிறுகடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங் கம் எனும் அமைப்பை புதிதாக ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, கூட்டுற வுச் சங்கம் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு குருநகர் புனித கார்மேல் மாதா ஆலய மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின்போது உருவாக் கப்பட்டது.

இந்த பொதுக் கூட்டத் தில் இந்த இரு மீன்பிடிச் சங் கங்களைச் சேர்ந்த உறுப் பினர்களுடன் குருநகர் அறக் கொட்டியான் வலைத் தொழி லாளர்களும் சேர்ந்து சுமார் 65 பேர் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அமைப்பின்தலை வராக செ.கிறிஸ்துராசா, உப தலைவராக ஜே.அருள்சீலன், செயலாளராக செ.சத்திய சேகரன், உபசெயலாளராக ஜே.றொபின்சன் பொரு ளாளராக சி.அலிஸ்ரன் ஆகி யோரும் நிர்வாகசபை உறுப் பினர்களாக ஜே.அன்ரனி, எஸ்.றே மண்ட்,சிதவரட்ணம்,கே.பொயிற் ரர், ஜே.அம லதாஸ், வி.இம் மனுவல், எஸ்.றொபின்சன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

(வ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன்
# கும்பாபிஷேக சிறப்பு மலர் - 25-04-2012



### நித்திய அர்ச்சகரின் ஆசிச்செய்தி



அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று (25.04.2012) எம் பெருமானின் திருவருள் துணையுன் நடைபெறுகின்றது அவன் அருளாலே அவன்தாள் வணங்கி என்கிற மணிவாசகப் பெருமானின் திருவாக்கிற்கமைய எங்கள் மூதாதையர்களால் நித்திய நைமித்திய பூசைகள் காலா காலமாக நிறைவேற்றி வழிபட்டு வந்த திருத்தலம் இதுவாகும். தொடர்ந்தும் எமது வழித்தோன்றல்களால் இந்த ஆலயம் பராமரிக்கப்பட்டு வருவதோடு, காலந் தவறாது பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்று மிக விரைவாகக் குறுகிய காலத்தில் ஆலயப் புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி நிகழ்வினை தரிசிக்கின்ற பேறு யாவர்க்கும் கிடைத்திருக்கின்றது. இக் கும்பாபிஷேகம் காணும் திருவருட் பாக்கியம் எமக்குக் கிடைத்திருக்கின்றது. இப்புனித கிரியையின் மூலம் எமது நாட்டில் புரையோடிப்போயுள்ள துன்ப துயரங்கள் எல்லாம் நீங்கி சாந்தியும் சமாதான சகவாழ்வும் கிடைக்கவேண்டுமென எல்லாம் வல்ல அருள் மிகு அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மனின் பாதக்கமலங்களைப் பணிகின்றோம்.

உரிமைப் பூசகர் ஐயாத்துரை நாகராசா,
நித்திய அர்ச்சகர், சிவஸ்ரீ இ. சண்முகநாதன் ஐயர்.

### அனைவருக்கும் அருள் தருவாள் முத்துமாரி அம்பாள்
### ஆசார்ய சங்கராசார்ய சந்துமே ஜன்ம ஜன்மனி



ஈழ தேசத்தில் யாழ்ப்பாணப் பகுதி அளவையூரில் தவளக்கிரி முத்துமாரியம்மன் என்னும் திருநாமம் பூண்டு தம்மை நாடியவர் நாடாதவர் என்ற பேதம் நீக்கி எல்லோருக்கும் அருள் ஆட்சி புரிந்து வரும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு ஆலய சீர்திருத்த வேலைகள் செய்து நிர்வாக சபையினரின் விடா முயற்சியினாலும் பக்தர்களின் நிதியுதவியுடனும் 25.04.2012 புதன்கிழமை மகா கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெறுவதையிட்டு நாம் மிகவும் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

காரணம் நாம் இலங்கையில் வாழ்ந்த காலங்களில் எனது தந்தையுடன் சிறுபிள்ளையாக வருவதுண்டு. அப்படி வந்து ஓடி ஆடி விளையாடிய அன்னையின் சந்நிதியில் அன்னைக்கு குடமுழுக்கு விழா செய்வதையிட்டு எல்லை இல்லா ஆனந்தம் மேலும் எனது பூர்வீகர்கள் சொக்கலிங்கக்குருக்கள், தற்பராநந்தக் குருக்கள், சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக்குருக்கள், நவரத்தினக்குருக்கள், செல்வரத்தினக்குருக்கள், வைரவநாதக்குருக்கள், ஈஸ்வரக்குருக்கள் போன்ற பெரியவர்கள் வழிபட்டு வந்த வந்து கொண்டிருக்கின்ற சான்றோர்கள் உள்ள இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு அடியேன் கைகளினால் குடமுழுக்கு செய்வதையிட்டு மிகவும் பெருமகிழ்வடைகிறோம். இவ்வாலயமும் ஊர் மக்களும் நிர்வாக உறுப்பினர்களும் பூசகர்களும் எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கர குருக்கள் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் மாசை சிஷ்யாள் ஜேர்மனி ஹம்.

### அடியவர்கள் மனம் கமழ அருள் தருவாள் முத்துமாரி அம்பிகை




அளவையம் பதியில் அமர்ந்து தன் அருட் கடாட்சத்தை அடியவர்க்கு அள்ளி அருளும் முத்துமாரி அம்பாள் மீண்டும் தொடங்கும் மிடுக்கெனப் புதுப் பொலிவுபெற்று கும்பாபிஷேகம் காணும் வேளையில் அன்னையின் புதுமைகளை அனுபவித்த அடியார் என்ற வகையில் ஆசியுரை வழங்கக் கிடைத்த வாய்ப்பிற்கு அவள் அடிதொழுது நிற்கின்றோம்.

காலங்காலமாய் வந்த பேரின்னல்களில் இருந்து தன் குழந்தைகளைக் காத்த முத்துமாரி அம்பாள் இனிவரும் காலங்களிலும் இயற்கைப் பேரழிவுகளில் இருந்தும் துன்பங்களில் இருந்தும் எல்லா ஜீவராசிகளையும் காத்து நிற்கக் கை கூப்பி வேண்டுகின்றேன். குடமுழுக்குப் பெற்றுக் கும்பாபிஷேகம் காணும் அன்னையின் அருள் மழையில் அடியார் மனம் மகிழ அம்பாளின் ஆசி அடியார்களுக்குச் சேர வாழ்த்தி வணங்குகின்றேன்.

திருமதி மாலாதேவி மதிவதனன், கிராம உத்தியோகத்தர், பன்னாலை.

### தலைவரின் உள்ளத்திலிருந்து.........



அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரி அம்மன் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் சிறப்புற அமைய அம்பாளின் திருவருளை வேண்டி இக் கைங்கரியம் மிகவும் சிறப்புடன் நிறைவுற உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதோடு, அவர்களுக்கு அம்பாளின் பரிபூரணமான இறை அருள் கிட்டவும் மக்கள் அனைவரும் துன்ப துயரம் நீங்கி சகல வளங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ அம்பாளின் பாதார விந்தங்களை வணங்கி எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

க. நந்தகுமாரன், தலைவர், தவளக்கிரி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

### வாழ்த்துச் செய்தி



''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பதை உணர்ந்த அளவெட்டி தவளக்கிரி அம்பாள் ஆலயத்தைச் சார்ந்த சைவப்பெருமக்கள் இடர்களை தீர்க்கும் எம்பெருமாட்டியின் ஆலயத்தை புதுப்பொலிவுடன் திருப்பணிகளைச் செய்வதற்கு அடியேனை நிர்வாகத்தினர் பணித்தமையை இட்டு அம்பாளுக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு மேலும் இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எனது ஆசியை வழங்கி மேன்மேலும் அளவெட்டி சைவ அடியார்களுக்கு அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு இத்துடன் மனச் சஞ்சலத்துடன் இருக்கும் திருப்பணி சபையினருக்கு இன்றிலிருந்து தாயாரின் அருளால் மனச்சாந்தி கிடைக்கப்பெற்று தாயாரின் அரவணைப்பு கிடைக்கவேண்டி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

க.கோபாலசிங்கம்.

### தவளக்கிரி தாயே அனைவருக்கும் அருள் தாரீர்



அளவெட்டி வடக்கு, தவளக்கிரியில் அமர்ந்து தன் அருட்கடாட்சத்தை அனைவருக்கும் அள்ளி அருளும் முத்துமாரி அம்பாளுக்கு 1990ஆம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் பின் காலங்காலமாய் வந்த பேரின்னல்களால் கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருந்து 22 ஆண்டுகளின் பின் 25.04.2012 இன்று நடைபெற அம்பிகை அருள் பாலித்துள்ள வேளையில் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் என்ற வகையில் ஆசியுரை வழங்க கிடைத்த வாய்ப்பிற்கு அம்பிகையின் அடிதொழுது நிற்கின்றேன்.

2011 ஆம் ஆண்டு ஆலய மகோற்சவம் முடிவுற்று 10.07.2011 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஒரு வருடத்தில் அம்பிகை அடியார்கள், பரிபாலனசபையினர், தொண்டர் சபையினர் அகியோரின் பூரண ஒத்துழைப்புடன் பல புதிய திருப்பணிகள் செய்யப்பட்டு மிடுக்கென புதுப் பொலிவுடன் அமர்ந்து அருள்பாலிக்கும் அம்பாள் குடமுழுக்கும் பெற்று கும்பாபிஷேகம் காணும் இவ்வேளையில் அன்னையின் அருள் மழையில் அடியார்கள் சென்ற காலத்துன்பங்கள் நீங்கி புதுப்பொலிவுடன் வாழ அம்பிகையின் ஆசி வேண்டி வணங்குகிறேன்.

மா. கதிரமலைப்பிள்ளை, செயலாளர், ஆலய பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை:
முகாமையாளர்
SINGER Plus
யாழ்ப்பாணம்,ஸ்ரான்லி வீதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபாலை தெற்கு மக்களுடன் பொலிஸார் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.25

குற்றச் செயல்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இருபாலை தெற்கு ஆனந்தபுரம் கிராமத்தில் இடம்பெற்றது.

கோப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி விஜயரட்ண தலைமையிலான பொலிஸாருக்கும் ஆனந்தபுரம் கிராம மக்களுக்கும் இடையில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

குற்றச் செயல்கள் எவை, அவை எப்படியான சூழலில் ஏற்படுகின்றன, குற்றச் செயல்களுக்கான தண்டனை, குற்றச் செயல்களை எப்படிக் கட்டுப்படுத்தலாம் போன்ற விடயங்கள் தொடர்பாக பொது மக்களுடன் கலந்துரையாடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அந்தக் கிராமத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அந்த மக்களின் வாழ்விடங்கள் தொடர்பாகவும் பொலிஸார் அறிந்துள்ளனர். குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் இந்தக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். (ஒ-3)



## தந்தை செல்வா
## 35 ஆவது ஆண்டு நினைவு நாள்
## அஞ்சலியும் நினைவுரையும்

**காலம்:-** நாளை (26.04.2012) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணி

**இடம் :-** தந்தை செல்வா நினைவிடம் (தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்)

**தலைவர்:-** அருட்கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள் (தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு)

**நிகழ்ச்சி**

தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலை அணிவித்தலும் மலர் அஞ்சலி செலுத்தலும்

**வரவேற்புரை:-** திரு.பெ.கனகசபாபதி அவர்கள் (தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு உறுப்பினர்)

**அஞ்சலியுரை:-**

★ மௌலவி இப்றுஹீம் முஹம்மது பாஹிர் அவர்கள்
★ அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகள்
★ அருட்தந்தை எம்.வி.இ.இரவிச்சந்திரன் அடிகள்
★ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

**நினைவுரை:-** திரு.செல்லையா இராசதுரை அவர்கள் (மட்டக்களப்பு முன்னாள் நா.உ.)

**நன்றியுரை:-** பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள் (செயலாளர், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு)

தமிழ்த்தேசியத்தின் தந்தை அவர்களை நினைத்து இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு, யாழ்ப்பாணம்.

## Computer Express
### Institute Of Information Technology

- Diploma in Microsoft office — 3 Months
- Diploma in Desktop Publishing — 3 Months
- Diploma in Web page Designing — 3 Months
- Diploma in Graphic Designing — 3 Months
- Diploma in Hardware Engineering — 3 Months
- Diploma in Computerized Accounting — 3 Months
- Diploma in Computer Science — 4 Months
- Hon. Diploma in Computer Science — 4 Months
- Hon. Diploma in Programming — 3 Months
- AUTO CAD — 3 Months

**Advanced Diploma Courses**

- Advanced Dip. in Multimedia
- Advanced Dip. in Video Editing
- Advanced Dip. in Networking

100% செய்முறைப்பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Batch i - 25-04-2012
Batch ii - 27-04-2012
Batch iii - 28-04-2012
Batch iv - 29-04-2012

Time 9Am or 3PM

No.15, Sirambiyadi lane, off Stanley Road, Jaffna.(ஆரியகுளத்துச்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்) T.P No :- 021 222 8250, 077 722 2422, 077 490 7444

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகில் பலாலி வீதியில் புதிய வீடு வாடகைக்கு உண்டு. (கார் விடும் வசதியுடன்) தொடர்பு: 0776624396

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நீதிமன்றத்துக்கு மிக அருகில் ஆறு அறைகள் கொண்ட பெரிய வீடும், ஒரு சிறிய வீடும் வாடகைக்கு உண்டு. விவரங்களுக்கு:- 0773244568, 021 228 5306.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. வயதெல்லை இல்லை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 3765628

## வீடு வாடகைக்கு

இல.34, பலாலி வீதியில் (Farm School அருகில்) 5 Rooms, 3 Bath Rooms பெரிய வளவுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. NGO போன்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு:- 0779396656, 0718561252

## 46 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 06 ★ 10 ★ 1961

உதிர்வு 12 ★ 03 ★ 2012

### அமரர் உமாகுமாரி தவராஜசிங்கம்

(ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்)

12.03.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.04.2012) வியாழக் கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். பின்னர் இடம் பெறும் ஆத்மசாந்தி நிகழ்விலும், மதியபோசனத்திலும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவல்கலட்டி
கரணவாய்,
கரவெட்டி

தகவல்: குடும்பத்தினர்
அ. தவராஜசிங்கம் (கணவர்),
த. தேனுகா (மகள்), த. ஆர்த்திகா (மகள்)
த. திருபரன் (மகன்)

## KALAIMAGAL INTERNATIONAL COLLEGE KOKUVIL.

**2014 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உ/த) கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

[ஆங்கில மொழி மூலம் மட்டும்]

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கல்லூரியில் பெற்று சமர்ப்பிக்கவும்.



விண்ணப்பங்கள் 05.05.2012 இற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு:

**KALAIMAGAL INTERNATIONAL COLLEGE**

Church Lane, Kokuvil East, Kokuvil

T.P: 021 492 3238 Mob: 077 8834592.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1942.05.05

மறைவு 2012.03.26

### அமரர் சின்னக்குட்டி சுந்தரம்

அன்பின் உருவமே
அறிவின் சிகரமே
பண்பின் பிறப்பிடமே
பாசதீபமே
பாருலகோர் எல்லாம் போற்ற வாழ்ந்து – இன்று
காலனவன் கைகோர்த்து நகர்ந்ததெங்கே
நாள்கள் உருண்டோடி மாதமொன்றானதையா
எம் இதய அரங்கத்தில் உம் இனிய நாதம் ஒலிக்குதையா.
எம் குல தீபத்துக்கு எம் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கை யாக்குகிறோம்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் குளிர்பான நிலையம் ஒன்றுக்கு ஆள்கள் தேவை. சம்பளம் நாள் ஒன்றுக்கு 600/=. மதிய உணவும் வழங்கப்படும்.

தொடர்பு:077-8304922

## வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரிலுள்ள 'துளசி மாடம்' பான்சிக்கடைக்கு வேலையாள்கள் தேவை. இருபாலாரும் நேரில் வரவும்.

இல. 251, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## வாகனம் விற்பனைக்கு

மஸி பேர்குஸன்- மொடல் MF 135 தொடர் இல:NP JA XXXX உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
021 321 3534

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய், சந்தியில் சித்தன்கேணி வீதியில், சீரணி அம்மன் கோயில் எதிரில் 29.02 பேர்ச்சர்ஸ் காணி 4 அறைகளுடன் வீடு முற்றாக முடிக்கப்படாத நிலையில் உடனடி விற்பனைக்குண்டு.
Suitable For Stores OR Institution
தொடர்பு : 077 3257019, 077 6463843

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அல்ஷேசன், பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
நீர் இறைக்கும் இயந்திரம் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 4214 984, 077 666 0232

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 ஆம் ஆண்டு பிறந்த உதயத்துச் செவ்வாய் உள்ள, ஜேர்மனியில் குடியுரிமை பெற்ற மணமகனுக்கு வெளிநாட்டில் வசிக்கும் மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0772823066


# நாகம் தீண்டிய இணுவில் பெண் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.25
தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த குடும்பப் பெண்ணை நாகம் தீண்டியதனால் சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இணுவிலில் நேற்றுப்பிற்பகல்இடம் பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவஞானம்ரஜனி(வயது-34) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். தோட்டத்தினுள் குவிக்கப்பட்டிருந்த கற்குவியலுக்குள் இருந்த நாகபாம்பே,அவரின் கையில் தீண்டியுள்ளது உடனடியாக அவர் அவசர சிகிச்சைப்பிரிவில்அனுமதிக்கப்பட்டார். (ஓ-4)


## வேலை ஆள்கள் உடன் தேவை

தனியார் ஸ்தாபனம் ஒன்றுக்கு வேலையாள்கள் உடன் தேவை.
★ மேற்பார்வையாளர் (ஆண்)
வயது 40-50 இற்கும் இடையில்
★ பொதி செய்வதற்கு (பெண்கள்)
★ துப்பரவு செய்வதற்கு (பெண்கள்)
தொடர்பு:
37/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 9516 077 6722056

## வீடு, காணி விற்பனைக்கு

சிவலிங்கப்புளியடி சந்தியில் 807, K.K.S Road இல் 3 பரப்பு காணியில் கல்வீடு, கிணறு மற்றும் சகல வசதியுடனும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விலை பேசித் தீர்மானிக்கலாம்
011-2362106,
0773-893953

## வேலை ஆள்கள் தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் உணவகத்துக்கு வேலை ஆள்கள் ஆண்,பெண் இருபாலாரும் தேவை:
★ ரீ மேக்கர் (ஆண்) ★ சப்பிளையர் (ஆண்)
★ சமையலாளர் (ஆண், பெண்)
★ உதவியாளர் (ஆண், பெண்)
தொடர்பு: தனுஷ் கபே
66, மணிக்கூட்டு கோபுர வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

Peon (பீயோன், அதாவது அலுவலக உதவியாளர்) - தற்காலிகம் கொழும்பு திசைகாட்டி கிளையில் பணியாற்றக்கூடியவர்கள் மாத்திரம் நேரில் வரவும். A/L சித்தி, அத்தோடு சிங்களம் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும். யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர். தங்குமிட வசதி தரப்படும்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்,
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


## யாழ். சிறையில் இரு கைதிகள் மோதல்

யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருக்கும் இருவருக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதனால் ஒருவர் தலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்றது. இருவரும் குளித்துக்கொண்டிருந்த போது அவர்கள் இடையே வாயத்தர்க்கம் ஏற்பட்டு ஒருவர் மற்றவரை கொட்டனினால் தாக்கியுள்ளார். இதனால் காயமடைந்தவர் யாழ். கொட்டடியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இருவரும் ஏற்கனவே வெவ்வேறு இடங்களில் கைகலப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் ஆவர்.

தாக்குதல்மேற்கொண்டநபரைப் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். சம்பவம் தொடர்பாக இருவருக்கு எதிராகவும் பிறிதொரு வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக பொலிஸார் தெரிவித்தார். (ஓ-4)

## இடி மின்னல் தாக்கி தென்னை, வைக்கோல் எரிந்து நாசம்

தென்மராட்சி,ஏப்.25
இடிமின்னல் தாக்கியதில் தென்னைமரங்களும் அவற்றின் கீழ் போடப்பட்டிருந்த வைக்கோல் குவியலும் தீப்பற்றி எரிந்தன. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு மந்துவில் கிழக்கு ஸ்ரீபாரதி வித்தியாலயத்துக்கு அருகில் இடம் பெற்றது. கிருஷ்ண பிள்ளை விஜயன் என்பவரின் வீட்டுக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த வைக்கோல் குவியலும்தென்னை மரங்களுமே எரிந்து நாசமாகின.

வடமராட்சி,தென்மராட்சிப் பிரதேசங்களில் நேற்றுப் பெய்த பெரும் மழைக்கு முன்னர் இடி மின்னல் நீண்ட நேரம் தொடர்ந்தன.
(ஏ-9)


## தனா பியூட்டி பெஷன்



புது வருட அன்பளிப்பாக தனது சேவைகள் அனைத்தும் 50 % விலைக் கழிவு, அனுமதிக்கட்டணம் 1800/= செலுத்தி 6 மாத வகுப்புக்கள், சான்றிதழ் உடன் இலவசம்.
கொழும்பு, யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை.
29.04.2012 வரை பதிவு
தொடர்பு: 0775098103 / 0777316453


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 • 10 • 1969



மறைவு
06 • 05 • 2011

அமரர்
### தம்பிப்பிள்ளை ஈஸ்வரன்
வல்வெட்டி (கனடா)

ஆண்டொன்று ஆனது எங்கள் ஈசனே அவனிவிட்டு நீங்கள் சென்று,
ஆறாத எம் துயரம் ஆறவில்லை எம்மை விட்டு,
சுற்றி எமைவந்து நீங்கள் சுழன்று இங்கு நின்றிடுவீர்
எத்தனை தான் இருந்தென்ன நீங்கள் இல்லா வேதனையை
நீக்கிவிட யாரும் இல்லை எங்கள் அன்பான ஈசனே
மறக்கமாட்டோம் எங்கள் உயிருள்ளவரை உங்களை,
அமர உலகில் நீங்கள் அமைதியாய் இருந்திடவே
ஆண்டவன் பாதங்களை அனுதினமும் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லமாவடி,
வல்வெட்டி.

நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி லோ. சரோஜினிதேவி அவர்களின்
பாசமிகு தாய்
### திருமதி பரமநாதர் அன்னம்மா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி!

பாடசாலைச் சமூகம்
யா/ கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை

## மரண அறிவித்தல்



### நமசிவாயம் முத்துச்சாமி
( ஓய்வு பெற்ற உபஅதிபர்
யா/வரணி மகாவித்தியாலயம்)

சரசாலை தெற்கு, சரசாலையைப் பிறப்பிடமாகவும், வரணி வடக்கு வரணியை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் முத்துச்சாமி நேற்றுமுன்தினம் (23.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் நிர்மலாதேவியின் அன்புக்கணவரும் தியாகேந்திரன் (பொறியியலாளர் - கனடா), ராதா, சுதாசினி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரகலாதனன் (ஆசிரியர் - வ/மாறாவிலுப்பை அ.த.க. பாடசாலை நெடுங்கேணி), கிருபானந்தன் (சேவையர் சுப்பிரின்டன், நெதர்லாந்து), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற Dr. விநாயகமூர்த்தி, குமாரதாசன் (முகாமையாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), கிருஷ்ணமூர்த்தி (பொறியியலாளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் திரிஷிகா, ஆஷிகா, அபிஷா (கனடா), அக்ஷிகா (கனடா), அனொக்ஷிகா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2012) புதன் கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி வடக்கு,
வரணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மணிவிழா நாயகிக்கு வாழ்த்துக்கள்



இராசகுலேந்திரன்
அவர்களின் இல்லத்தரசி
### ஜெகயோதி இராசகுலேந்திரன்
சாவகச்சேரி டிரிபேர்க் கல்லூரி ஆசிரியை
B.A (HONS)

இன்று (25.04.2012) புதன்கிழமை
தனது அறுபதாவது பிறந்த தினத்தைத்
தனது இல்லத்தில் கொண்டாடும் மணிவிழா
நாயகியை மீசாலை மாவடிப்பிள்ளையார்
அருளாசியுடன் சகல செல்வங்களும் பெற்று
என்றும் வித்தகியாக விளங்கவும்
நல்விருந்தோம்பும் நாயகியாக தரணி போற்ற
நீடூழி காலம் சீரும் சிறப்பாக வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
திரு. திருமதி அ.ஜெகநாதன் குடும்பம் (கனடா),
திரு. திருமதி அ.ஜெகதீஸ்வரன் குடும்பம் (கனடா),
திரு. திருமதி அ.ஜெகபாலேந்திரன் குடும்பம் (இந்தியா),
திரு. திருமதி அ.ஜெகசீலன் குடும்பம் (பிரான்ஸ்),
திரு. திருமதி அ.ஜெகதீசன் குடும்பம் (டென்மார்),
திரு. திருமதி அ.ஜெகறட்ஷன் குடும்பம் (லண்டன்),
திரு. திருமதி வி.ஜெகஜெயந்திமாலா (லண்டன்),
திரு. திருமதி த.ஜெகபூவறஞ்சிதம் (விடத்தற்பளை),
திரு. திருமதி ஸ்ரீ ஜெகதா (விடத்தற்பளை),
திரு. திருமதி ஜெகதாரணி (உசன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காளர் பெயர்ப் பட்டியலில்

# இரட்டைப் பதிவு குறித்து அறிவித்தும் நீக்காதோருக்கு எதிராக நடவடிக்கை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.25

இரட்டைப் பதிவு மேற்கொண்டவர்கள் தொடர்பில் அவர்களுக்கு அறிவித்தும் இதுவரையில் பதிவை நீக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

வாக்காளர் பெயர் பட்டியல் தயாரிக்கப்படுகின்ற போது ஒரே மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட முகவர்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த மாவட்டத்துக்குரிய தேர்தல் ஆணையாளரால் குறித்த வாக்காளர்களால் அறிவிக்கப்பட்டு அவர்களின் விருப்பத்துக்கு அமைய ஒரு முகவரியில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா? என்றுகணினி விசேட மென்பொருள் ஒன்றின் ஊடாக என்னால் ஆராயப்பட்டபோது 2 லட்சம் பேர் வரையில் இவ்வாறு இரட்டைப் பதிவு மேற்கொண்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு இரட்டைப் பதிவு மேற்கொண்டவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு வினவப்பட்டபோது அவர்களில் பெரும்பாலானோர் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் பதிவு செய்து கொள்வது சட்டரீதியற்றது என்று அறிந்திருக்கவில்லை என்று கூறியுள்ளனர்.


இன்னும் சிலர் திருமணம் செய்து தமது முன்னைய இடத்தை விட்டு அகன்றுள்ளபோதும் அவர்களது பெற்றோரினால் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

ஒரே பெயர்களைக் கொண்டவரும், ஒரே தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உடையவர்களும் இரண்டு வெவ்வேறு நபர்களாகவும் இணங்காணப்பட்டுள்ளனர்.

பெரும்பாலனவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பெயர்ப் பட்டியலை தாமே நிரப்பி, கையொப்பமிட்டு வேண்டுமென்றே இரட்டைப் பதிவு வாக்களிப்பு நோக்கத்துடனும் தமது தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் சட்ட ரீதியற்ற முறையில் பதிவுகளைச் செய்துள்ளனர்.

இது சட்டரீதியற்றது என என்னால் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டும் அவர்களில் பெரும்பாலானோர் போலியான தகவல்களை வழங்கினர். இவ்வாறானவர்கள் 500 பேர் வரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே இவ்வாறு இரட்டைப் பதிவைத் தொடர்ந்தும் பேண முயற்சிப்பார்களேயானால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஒ-5)

## கண்ணீர் அஞ்சலி



### வேலுப்பிள்ளை கோபாலு

திருச்செல்வத்தின் (திரு ஸ்ரூடியோ உரிமையாளர்) தந்தை வேலுப்பிள்ளை கோபாலு காலமானதையிட்டுக் கண்ணீர் மல்கி நிற்கின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கு எம் அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

KONICA COLOUR LAB,
உரிமையாளரும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கோபாலு



கச்சார் வெளி, பளையைப் பிறப்பிடமாகவும், லூர்து மாதா வீதி, தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கோபாலு நேற்று (24.04.2012) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.04.2012) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோரியடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தவராசா, திருச்செல்வம்,
திரு ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.

254, லூர்து மாதா வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

### திருமதி அற்புதமுத்து இராசதுரை



யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அற்புதமுத்து இராசதுரை (மரியாம்பிள்ளை) (காணிக்கைமுத்து) கடந்த (22.04.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தீயோ தங்கக்குட்டி தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற பாவிலு மரியம்பிள்ளையின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான தீயோ பத்திநாதன் (**Rest House Keepar Jaffna**) தீயோ அருள்ராசா, பேதுறுப்பிள்ளை, சின்னமணி ஆகியோரின் பாச மிகு சகோதரியும், மரியநாயகம் (**New Rest House Ownner**) பற்பம், அன்ரன் (பிரான்ஸ்), திருமதி தங்கராசா - வண்ணமணி (கனடா), யேசுதாசன் (பிரான்ஸ்), திருமதி சிங்கம் - வதனா ஆகியோரின் அன்புத்தாயும், திலகம், செல்லக்கிளி, அன்றூட் தங்கராசா, றஞ்சினி, சிங்கம் ஆகியோரின் அன்புமாமியும், தங்கன் மரினா, திருமதி றோய்மரியநீற்றா (லண்டன்), சுஜித்தா (ஆசிரியை முல்லை கலைமகள் வித்தியாலயம்), றேத்தா - ராஜா (லண்டன்), கொட்வின், ஜோன்எடிசன், அமுதினி, அஷ் வினி (பிரான்ஸ்), நிதர்சினி, அபிசினி (கனடா), ஜெனிபர் அசோர், அனோஸ்கா (பிரான்ஸ்), சுவர்ணா, நிதர்சனா, நியூசா, நியூசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். நிதுசா, அபிசா (லண்டன்) ஆகயோரின் நேசமிகுபூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி (25.04.2012) பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.நாவாந்துறை புனித பரலோக மாத ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி இராசசிங்கம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. மரியநாயகம்
(மகன்)

இல .40, 3 ஆம் குறுக்கு வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்

## இடி மின்னல் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.25

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் வடக்கு, வடமேற்கு, தெற்கு கரையோரங்களில் இடி மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும். எனவே இடி மின்னலால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தப்ப அவதானத்துடன் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்குக் கரையோர வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாகவே தாழமுக்க வலயம் நாட்டுக்கு அப்பால் நகர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் தற்காலிகமாக மழை, இடிமின்னல் போன்றன காணப்படும். கரையோரப் பிரதேசங்களில் இவற்றின் தாக்கம் அதிகமாக இருக்கலாம். எனவே கரையோர மக்கள் இடி மின்னலிலிருந்து ஏற்படும் இழப்புகளைத் தவிர்க்கும் நடவடிக்கையை கையாளலாம்.

நேற்றுப் பிற்பகல் 5.30 வரை 1.4 மில்லிமீற்றரில் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. என யாழ். திருநெல்வேலி வளிமண்டலத் திணைக்களவியல் அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். (த-4)

இலவச கணனி பயிற்சி வகுப்பு
வயது வேறுபாடின்றி மகளீர் மட்டும் பங்குபற்றலாம்
இலவச பாடக் குறிப்புகள்
பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் 27.04.2012 வெள்ளி காலை 10.30 மணிக்கு கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்
பெண் அலுவலகர் தேவை
கணனி பயிற்சி நிலையத்திற்கு பெண் அலுவலர் தேவை.
27.04.2012 வெள்ளி காலை 10 மணிக்கு நேரில் வரவும்
"[illegible]" கல்வி நிலையத்திற்கு
அருகாமையில் இராசபாத வீதி கோப்பாய்
மேலதிக விபரங்களுக்கு - 0756700198

## டிப்பர் தடம் புரண்டு நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 25

வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்த டிப்பர் வாகனம் தடம் புரண்டதனால் அதிலிருந்த 4 பேர் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தெல்லிப்பழை வீதியில் காசிப்பிள்ளையார் கோயிலை அண்மித்து நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

சம்பவ இடத்துக்குச் சென்ற தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சுன்னாகத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் இந்த நால்வரும் பணிபுரிந்து வருகின்றனர்.

தென்பகுதியைச் சேர்ந்தவர்களான ரி.எம்.சி.ஜனக (வயது-23), ஏ.எம்.புஸ்பகுமார (வயது-33), ஆர்.டீ.கே.இலங்க திங்க (வயது-26), கே.ஏ.பிரியந்த (வயது-32) ஆகியோரே காயமடைந்தனர். (த-4)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 10 . 07 . 1924



மறைவு: 26 . 03 . 2012

### திருமதி நாகம்மா சதாசிவம்

கடந்த 26.03.2012 அன்று சிவபதடைந்த எமது குடும்ப குல்விளக்கான அமரர் திருமதி நாகம்மா சதாசிவம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 25.04.2012 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து மரணச் சடங்கில் பங்குபற்றியோருக்கும் நேரிலும் தொலைபேசி உட்பட ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் வேறு பல வழிகளிலும் பல உதவிகள் புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இராசாத்தி வீதி,
மாதகல், யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

### அருட்சகோதரி றோஸ் புளோறன்ஸ் (H.F)

எமது நிறுவனத்தில் பணியாற்றும் சக ஊழியரான **திரு. யோகரட்ணம்** அவர்களின் சகோதரியும் திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரியுமான றோஸ் புளோறன்ஸ் அவர்கள் 22.04.2012 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அவர்களின் குடும்ப துயரில் நாமும் பங்கேற்று எமது அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

இயக்குநரும் பணியாளர்களும்,
கரித்தாஸ்-கியுடெக்,
யாழ்ப்பாணம்.

(6,10,14)

## மரண அறிவித்தல்



### திருமதி துஷியந்தி கிருபாகரன்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துஷியந்தி கிருபாகரன் (23.04.2012) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் திருச்செல்வம் - வள்ளிநாயகி (ஜேர்மனி) தம்பதியரின் அன்பு மகளும், சிவசுப்பிரமணியம் (குஞ்சர்) - வசந்தாதேவி (நீர்வேலி) தம்பதியரின் மருமகளும், கிருபாகரனின் (ஜேர்மன்) அன்பு மனைவியும், துகிர்தா, பிரகலாதன், தமிழேந்தி ஆகியோரின் அன்புத் தாயும், துசாந்தினி, துஸ்யந்தன் ஆகியோரின் சகோதரியும், மாலதி, சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சிவகுமார் (நீர்வேலி), வினோதா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலியும், பிரியங்கா, பிரசாந், பிரதிக்கா ஆகியோரின் மாமியும், சுவிர்தனின் (பிரான்ஸ்) பெரியதாயும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி (தச்சன்தோப்பு) மற்றும் சின்னம்மா (கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் சிவஞானம் (லண்டன்), அருமைநாயகம் (பிரான்ஸ), தங்கநாயகி ஆகியோரின் பெறாமகளும், நேசமணி, இராசம்மா, இராசாத்தியம்மா, கௌரி, சொக்கர் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2012) வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
ஜேர்மன் : 0049230585945.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும் தமிழர் பலத்தை நிலைநிறுத்துங்கள்

## சம்பந்தன் எம்.பி. வலியுறுத்து

திருகோணமலை,ஏப்.25

கடந்தகாலத் தேர்தல்களில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு அளித்த வாக்குப் பலத்தினால் நாம் இன்று சர்வதேச அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். இந்த ஆதரவை கிழக்கு மாகாணசபைத் தேர்தலி லும் தமிழ் மக்கள் அதிகரிக் கச் செய்து தமது பலத்தை நிலைநிறுத்த வேண்டும்- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித் தார். திருகோணமலை மாவட் டம், தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட் பட்ட மக்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

கிழக்கு மாகாண தமிழ் மக்கள் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள்; தமது உறவுளை இழந்தவர்கள். எனினும், எமது மக்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளனர். இது கடந்தகால தேர்தல் பெறுபேறுகளில் தெட்டத் தெளிவாகின்றது.

தமிழர்கள் எந்தத் தீர்வை ஏற்றுக்கொள்கின்றார்களோ அந்தத் தீர்வு முஸ்லிம் மக்களுக்கும் பயனுள்ளதாகத் தான் இருக்கும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சர்வதேச நாடுகள் இன்று நம் பக்கம் உள்ளன. எனவே, இலங்கை அரசு இனியும் எம்மை ஏமாற்றமுடியாது. தமிழருக்குரிய தீர்வை அரசு வழங்கியே ஆகவேண்டும்.

தமிழர்கள் தங்கள் தன்மானத்தை எந்தக் காரணமும் கொண்டும் விற்கமாட்டார்கள். அரசின் அற்ப சொற்ப சலுகைகளுக்கு ஒருபோதும் துணை போக மாட்டார்கள். இதனை அரசு விளங்கிக் கொள்ளவேண்டும் - என்றார்.

இந்த மக்கள் சந்திப்புகளில் சம்பந்தனுடன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்ததாவது:

இந்த மக்கள் சந்திப்புகளில் தமிழ், முஸ்லிம் மக்கள் பலர் கலந்துகொண்டனர். அவர்கள் தமது குறை நிறைகளை எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல இடங்களில் இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் எவ்வித நிவாரண உதவிகளுமின்றி கஷ்டத்தின் மத்தியில் வாழ்கின்றனர்.

### சிவசக்திபுரத்தில் 30 விதவைகள்

அதேவேளை, இந்தப் பகுதிகளில் போரால் கணவனை இழந்து விதவைகள் என்ற பெயரில் பெண்கள் பலர் வாழ்கின்றனர். குறிப்பாக தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிவசக்திபுர கிராமத்தில் மட்டும் முப்பது விதவைகள் தமது பிள்ளைகளுடன் வாழ்கின்றனர். போரால் கணவனை இழந்த தமக்கு எவ்வித நிவாரண உதவிகளும் வழங்கப்படுவதில்லை என்று அவர்கள் அழுதவாறு எம்மிடம் தெரிவித்தனர்.



இதனை நாம் அரசின் கவனத்திற்கு உடன்கொண்டு வரவுள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவேண்டியது அரசின் கடமையாகும். ஆனால், இந்த அரசு எமது மக்களைப் புறந்தள்ளி வைத்துள்ளது. இதை நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம். எமது மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-சி)

# மன்னார் அபிவிருத்திக்கு 53 மில். டொலர் ஒதுக்கீடு

வவுனியா, ஏப்.25

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கென நிகொட்டினால் இந்த வருடத்தில் 53.043 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகவலைத் தெரிவித்தார் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான நிக்கொட்டின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.கிருபா சுதன்.

இந்த நிதியின் மூலம் மாந்தை முசலி, மடு ஆகிய பகுதிகளில் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் பல வேலைகள் நிறைவடைந்துள்ளன. ஏனைய வேலைகள் நிறைவுறும் கட்டத்தை நெருங்கியுள்ளன.

**மாந்தை முசலி, மடு ஆகிய பகுதிகளில் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் பல வேலைகள் நிறைவடைந்துள்ளன. ஏனைய வேலைகள் நிறைவுறும் கட்டத்தை நெருங்கியுள்ளன.**

மன்னார் மாவட்ட சுகாதார வசதிகளை மேற்கொள்வதற்கு 3.92 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

கல்வி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ள 26.014 மில்லியன் ரூபா பணத்தில் முசலி மகாவித்தியாலய ஆசிரியர் விடுதி, மடுக் கல்வி வலய அலுவலகம், வேப்பங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வகுப்பறைத் தொகுதி, காக்கையன்குளம் வித்தியாலய வகுப்பறைக் கட்டடம் என்பனவற்றைப் புனர் நிர்மாணம் செய்யும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

சமூக கிராமிய அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ள 19.749 மில்லியன் ரூபாவில் சிலாவத்தைத் துறை வேப்பங்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், மாந்தை தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராமிய வங்கி ஆகியவற்றின் கட்டடங்கள், முசலிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மறிச்சுக்கட்டி, மடுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்மடு, காக்கையன் குளம், பெரியமடு ஆகிய இடங்களில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப்படுகின்றன. அத்தோடு இந்நிதியின் மூலம் மாந்தை மேற்குப் பகுதியிலுள்ள இலுப்பைக் கடவை பொது நூலகமும் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதைப்போன்று கைத்தொழில் விருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 3.36 மில்லியன் ரூபா நிதியின் மூலம் முசலி, மடு, மாந்தை மேற்குப் பிரதேச செயலகங்களின் தளபாடங்கள், உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-400)

# கிழக்கு மாகாண காணிப் பிரச்சினையை எழுத்துமூலம் முறைப்பாடு செய்யலாம்

திருகோணமலை, ஏப்.25

கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகளை எழுத்து மூலம் முறைப்பாடு செய்யுமாறு கிழக்கு மாகாண காணி ஆணையாளர் டி.டி. அனுரதர்மதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினையை விசாரணை செய்து அவற்றுக்கு ஒழுங்கு முறையான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு விசாரணைக்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

தனிநபர்கள், குழுக்கள் மற்றும் அமைப்புக்கள் ஆகியன அரச காணிகள் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இந்தக் குழுவுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்துக்கான முறைப்பாடுகள் செயலாளர், திருகோணமலை மாவட்ட காணிப்பிரச்சினை தொடர்பான விசாரனைக் குழு, காணி நிர்வாக திணைக் களம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் தெரி வித்தார். (ச-40)

# மன்னாரில் பாதிப்பை ஏற்படுத்தும் மணல் மற்றும் மண் அகழ்வு

மன்னார், ஏப்.25

மன்னாரிலுள்ள கடற்கரையோரங்களிலும், ஆற்றுப் பகுதிகளிலும் அதிகளவில் மணல் மற்றும் மண் என்பன அகழப்படுவதால் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் தோன்றியுள்ளன.

மன்னார்த் தீவுப் பகுதியிலுள்ள கடற்கரையோரங்கள், பனைக் காடுகள், பொது இடங்கள் போன்றவற்றிலும், பெரு நிலப்பரப்பிலுள்ள அருவி ஆறு, பாலியாற்றுப் பகுதிகளிலும் அதிகளவில் மணல் மற்றும் மண் என்பன அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.

இதனால் ஆற்று வெள்ளம் மற்றும் கடல் நீர் என்பவற்றால் மக்கள் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளதாக பொது அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது.

தற்போது மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மணல் மற்றும் மண் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் சட்ட விரோதமான வகையில் இவை அகழப்பட்டு வேறு இடங்களுக்குக் கடத்தப்படுகின்றன.

இதேவேளை தீவுப்பகுதிக்குள் வாழும் மக்கள் தமக்குத் தேவையான மணல் மற்றும் மண் என்பவற்றை வெளியிலிருந்து அதிகளவு பணம் கொடுத்து பெற வேண்டிய அவல நிலையிலுள்ளனர். (க-12)

# கிழக்கு மாகாண வைத்தியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.25

கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் வைத்தியர் கள் நேற்று நடத்தவிருந்த ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

தமக்கான 3 மாத தொலைபேசிக் கொடுப்பனவை வழங்கும்படி முன்வைத்த கோரிக்கையை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிறைவேற்றுவதாகக் கூறியதையடுத்து வேலை நிறுத்தப் பேராட்டம் கைவிடப்பட்டதாகக் கூறப்பட்டது.

திருகோணமலை, அம்பாறை, கல்முனை ஆகிய பிரதேசங்களில் இந்தப் போராட்டம் நடத்துவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பொதுச்செயலாளர் சண்டிக்க எப்பறிக்கடுவ தெரிவித்துள்ளார். கொடுப் பனவுப் பத்திரத்தைச் சமர்ப்பித்தவர்களுக்கு விரைவில் அவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதாக உறுதியளித்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# தென்னை மரம் முறிந்து வீழ்ந்து சகோதரர் இருவர் காயம்

மன்னார், ஏப்.25

மன்னார் தோட்ட வெளிச் சந்தியில் தென்னை மரம் முறிந்து வீழ்ந்ததில் அந்தப் பகுதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த சகோதரர்கள் இருவர் காயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

தோட்டவெளிக் கிராமத்தைச் சேர்ந்த சகோதரர்களான 30 வயதான கே.சுரேஸ், 28 வயதான கே.ரமேஸ் ஆகிய இரண்டு பேரும் மன்னாரில் இருந்து மோட்டார் சைக்கிளில் தோட்டவெளிக் கிராமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது சந்தியில் நின்ற தென்னை மரம் திடீரென முறிந்து அவர்கள் மீது வீழ்ந்துள்ளது.

இதனால் காயங்களுக்கு உள்ளான இருவரும் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தற்போது இருவரும் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (க-12)

# தட்டுவன்கொட்டி குடிதண்ணீர்ப் பிரச்சினை: விரைவில் தீர்வு வழங்கப்படுமென உறுதிமொழி

கிளிநொச்சி, ஏப்.25

கிளிநொச்சி தட்டுவன் கொட்டியில் நிலவி வரும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தட்டுவன் கொட்டிப் பிரதேசம் வருடம் முழுவதும் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர் கொள்ளும் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் கரைச்சிப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கடந்த சில தினங்களாகக் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறவில்லையென மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், பிரதேச சபையின் உபதலைவர் வடிவேல் நகுலேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர் பொன்னம்பலநாதன் ஆகியோர் சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

தமக்குத் தேவையான குடிதண்ணீர் இந்தப் பிரதேசத்திலோ அல்லது அயல் பகுதிகளிலோ இல்லை. இதனைப் பெறுவதாயின் சுமார் 11 கி.மீ தூரத்துக்கு அப்பால் செல்ல வேண்டும்.

தற்போது பிரதேச சபையால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அதைவிடப் பாடசாலைக்கும் உரிய நேரத்தில் குடிதண்ணீர் கிடைப்பதில்லை. இவ்வாறு பல்வேறு குறைகளையும் பிரதேச மக்கள் அவர்களிடம் சுட்டிக்காட்டினர்.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கான அமர்வு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் இந்தப் பிரதேசத்தின் குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

உரிய சபைத்தீர்மானம் எடுக்கப்பட்டு மறுநாள் புதன்கிழமையில் இருந்து ஒழுங்கான முறையில் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அங்கு சென்றவர்களால் உறுதிமொழி வழங்கப்பட்டது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் கடந்த சனியன்று வடமாகாண ரீதியில் வீதியோட்டம்

**10 மைல் கொண்ட இவ்வீதியோட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல வீர வீராங்கனைகள் பங்குகொண்டனர். இதில் ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் வவுனியா மாவட்டம் அதிக புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றது**

வவுனியா,ஏப்.25

வவுனியா வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஸ்ரீவ் பிறந்த தினத்தை முன்னிட்டு வடமாகாண ரீதியான வீதியோட்டநிகழ்வு கடந்த சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

வைரவப்புளியங்குளம் 7 ஆம் ஒழுங்கையில் ஆரம்பித்த இவ்வீதியோட்டம் குருமன் காடு- திருநாவற்குளம் வீதி வழியாக தாண்டிக்குளம் சந்திவரை சென்று ஏ-9 வீதியூடாக சென்று தோணிக்கல் ஆலடி வீதியால் குட்செட் வீதியூடாக வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நிறைவடைந்தது.

10 மைல் கொண்ட இந்த வீதியோட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல வீர வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

இதில் முதல் 10 இடங்களைப் பெற்ற வீர வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

**ஆண்கள்**

ரி.தேவராஜன் (முல்லைத்தீவு), ஆர்.சாந்தன் (வவுனியா), வி.லோகரதன் (கிளிநொச்சி), கே.நவநீதன் (வவுனியா), ஜெ.எம்.எஸ். என். குமார (வவுனியா), பி.நிமோக்(கிளிநொச்சி), கே.சதீஸ்குமார் (வவுனியா), ஈ.சசிகரன் (வவுனியா), கே.சமரரூபன் (வவுனியா), ஆர். புவீந்திரன் (வவுனியா)

இதில் வவுனியா மாவட்டம் 32 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்டம் 13 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

**பெண்கள்**

க.சாளினி (வவுனியா), கே.நேர்மதி (வவுனியா), எஸ்.கேமா (முல்லைத்தீவு), ஏ.விமலாதேவி (கிளிநொச்சி), எஸ்.நிகேயினா (வவுனியா), எஸ்.சஞ்சிகா (வவுனியா), ரி.சுதனலோஜினி (வவுனியா),ஆர்துபாளினி (முல்லைத்தீவு) ஜே.வினோஜா (வவுனியா), கே.கோகிலவாணி(வவுனியா).

இதில் வவுனியா மாவட்டம் 37 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தினைப் பெற்றுக் கொண்டதோடு, முல்லைத்தீவு மாவட்டம் 11 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இதேவேளை இப்போட்டியில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெற்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன. (ங-400)

# சாவகச்சேரியில் படையினரின் புத்தாண்டு விளையாட்டு போட்டி

சாவகச்சேரி,ஏப்.25

தமிழ்-சிங்கள புத்தாண்டு நிகழ்வையொட்டி 523 ஆவது படையணியின் ஏற்பாட்டில் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு சாவகச்சேரி நகர சபை விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக 52 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அனுர சுதசிங்க கலந்து கொண்டார். இந்த நிகழ்வின் போது விருந்தினர்கள் நகரசபை விளையாட்டு மைதான வாசலில் இருந்து மைதானத்தில் அமைக்கப்பட்ட மண்டபம் வரை நாவற்குழி மகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்பட்டனர். தேசியக் கொடி, இலங்கை ஒலிபரப்பபுக்கூட்டுத்தாபனத்தின் கொடி, சாவகச்சேரி வணிகர் கழகத்தின் கொடி என்பன ஏற்றப்பட்டு தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. மங்கல விளக்கேற்றலின் பின்னர் மைதானத்தில் பல்வேறுவகையான விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பமாகின.

மைதானத்தில் நிகழ்வுகளுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றமும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் மற்றும் மஞ்சி பிஸ்கற் நிறுவனமும் அனுசரணையை வழங்கியிருந்தன.

மைதான நிகழ்வுகளாக கிறிஸ்கம்பம் ஏறுதல் , பணிஸ் சாப்பிடுதல் , பாண் சாப்பிடுதல் ,தலையணைச் சண்டை, யானைக்கு கண் வைத்தல், முட்டி உடைத்தல், தேங்காய் துருவுதல் உட்பட வேடிக்கையான பல நிகழ்வுகள் இடம் பெற்றன. காலை 6 மணி தொடக்கம் மரதன் ஓட்டப் போட்டிகள்,ஆண்- பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகள் என்பனவும் நடைபெற்றன.

மரதன் ஓட்டப் போட்டிகளில்வென்றோர் விவரம்-

முதலாம் இடம்- பரமானந்தம் ஜெயானந்தன் (நவாலி )இரண்டாமிடம்- கனகசபை ஜெயக்குமார் (கெற்பேலி) மூன்றாமிடம் -கண்ணன் ஜெனிசன் (நெல்லியடி)

சைக்கிளோட்டப் போட்டியில் வென்றோர் விவரம்-

**ஆண்கள்பிரிவு**

முதலாமிடம்-எஸ்.ரவீந்திரன் (மறவன்புலோ), இரண்டாமிடம்-சுதர்சன் (மறவன்புலோ), மூன்றாமிடம்- ஐ.சோமசுந்தரம் (கைதடி மத்தி வளர்மதி)

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம் -வி.பத்மா, இரண்டாமிடம்- பிரேமிளா, மூன்றாமிடம் -கினிசா

இந்த நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் கணபதிப் பிள்ளை, 523 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வீரசூரியா, நகர கட்டளை அதிகாரி கேணல் கேமரத்ன, 523 ஆவது படையணி சிவில் அதிகாரி அபயவர்த்தன என்போரும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ங-131)

### ஊன்றுகோல் தடையல்ல



துணுக்காய் கல்வி வலயத்தில் மாற்று வலுவுடைய மாணவர்களுக்கான ஓட்டப் போட்டியில் மாணவர்கள் ஊன்றுகோலின் துணையோடு சிட்டாகப் பறக்கின்றனர். (ங-415)

## வர்ண விருதுகள் வழங்கும் நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகும் விளையாட்டு அவையும் இணைந்து நடத்தும் வர்ண விருது விழா 2012 இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் யாழ் .பல்கலைக்கழக விளையாட்டு அவைத் தலைவர் சி.கோபிநாத் தலைமையில் இடம் பெறவுள்ளது .

மேற்படி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ள உள்ளார் .

விளையாட்டுத் துறையில் தமது திறமைகளை வெளிப்படுத்திய100 மாணவ, மாணவிகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ங-23)

## இளைஞர் மன்ற புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.25

தேசிய இளைஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'இளமையின் புத்தாண்டான தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு விழா' நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும, மற்றும் பிரதி அமைச்சர் துமிந்த திஸநாயக்க ஆகியோர் கலந்துகொள்வர்.

இதன்போது காலை 7.30 மணியளவில் ஆண்,பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டி நிகழ்வும் அதனைத் தொடர்ந்து 7.40 மணிக்கு ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டியும் தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

மேற்படி புத்தாண்டு விழாவில் 1500 இளைஞர் யுவதிகள் பங்குகொள்ளவுள்ளனர் என்று தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமும் ஆகிய சட்டத்தரணி லலித் பியும் பெரேரா தெரிவித்துள்ளார். (ங-23)

# யாழ்.கல்வி வலய ஆண்களுக்கான பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள்

## 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் சாதித்த வீரர்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15,17,19 வயதுப் பிரிவு ஆண்கள் பெருவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலையின் பெயர் விவரம் வருமாறு:-

**19 வயதுப் பிரிவு எல்லே**

யாழ். மத்திய கல்லூரி- முதலாமிடம், புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம்- இரண்டாமிடம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி -மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு கபடி**

கொக்குவில் இந்துக் கல்லூரி -முதலாமிடம்,கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்- இரண்டாமிடம்

**19 வயதுப் பிரிவு கபடி**

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் -முதலாமிடம்,

**15 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்**

யாழ்.மத்திய கல்லூரி- முதலாமிடம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி - இரண்டாமிடம்,கொக்குவில் இந்துக் கல்லூரி- மூன்றாமிடம்.

**17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்**

நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் - முதலாமிடம்,யாழ். இந்துக் கல்லூரி-இரண்டாமிடம்,சென்.ஜோன்ஸ் கல்லூரி - மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்**

சென்.பற்றிக்ஸ் கல்லூரி- முதலாமிடம், சென்.ஜோன்ஸ் கல்லூரி - இரண்டாமிடம், உரும்பிராய் இந்துக் கல்லூரி- மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டம்**

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்- முதலாமிடம்,ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் -இரண்டாமிடம்,கோப்பாய் மகா வித்தியாலயம் -மூன்றாமிடம்.

**17 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டம்**

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் - முதலாமிடம்,ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்- இரண்டாமிடம்,புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி -மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டம்**

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி முதலாமிடம்,கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்- இரண்டாமிடம், சென். ஜோன்ஸ் கல்லூரி- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - முதலாமிடம்,யாழ். மத்திய கல்லூரி- இரண்டாமிடம்,கொக்குவில் இந்துக் கல்லூரி-மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு மென் பந்துப் துடுப்பாட்டம்**

யாழ். இந்துக் கல்லூரி- முதலாமிடம்,யாழ். மத்திய கல்லூரி- இரண்டாமிடம்,கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்-மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு மேசைப்பந்தாட்டம்**

யாழ். மத்திய கல்லூரி- முதலாமிடம், யாழ். இந்துக் கல்லூரி - இரண்டாமிடம், சென். ஜோன்ஸ் கல்லூரி -மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு மேசைப்பந்தாட்டம்**

யாழ். மத்திய கல்லூரி-முதலாமிடம்,யாழ்.இந்துக் கல்லூரி- இரண்டாமிடம், சென். ஜோன்ஸ் கல்லூரி- மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு சதுரங்கம்**

யாழ். இந்துக் கல்லூரி- முதலாமிடம், சென். ஜோன்ஸ் கல்லூரி-இரண்டாமிடம், கொக்குவில் இந்துக் கல்லூரி-மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு சதுரங்கம்**

யாழ்.இந்து கல்லூரி- முதலாமிடம், கொக்குவில் இந்துக் கல்லூரி-இரண்டாமிடம், சென். ஜோன்ஸ் கல்லூரி -மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு பூப்பந்தாட்டம்**

சென். ஜோன்ஸ் கல்லூரி - முதலாமிடம்,கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்-இரண்டாமிடம்,யாழ். இந்து கல்லூரி- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு பூப்பந்தாட்டம்**

சென். ஜோன்ஸ் கல்லூரி -முதலாமிடம்,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-இரண்டாமிடம்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி -மூன்றாமிடம்.

**15 வயதுப் பிரிவு கரம்**

சென். பற்றிக்ஸ் கல்லூரி -முதலாமிடம்,சென். ஜோன்ஸ் கல்லூரி -இரண்டாமிடம், யாழ். மத்திய கல்லூரி- மூன்றாமிடம்.

**19 வயதுப் பிரிவு கரம்**

சென். பற்றிக்ஸ் கல்லூரி - முதலாமிடம், சென். ஜோன்ஸ் கல்லூரி -இரண்டாமிடம்,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி- மூன்றாமிடம்.

**19வயதுப் பிரிவு ஹொக்கி**

சென். ஜோன்ஸ் கல்லூரி -முதலாமிடம், யாழ். மத்திய கல்லூரி- இரண்டாமிடம். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டையில் 'கோட்டை விட்ட' ராஜஸ்தான்





ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, தனது கோட்டையான ஜெய்ப்பூர் மண்ணில் முதல் முறையாக தோல்வி அடைந்தது. டீ வில்லியர்ஸ், டில்ஷானின் அதிரடி அரைச் சதம் கைகொடுக்க, பெங்களூர் அணி 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று, 'ஹட்றிக்' வெற்றியைப் பதிவு செய்தது.

ஜெய்ப்பூரில் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 30 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித்தலைவர் டிராவிட், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

ஆட்டம் தொடங்கும் முன்னர் உடல் நலம் பாதிக்கப்பட, பெங்களூர் அணியின்ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக கெய்ல் களமிறங்க முடியவில்லை.விராத்ஹோக்லி, டில்ஷான் இணைந்து சுமாரான தொடக்கம் கொடுத்தனர். பங்கஜ் சிங் பந்து பரிமாற்றத்தில் இரண்டு பவுண்டரிகள் அடித்த விராத் ஹோக்லி (16) அதிக நேரம் நீடிக்கவில்லை. அடுத்து வந்த மயான்க் அகர்வால் (15), ஹாக் பந்தில் வீழ்ந்தார். பின்னதாக களமிறங்கிய கெய்லும் (4), ஹாக் வலையில் சிக்கினார். இதையடுத்து 11.4 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 67 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

**'சூப்பர்' ஜோடி**

இதற்கு பின்னர் டில்ஷான், டீ வில்லியர்ஸ் சேர்ந்து மிரட்டினர். ராஜஸ்தான் பந்து வீச்சை சிதறடித்த இவர்கள் சிக்சர் மழை பொழிந்தனர். இருவரும் அரைச் சதம் கடந்து அசத்தினர். சந்திலா பந்துப் பரிமாற்றத்தில் டீ வில்லியர்ஸ் அடுத்தடுத்து இரண்டு சிக்சர்கள் அடித்தார். திரிவேதி பந்து பரிமாற்றத்தில் டீ வில்லியர்ஸ் இரண்டு சிக்சர்கள், பவுண்டரிகள் அடிக்க, ஓட்ட எண்ணிக்கை 'ஜெட்' வேகத்தில் பறந்தது. இவர்கள் நான்காவது இலக்குக்கு 50 பந்துகளில் 122 ஓட்டங்கள் சேர்த்தனர். பெங்களூர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 189 ஓட்டங்கள் குவித்தது. டில்ஷான் 76 (58 பந்தில், 10 பவுண்டரிகள், 1 சிக்சர்), டீ வில்லியர்ஸ் 59(23 பந்தில், 3 பவுண்டரிகள், 5 சிக்சர்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**அப்பன்னா அசத்தல்**

கடின இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு டிராவிட், ரஹானே சேர்ந்து அசத்தல் தொடக்கம் அளித்தனர். இவர்கள், வினய் குமார் பந்துப் பரிமாற்றத்தில் 3 பவுண்டரிகள் அடித்தனர். முதல் இலக்குக்கு 56 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், அப்பன்னா சுழலில் ரஹானே (13) வீழ்ந்தார். தொடர்ந்து மிரட்டிய அப்பன்னா தனது 3 ஆவது பந்து பரிமாற்றத்தில் ஓவேஸ் ஷா (10), கோஸ்வாமியை (1) வெளியேற்றி இரட்டை அடி கொடுத்தார். தனது அடுத்த பந்து பரிமாற்றத்தில் டிராவிட்டை (58) ஆட்டமிழக்கச் செய்த அப்பன்னா, ஆட்டத்தை பெங்களூர்ப் பக்கம் முழுமையாக கொண்டு வந்தார். ஹொட்ஜ் (10) ஏமாற்றினார். சகீர்கான் வேகத்தில் கூப்பர் (8) காலியானார். ராஜஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 143 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. ஸ்டூவர்ட் பின்னி (20) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**சரியான பதிலடி**

புனே, பஞ்சாப், ராஜஸ்தான் அணிகளை வரிசையாக வீழ்த்திய பெங்களூர் அணி 'ஹட்ரிக்' வெற்றியை பெற்றது. தவிர, முந்தைய ஆட்டத்தில் ராஜஸ்தானிடம் சந்தித்த தோல்விக்கும் பதிலடி கொடுத்தது. இந்த முறை தனது சொந்த ஊரான ஜெய்ப்பூரில் ஏற்கனவே பஞ்சாப், கொல்கத்தா, டெக்கானை வீழ்த்திய ராஜஸ்தான் அணி முதல் தோல்வியை பதிவு செய்தது.

**அதிவேக அரைச் சதம்**

21 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டினார் பெங்களூர் அணியின் டீ வில்லியர்ஸ். இதன் மூலம் இந்தத் தொடரில் அதிவேக அரைச் சதம் அடித்த இரண்டாவது வீரரானார். முதல் இடத்தில் ராஜஸ்தான் அணியின் ஓவேஸ் ஷா (19 பந்து, எதிர், பெங்களூர்) உள்ளார்.

**இது பெருந்தன்மை**

ஆட்டநாயகனாக பெங்களூர் வீரர் டீ வில்லியர்ஸ் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், இந்த விருதை நான்கு இலக்குகள் வீழ்த்திய சக வீரர் அப்பன்னாவிடம் வழங்கி மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். (5)

# தீவுகளிடம் திணறும் கங்காருகள்





மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சிறப்பான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாத ஆஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் திணறி வருகின்றது. டேவிட் வோணர், வொட்ஸன் இருவரும் கை கொடுக்க ஆஸ்திரேலிய அணி முதல் நாள் நிறைவில் 7 இலக்குகளை பறிகொடுத்து 212 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

மேற்கிந்தியதீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆஸ்திரேலிய அணி விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணியும் இரண்டாவது டெஸ்ட் சமநிலையில் நிறைவடைந்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நேற்று முன்தினம் திங்கட் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

எட் கோவன், டேவிட் வோணர் இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இரண்டாவது பந்துப் பரிமாற்றத்திலேயே எட் கோவனின் இலக்கை ராம்போல் கொய்து எடுத்தார். ஆரம்பமே ஆஸிக்கு சறுக்கலாக அமைந்தது. இருப்பினும் அதன் பின்னர் நிதானித்து ஆடத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோணர், வொட்ஸன் மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சாளர்களுக்கு எமனாகினர்.

வோணர் 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொடுத்த பிடியை அணித் தலைவர் சமி தவறவிட்டார். தொடர்ச்சியாக வோணருக்கு பல அதிஷ்டங்கள் வாய்த்துக் கொண்டிருந்தன. மேற்கிந்தியத்தீவுகளின் சரியான களத்தடுப்பு வியூகம் இல்லாத காரணத்தால் வோணரது வாய்ப்புக்கள் தவற விடப்பட்டுக் கொண்டிருந்தன. வோணர், ராம்போல் பந்து வீசிக் கொண்டிருந்த பொழுது, பந்து வீச்சாளர் பந்தை வீசி முடிக்க முன்னர் எல்லைக் கோட்டை விட்டு நகர்ந்ததற்காக உத்தியோக பூர்வமாக எச்சரிக்கப்பட்டார்.

வொட்ஸனும் மறு முனையில் சிறப்பாக ஆட இரண்டாவது இலக்குக்கு 83 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் வொட்ஸன் 41 ஓட்டங்களுடன் சமியின் பந்து வீச்சில் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து பொண்டிங் களமிறங்கினார். பல வாய்ப்புக்களைப் பெற்ற வோணர் றோச் பந்துப் பரிமாற்றத்தில் அடுத்தடுத்து பவுண்டரிகளை விளாசி தனது டெஸ்ட் முதலாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே வோணர் வெளியேற்றப்பட ஆஸியின் வீழ்ச்சி ஆரம்பமானது. சிலிங் போர்ட் சுழலில் ஆஸி. வீரர்கள் பவிலியன் திரும்பினர். பொண்டிங் 23, மைக்கல் கிளார்க் 24, மைக் மைக் ஹஸி 10, ஹரிஸ் 4 ஓட்டங்களுடன் சீரான இடைவெளியில் வெளியேற ஆஸ்திரேலிய அணி 169 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறியது.

இதன் பின்னர் மத்தியூ வேட், ஸ்ராக் ஜோடி முதல் நாள் ஆட்ட நிறைவு வரையில் களத்திலிருந்து ஆஸி. அணியை 200 ஓட்டங்களைக் கடக்கச் செய்தனர். முதல் நாள் ஆட்டநிறைவில் ஆஸ்திரேலிய அணி 90 பந்து பரிமாற்றங்களில் 212 ஓட்டங்களை 7 இலக்குகளை இழந்து பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் வேட் 22, ஸ்ராக் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். பந்து வீச்சில் சிலிங்போர்ட் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (5)

# ஜெகோவிச்சை வீழ்த்தினார் நாடல்



மொனாக்கோவில் இடம்பெற்றுவந்த மொன்ரி கார்லோ மாஸ்டர்ஸ் கிண்ண ரெனிஸ் தொடரில் உலகின் இரண்டாம் நிலை வீரரான ரபேல் நடால் - சம்பியன் பட்டம் வென்றுள்ளார். உலகின் முதல்நிலை வீரரான நொவாக் ஜெகோவிச்சை இறுதிப் போட்டியில் இலகுவாக வெற்றிகொண்டே அவர் இந்தப் பட்டத்தை தட்டிச் சென்றார்.

விறுவிறுப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்தப் போட்டியில் ரபேல் நடால் 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் இலகுவாக வெற்றி கொண்டார்.

இந்த வெற்றி ரபேல் நடாலின் வாழ்வில் பெறப்பட்ட 47 ஆவது சம்பியன் பட்டம் என்பதோடு, 20 ஆவது மாஸ்டர்ஸ் பட்டமுமாகும். அத்தோடு மொன்ரி கார்லோ தொடரில் அவர் 8 ஆவது முறையாகத் தொடர்ச்சியாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதைத் தவிர, இதுவரை ஜெகோவிச்சும் நடாலும் சந்தித்த இறுதி 7 தடவைகளும் ஜெகோவிச் வெற்றியைப் பெற்றிருந்த நிலையில், ரபேல் நடால் 8 ஆவது சந்தர்ப்பத்தில் தனது வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்த ரபேல் நடால், மொன்ரி கார்லோவிற்கு வரும் போது தான் நம்பமுடியாதளவு மகிழ்ச்சியுடன் காணப்படுவதாகவும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொடரை 8 தடவைகள் வெற்றிகொண்டமையை நம்பமுடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே நொவாக் ஜெகோவிச்சிடம் 7 தடவைகள் தோற்றிருந்த நிலையில், இந்தப் போட்டியிலும் தோல்வியடைந்திருந்தால் அது 8 ஆவது தோல்வியாக அமைந்திருக்கும், ஆனால் அது தன்னில் பெரியளவு வித்தியாசமான உணர்வுகளைத் தந்திருக்காது எனத் தெரிவித்த ரபேல் நடால், அவரை வெற்றிகொண்டமை குறித்து மிக மகிழ்ச்சியாக உணர்வதாகத் தெரிவித்தார்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளம் தராமல் ஏமாற்றிவிட்டார்கள்

பங்களாதேஷில் இடம் பெற்ற பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றிய பாகிஸ்தான் வீரர்களுக்கான பெரும்பகுதி ஊதியப்பணம் இன்னமும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வெளியாகியுள்ள தகவல்களின் அடிப்படையில் வீரர்களுக்கு 25 சதவீதமான ஊதியம் மாத்திரமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை உறுதிப்படுத்திய பாகி ஸ்தானின் சிரேஷ்ட வீரரொ ருவர், அணிகள் வழங்க வேண்டிய பணத்தில் 25 சதவீதம் மாத்திரம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய 75 சதவீதம் தொடர்பாக இன்னமும் உறுதியான நிலைப்பாடு எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தார். தங்களின் வாழ்க்கை பற்றிய கவலை தங்களுக்கு உள்ளதாகத் தெரிவித்த அந்த வீரர், பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு இது தொடர்பாக நினைவுபடுத்துவதைத் தவிர வேறெந்த வழியையும் அறிய முடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

பெப்ரவரி 29 ஆம் திகதி நிறைவடைந்த இந்தத் தொடரின் விதிகளின் படி அந்தத் தொடரில் பங்குபற்றிய வெளிநாட்டு வீரர்களுக்கான கொடுப்பனவு 40 நாட்களுக்குள் வழங்கி முடிக்கப்பட வேண்டும். தற்போது அந்த 40 நாட்களும் கடந்துள்ள நிலையில் அவர்களுக்கான ஊதியம் வழங்கப்படவில்லை. பங்களாதேஷ் பிறீமியர் லீக் ஒப்பந்தத்தில் அந்தந்த அணிகள் வீரர்களுக்குரிய ஊதியப்பணத்தை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததோடு, அதற்கான பொறுப்பை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்றுக் கொள்ளும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

வீரர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டுள்ள 25 சதவீத ஊதியமும் போட்டி முடிவுத் தருணத்தின் போது வெளிநாட்டு வீரர்களின் எதிர்ப்புக் காரணமாகவே வழங்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வீரர்கள் அனைவரும் இணைந்து இறுதிநேரத்தில் பங்களாதேஷ் பிறீமியர் லீக் ஏற்பாட்டாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்தே வழங்கப்பட்டுள்ள 25 சதவீதமும் வழங்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், ஊதியம் வழங்கப்படுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு அப்போது வருத்தம் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இடம் பெற்ற பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் ஏராளமான பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்றதுடன், 25,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 500,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வரையிலான பெறுமதியில் அவ்வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(5)

# உடற்பயிற்சிக் கூடம் நிறுவும் டோனி



இந்தியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உட்பட உலகின் பல நாடுகளில் 200 இற்கும் மேற்பட்ட உடற்பயிற்சிக் கூடங்களை தொடங்க இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் டோனி திட்டமிட்டுள்ளார்.

டோனி கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில் இந்திய அணியை சிறப்பாக வழிநடத்தி கிண்ணத்தை பெற்றுக் கொடுத்து புகழின் உச்சிக்கு சென்றவர்.

கிரிக்கெட் ஆடுகளத்தில் அணியின் நிலவரத்திற்கு ஏற்ப துடுப்பாட்டத்தில் கலக்கும் திறன் கொண்ட டோனிக்கு, இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர்.

இதனால் பிரபல நிறுவனங்களான ஏர்செல், கோத்ரேஜ், ரிபோக் உட்பட 25 நிறுவனங்களின் விளம்பரங்களில் தோன்றி கோடிக்கணக்கில் சம்பளம் பெற்று வருகிறார். இந்த நிலையில் டோனிக்கு அதிகம் ரசிகர்கள் உள்ள இந்தியா உட்பட பல நாடுகளில் சகல வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடங்களை அமைக்க டோனி திட்டமிட்டுள்ளார்.

இதற்காக ஸ்போர்ட்ஸ் ஃபிட் வேர்ல்டு பிரைவேட் லிமிடேட் என்ற நிறுவனத்தை தொடங்கியுள்ளார். இதற்காக வர்த்தக மேலாளர் அருண் பாண்டே என்பவருடன் கைகோர்த்து புதிய வர்த்தகத்தில் களமிறங்கியுள்ளார்.

இது குறித்து ரித்தி ஸ்போர்ட்ஸ் மேலாண்மை நிர்வாகி அருண் பாண்டே கூறியதாவது, வரும் மே மாதம் முதல்கட்டமாக 4 உடற்பயிற்சி கூடங்கள் தொடங்கப்படும். அதன்பின்பு டோனிக்கு அதிக ரசிகர்கள் உள்ள இந்தியா உட்பட உலகின் பல நாடுகளுக்கு உடற்பயிற்சிக் கூடங்கள் விரிவுப்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்திற்காக அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ.2,000 கோடி முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியை அளிக்க பல முன்னணி வங்கிகளும் முன் வந்துள்ளன. மேலும் பலத்தரப்பினரும் இந்தத் திட்டத்தில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அடுத்த மாதம் இந்தியாவில் முதல்கட்டமாக குர்கான், டெல்லி, சண்டிகர், பரீதாபாத் ஆகிய 4 இடங்களில் உடற்பயிற்சிக் கூடங்கள் தொடங்கப்பட்டு, ஸ்போர்ட்ஸ் ஃபிட் வேர்ல்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்படும் என்று தெரிவித்தார்.


## நேற்றுவரை....
## 16 குடும்பங்கள் ஆஸ்திரேலியா பயணமாகின.

எமது முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனத் தில் ஆலோசனைபெற்று 16 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் இதுவரையில் ஆஸ்திரேலியா பயணமாகியுள்ளனர்.

அவர்களுக்குக் குறைந்த கட்டணத் தங்குமிட வசதி, பகுதிநேரத் தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இன்னும் என்ன தாமதம்

5 வருட ஆஸ்திரேலியா குடும்ப விசாவுக்கு இன்றே நாடுங்கள்.

**THISAIKADDI (PVT) LTD.**
504, Hampton Street,
Malborne, Australlia. Land phone - 0061390437100

**திசைகாட்டி** (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக்காரியாலயம்
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2219016
கிளைகள் : இல. 115A , இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி, 021 2285544
இல. 22A , ரிரான்ஸ்போ ரிவேஸ், பம்பலப்பிட்டி 0112508443, 0756438553.

## பணியாளர் வெற்றிடம்

யாழ். மாவட்ட முன்னணி தளபாட உற்பத்தி நிறுவனத்துக்கு

01. வெல்டர் (அனுபவம் உள்ளவர்கள்)
02. வேலைத்தள பணியாளர் (ஆண் / பெண் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிலுநர்கள்)

★ பயிலுநர்களுக்கு 6 மாதகால பயிற்சி யின் போது ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு:

**EUT**
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
தொ.பே. 021 224 0110, 021 720 0857

## யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(With Practical Electronic)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - வரும் ஞாயிறு காலை 11 மணி

உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

## கணினி மலிவு விற்பனை

**Dual CORE IBM FULL SET - 31,750/=**
**FREE- WEBCAM / 4GB PENDRIVE / HEAD PHONE**
ஒருவருட உத்தரவாதம்
**LAPTOP, DIGITAL CAMERA, PHONE**
அனைத்துவகையான பொருள்களும் எம்மால் திருத்திக்கொடுக்கப்படும்.

**ST. ANTONY'S.COM**
187, K.K.S ROAD, JAFFNA.
(மின்சார நிலையவீதி எதிர்)
021-222-4865, 0750698608

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு
ஆரம்பம் 28.4.2012 சனிக்கிழமை

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் பயிற்சியில் சேரலாம்

| ஆங்கிலம் | பிரெஞ்ச் |
|---|---|
| பிரிவு 1 - காலை 9 - 10 | காலை 11 - 12 |
| பிரிவு 2 : மாலை 4 - 5 | வெறும் 25% கட்டணம் |
| கட்டணம் : ரூபா 3000/- | காலம் 1 – 3 மாதம் |

முதல் வகுப்பு இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456

## புதிய தாசன் கல்வி நிலையம்

ஜெற் மோட்டேஸ் அருகில்,
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**A/L 2014**

கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| பொருளியல் | தமிழ் |
| வரதராஜன் | க. ஜெசிந்தன் |
| வணிகக்கல்வி | இந் / சம. இந்/ நாக |
| முரளி | சுரேஸ் |
| கணக்கீடு | நாடக / அரங் |
| பகிரதன் | ரமேஸ் |
| அரசியல் | புவியியல் |
| பொன். சந்துரு | குமரன் |
| அளவையியல் | வரலாறு |
| E.S. பவன் | சுதன் |
| வணி/புள்ளி, பொது அறிவு | விவசாயம் |
| தவசேகர் | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம் – 30.04.2012 திங்கட்கிழமை
நேரம் : மாலை 3.45 மணி

## தவறிவிட்டது

VM 5334 எனும் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு உருத்திரபுரத்திலிருந்து, ஸ்கந்தபுரம், துணுக்காய் ஊடாக மல்லாவிக் கிடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - 0750415858

## கட்டடத்துடன் சேர்ந்த நிலம் விற்பனைக்கு உண்டு

ஆஸ்பத்திரி வீதியில், யாழ். போதனா வைத்தியசாலை புதிய வாசலுக்கு முன்பாக கட்டடத்துடன் சேர்ந்த நிலம் விற்பனைக்குண்டு.

விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0779603600

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 23,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

## முக்கிய அறிவித்தல்

MyWay இல் பணிபுரிந்த ஒரு ஊழியரினால் திருடப்பட்டு MyWay இன் நூற்றுக்கணக்கான Complete English புத்தகதொகுதிகள் கடைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், ஊடாக விற்பனை செய்யப்படுவதாக அறியப்படுகிறது. MyWay அலுவலகங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு இடத்திலும் எந்தவொரு நபரூடாகவும் இப்புத்தகம் விற்பனைசெய்யப்பட்டால் திருட்டுக்கு துணை போகாமல் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது MyWay அலுவலகத்துக்கோ அறியத்தரவும்

MyWay
182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
077 33 63 456

## Call Center Vacancy



★ இரவு நேரத்தில் பணிபுரியும் ஆண்கள் மட்டும்.
★ காப்புறுதி சம்பந்தமான அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
★ ஆங்கில புலமை அவசியமில்லை

ஆர்வமுடையவர்கள் சுயவிவரக் கோவையை நேரில்/ தபாலில்/ மின்னஞ்சலில் 28ஆம் திகதிக்கு முன்னர் சேர்ப்பிக்கவும்.

359, Kasthuriyar Road, Jaffna.
email: it@uthayan.com
T.P 0215672222


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org